
# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

AMUDHU




ஊற்று 2
துளி 12
SEPTEMBER 2000

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - செப்டம்பர் 2000 -30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

தினකරන් වාරමන්ජරී ( வாரமஞ்சரி ) THINAKARAN VAARAMANJARI

உங்கள் வாரமஞ்சரி பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள், அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...

தமிழ் பேசும் மக்களின் தேசியக் குரலான தினகரன் வாரமஞ்சரி வாசகர்களுக்குப் புதிய தரிசனங்களைத் தருவதில் தொடர்ந்தும் முன்னணியில் நிற்கின்றது.

வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்!

நிறைவுபெற்ற மனிதர்களாக வாழ்ந்திடுவோம்!!

வாழ்வதற்காகவே வாசிப்போம்!!!

கற்பவை கற்று களிப்புடன் வாழ்வோம்

தினகரன் வாரமஞ்சரி சுமந்து வரும் இனிமையான இலக்கியக் கட்டுரைகள், அதிரடி அரசியல் அலசல்கள், சிந்தை கவரும் சிறுகதைகள், தொடர்கதைகள், சினிமாச் செய்திகள். வைத்திய ஆலோசனைகள், ராசிபலன் மற்றும் மங்கையர், சிறார்களுக்குரிய அனைத்து அம்சங்களும் தேசிய ரீதியாக பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன.

# செந்தூரம்

தினகரன் வாரமஞ்சரியின் இலவச இணைப்பிதழ்

வயது, பால் வித்தியாசமின்றி உளமறிந்து சகலரையும் அரவணைத்துச் செல்லும் தொலைக்காட்சிக் கையேட்டுடனான ஒரு பல்சுவை விருந்து

சகல லேக்ஹவுஸ் முகவர்களிடமும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E. JOHNSON.(B.A)

அமுது

# அமுதக் கடலில்...


அமுத வாசல் .......... 2
மானுட மஹாகவி.......... 4
முன்னோரைப் போற்றி .......... 5
**நெற்றிக்கண்** .......... 6
வாசலைத் தாண்டிய கடிதம் .......... 7
**அரசியல்:**
கிழக்கில் தேர்தல் ரவுண்டப் .......... 8
**நேருக்கு நேர்:**
சோ, ஜெயகாந்தன் பேட்டிகள் .......... 12
சாதாரண மனித யுகத்தின் சிற்பி .......... 16
**சிறுகதை:**
உரசிப் போகும் மேகங்கள் .......... 20
**யோகாசனம்** .......... 22
**கவிதை:**
நீங்கள் தூவிய மலர்கள் .......... 25
வஞ்சம் தீர்த்த லஞ்சம் .......... 26
**சிறுகதை:**
என் மனைவி .......... 29
போலிக்கு இல்லை வேலி .......... 30
**சிறுகதை:**
வயதுக்கு வந்தவன் .......... 32
தமிழினத் தலைவனாகும் .......... 34
**விளையாட்டு:**
பதக்க வேட்டையில் 19 பேர் .......... 37
**சிறுகதை:**
என் கடன் பணி செய்து .......... 38
உலகம் கைக்குள் .......... 40
**சினிமா:**
அந்த நாள் ஞாபகங்கள் .......... 42
**மருத்துவம்:**
உணர்வு மருத்துவம் .......... 46
நூல் அறிமுகம் .......... 48


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.**


**ஆசிரியர், 'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

E-Mail: webmgr@sri.lanka.net




12 சாதாரண மனித யுகத்தின் சிற்பி



40 கவலை, டென்ஷன் திர...



30 தமிழினத் தலைவனாகும் கடத்தல்காரன்



42 கட்டிப்புடி கட்டிப்புடிடா நாயகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசபதி அறிவில் கடல் என்றால் இன்னொரு கடல் உருவாகக் கூடாதா?



அமுது மாதம் ஒரு முறை வராமல் வாரத்துக்கு ஒருமுறை வந்தாலும் அதனை வாசகர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள். அவ்வளவு சுவையுடன் வருகின்றது. குறுக்கெழுத்துப் போட்டி, கேள்வி பதில் சேர்த்தால் மேலும் நன்று.
**ஏ. எல். முஹம்மட் றஸ்மி**
**அட்டாளைச்சேனை.**

"தித்திக்கும் அமுது பதில்கள்" என்ற தலைப்பில் சமூக அவலம், சீர்திருத்தம், அறிவியல், உலகச் செய்தி, விளையாட்டரங்கு, வான் அதிசயங்கள் போன்றனவை மையமாக வைத்து நேயர்களின் கேள்விகளுக்கு அமுது பதில் தருமானால்....
**தர்மலிங்கம் சந்திரகுமார்**
**கொழும்பு -11.**

அமுது ஆக்கங்கள் யாவும் அருமையிலும் அருமை! வண்ணம், வடிவமைப்பு, சினிமா, நேர்காணல் அனைத்தும் அசத்துகின்றன. விலை சற்று அதிகம் என்றாலும் சொந்தமாகத்தான் வாங்கிப் படிப்பேன். 'நக்கீரன்' அம்சம்தான் எனக்குப் பிடிக்கவில்லை.
**கே. கரன்,**
**யாழ்ப்பாணம்.**

'கூடச்கூடப் பாண் படப்பட...' கட்டுரையில் 1952 முதல் 2000 ஜூன் வரை பாணின் விலைகளை அறியத் தந்தது. மேலும் 'நாயகன் போகும் இடம் நல்ல இடமாக இருக்கட்டும்' அர்ஜுனவின் கிரிக்கெட் வாழ்வு, இலங்கை அணிக்கு ஆற்றிய பணிகள் பற்றி விரிவாக விளக்கியது.
**ஏ. சீ. எம். முஸம்மில்,**
**குளியாப்பிட்டி.**

அமுதே! நீ சுமந்துவரும் செய்திகளை அறிவதற்கு ஒரு மாதமாக எதிர்பார்த்து, என் கண்கள் களைக்கும் நேரம் வந்தாய். மாதமொரு முறை வரும் சஞ்சிகையே! நீ காலமெல்லாம் வளமுடன் ஒளி வீசிவர வாழ்த்துக்கள்.
**ராஷீதா கே. கியாஸ்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

குறுக்கெழுத்து, பொது அறிவு வினாப் போட்டிகளைச் சேர்க்கவும். அரசியல் விமர்சனத்தில் தராசு போன்று நடுநிலையோடு எல்லாத் தவறுகளையும் சுட்டவும். நேரம் தவறாது வரவும்.
**சி. லவன்,**
**புன்னாலைக்கட்டுவன் தெற்கு.**

தமிழுக்கு அமுதென்று பெயர் ஆனால் அதைவிட 'அமுது' இனிமையானது. அர்த்தபுஷ்டியான கட்டுரைகள், அதிரடி அரசியல் அலசல்கள் என்பனவற்றை அள்ளிக் கொண்டு வருகின்றது.
**முஸ்தபா முஹம்மட் தாபித் - நண்பர்கள்**
**மருதமுனை-06.**

இலங்கையின் நடப்பியல் விவகாரங்களை அருஞ்சுவையுடன் தந்து கொண்டிருக்கிறீர்கள். "அமுது" தொடர்ந்து வெளிவர வேண்டும். உலகம் முழுவதும் ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட மக்களின் உயிர்நாடியாக விளங்க வேண்டும்.
**வர்ண. இளஞ்செழியன்,**
**பாரதி தமிழோசைக் கழகம்.**

அமுது மூன்றாவது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு வாழ்த்துகிறேன். சினிமா பகுதி மிக சூப்பர். சினிமா பகுதியை ஒரு கலக்கு கலக்க ஜோதிகாவின் படமும் விளக்கமும் தரவும்.
**இம்தியாஸ்,**
**ஓட்டமாவடி.**

'நல்லதோர் வீணை செய்தே...' பகுதி மிகவும் அருமை. குறித்த ஒரு விடயம் பற்றி அழகான தமிழில் ஆராய்ந்து அற்புதமாக விவாதித்து எழுதும் பாணி பாராட்டுக்குரியது. இப்போது போலவே எப்போதும் நேர்மை கொண்ட துணிச்சலோடு தடையின்றித் தொடர வாழ்த்துக்கள்.
**எஸ். அன்ரனிற்றா,**
**யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகையை நீண்ட நாட்களாக வாசிக்கிறேன். அநேக விடயங்கள் நன்றாகவே உள்ளன. சில விடயங்கள் ஏற்புடையதாக தெரியவில்லை. காலப்போக்கில் மாற்றங்கள் வரும் என எதிர்பார்க்கின்றோம்.
ஜுலை மாத அமுது இதழில் வெளிவந்த எஸ். சத்தியபுத்திரனின் வாசலைத்தாண்டிய கடிதம் வாசித்தேன். அவர் பேராசிரியர் கைலாசபதி மீது கொண்டுள்ள பெருமதிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும் நல்ல தமிழ் ஆற்றலும் இருக்கிறது. ஆனால் விமர்சனம் முழுமையாக ஏற்கக்கூடியதல்ல.

உண்மையில் பேராசிரியர் கைலாசபதி அறிவுக் கடல்தான். அது மறுப்புக்குரியதல்ல. ஆனால் பேராசிரியர் சிவத்தம்பியை கைலாசபதியுடன் ஒப்பிட்டமைக்கு கொடுக்கப்பட்ட சந்தன மரமும் செம்மணத்திகளும் என்ற விளக்கம் ஏற்கக் கூடியதொன்றல்ல. அது உலக நம்பிக்கைத்துவத்துக்கே முரணானதாகும்.
கைலாசபதி அறிவில் கடலாக இருந்தால் இன்னொரு கடல் உருவாக முடியாதா? பேராசிரியர் கைலாசபதியை உருவாக்கியதும் இந்த நாடுதான். கைலாசபதிக்கு மட்டும்தான் தமிழ்ப் புலமை உண்டெனில் அவரோடு தமிழ் சாகுமா? ஒருவனை மிஞ்சி இன்னொருவன் உருவாகத்தான் செய்கிறான். அந்த நம்பிக்கையில்தான் இந்த உலகம் இயங்குகிறது. நம்பிக்கையும் முயற்சியும் இருந்தால் அனுபவத்தினூடாக ஆயிரம் கைலாசபதிகள் உருவாக முடியும்.

மகாத்மா என்று காந்தியைக் கூறுவதன் மூலம் இன்னொரு மகாத்மா உருவாவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றோம் என்று அறிஞர்கள் சிலர் கூறியது நம்பிக்கை வெளிப்பாடுதான்.

ஒருவர் செய்கின்ற சில தவறுகளுக்காக அவரிடம் உள்ள நல்ல மதிக்கக்கூடிய விடயங்களை பாராட்டுவது சிறந்தது. எமக்கு பிழையென்று தோன்றும் விடயம் இன்னொருவனுக்குச் சரியாகத் தெரியும். இதன் மறுதலையும் உண்மைதான். சரி பிழைகளை சீர்தூக்கிப் பார்த்து கருத்துக்களை தெரிவித்தால் நன்று.

ஆசிரியர்களான நாம் இன்னுமொரு கைலாசபதியை உருவாக்க முயற்சிக்க வேண்டும். இங்கிலாந்தில் ஒரு ஐசாக் நியூட்டன் மட்டும் விஞ்ஞானியாக இருந்திருந்தால் விஞ்ஞானத் துறை வளர்ந்திருக்க முடியுமா? ஆம், உலகில் ஒருவனை விஞ்சி இன்னொருவன் பிறக்கத்தான் செய்கின்றான். அதனால்தான் டோல்டனின் அணுக்கொள்கைகள் கூடத் திருத்தி அமைக்கப்பட்டன.
**சி. சிவாகரன்**
**ஆசிரியர், வவுனியா.**

அரசியல் கட்டுரைகள் பல புதிய விஷயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டியது. தேர்தல் சமயத்தில் இப்படியான செய்திகள் வாயிலாக வாக்காளன் நிறைய சிந்தித்து செயல்படக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும். ஆனாலும் ஓட்டு வாங்கியவன் கோட்டு சூட்டுடன் கோட்டைக்குப் போக ஓட்டு போட்டவன் ஒதுங்க இடமில்லாமல் ஓட்டுப் போட்ட பாயில் இருக்கும் நிலை என்றுதான் மாறுமோ தெரியவில்லை சுவாமி.
**பாலா சங்குப்பிள்ளை,**
**அட்டன்.**

அரசியல், சினிமா, சிறுகதை விளையாட்டு என முழு அமுதின் 48 பக்கங்களும் சூப்பர்.
**புஹாரி எம். பஸ்மிர்,**
**மடவளை.**

இங்கு நடைபெறும் அந்தரங்கத்தை எல்லா மக்களும் தெரியப்படுத்துவதில் நீ வல்லமை பொருந்திய சாதனையாளன். வாழ்த்துக்கள்.
**எஸ். எம். எஸ். ஜமால்,**
**நிந்தவூர்.**

முன்னட்டை முதலாக முடிவுமட்டும்
முத்தான உன் அச்சை வெளிப்படுத்தி
அச்சாணி போன்ற பல புரட்சிகளை
அரசியலில் அமர்க்களமாய்த் தோற்றுவித்து!
சினிமாவை உன்னோடு சேர்த்து வைத்து
மறைந்தோரை எம் மனதில் நினைவூட்டி
கடல் போலப் பெருகி வரும் என் 'அமுதே'
நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.
**கே. வாசுகி, தெஹிவளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

# நல்லதோர் வீணை செய்தே....





விருப்பு...
எமது விருப்பை எப்படித் தெரிந்து கொள்கிறோம்?
எமது வெறுப்பைத் தெரிந்து கொள்வதிலிருந்துதான்!
இருட்டை வைத்தே வெளிச்சத்தை அறிந்து கொள்வது போல.
கசப்பிலிருந்தே இனிப்பை வேறுபடுத்தி அறிவது போல.
மௌனத்திலிருந்தே சத்தத்தை வித்தியாசப்படுத்தி நாம் புரிந்து கொள்வது போல... விருப்பை நாம் தேர்வு செய்து கொள்வது வெறுப்பை அறிந்து விலக்குவதினூடாகத்தான்!

சமய ஞானிகளைக் கேட்டால், விருப்பு வெறுப்பற்ற நிலையே மேலானது என்பார்கள். ஓடும் *செம்பொன்னும்* ஒக்கவே நோக்குதல் ஞானம் எனக் கொண்டாடப்படும். ஆனால், அது வாழ்க்கைக்குப் பிரயோசனப்படாது. வாழ்க்கையைத் துறந்தவர்களுக்குத்தான் அந்த நிலை. நமக்கு வாழ்வு முக்கியம். வாழ்வின் மீதான விருப்பு முக்கியம். வாழ்வின் மீதான விருப்புத்தான் நம்மை மரணத்திலிருந்து மீட்கும். வாழ்வின் மீதான விருப்புத்தான் அச்ச இருளை விரட்டும்.

வாழ்க்கை ஒரு பரிசு. அது குற்றமன்று. இந்த இயற்கை நமக்குத் தந்த மாபெரும் பரிசு. சும்மா கிடைத்த பரிசு. சும்மா கிடைத்ததால்தான் மதிப்புத் தெரியவில்லை. அதைப் பந்தாடிக் கொண்டிருக்கிறோம். ஹிட்லராக நடித்த சாப்ளின் பூமி வடிவ பலூனை உதைத்து விளையாடியது போல.

எல்லா மதங்களும் வாழ்வை மறுத்தே பேசுகின்றன. வாழ்க்கையை வெறுத்துச் செய்து கொள்ளும் சுயசித்திரவதையின் மூலம் மேலான பரலோக வாழ்வை அடைதல்... அதற்காக அன்பாக, அழகாக உள்ள வாழ்வம்சங்களை எல்லாம் வெறுத்தல் - நமக்கு விருப்பமான, நம் கனவாக இருக்கும் ஒரு வாழ்க்கையை உத்தேசித்து இன்றைய வாழ்க்கையைச் சிதைத்தல்.... என்பதே அவற்றின் வழி.

விருப்புகளை உதாசீனப்படுத்தி, எதிர்காலச் சந்ததியின் நல்வாழ்வுக்காக என்று நாமே வலிந்து நம்மைத் துன்பத்திற்குள்ளாக்கிக் கொள்வதும் இதுபோலத்தான். தமிழ் மன்னர்கள் போராடினார்கள், எல்லைகளை விஸ்தரித்தார்கள், கோயில்களைக் கட்டினார்கள், பிற இனத்தவரை, மதத்தவரைக் கொன்று குவித்தார்கள். எல்லாம் எதிர்கால சந்ததியின் நல்வாழ்வை உத்தேசித்தே என்று அவர்களும் சொல்ல விரும்பினார்கள். ஆனால், அதனாலெல்லாம் நாம் இன்று போர்களற்ற, நமக்குள் நாம் சமத்துவமான, நாம் எல்லோரும் ஒன்றுதான் என்ற வாழ்க்கையைப் பெற முடிந்ததா? இன்றைய நம் தேவைகளும் பிரச்சினைகளும் வேறாகி விட்டன. அதுபோலவே நாளைய தேவைகளும் பிரச்சினைகளும் வேறுமாதிரியானவைதான்.

நேற்றைய வாழ்வு நிழல். நாளைய வாழ்வு கனவு. இன்றைய வாழ்வுதான் நிஜம். இன்றைய வாழ்வை இனிமையாக்கிக் கொள்வதாக நம் விருப்பு அமையட்டும். எதிர்காலத்தை, நம்மைவிடப் புத்திசாலிகளாயிருக்கப் போகும் அந்த வருங்கால சந்ததியினர் தீர்மானித்துக் கொள்வார்கள். நமது விருப்பை நாம் நமக்காக நல்லபடி தீர்மானித்துக் கொள்வோம். அதுதான் நாம் எதிர்காலத்துக்கும் செய்யும் பேருதவி.



- ஆர்.

பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செப்டெம்பர் 11
மாபெரும் கவிஞன் சுப்பிரமணிய பாரதியின் நினைவு நாள். பாரதி தனது 38வது வயதில் மிக இளமையில் காலமானான். இன்று உலகம் போற்றும் இக்கவிஞனின் மரணச் சடங்கில் அன்று கலந்துகொண்டோர் இருபது பேர் மட்டுமே!

00 00 00

பாரதி இயற்கையைப் பாடினான்.
பழைமையையும் புதுமையையும் பாடினான்.
தெய்வங்களைப் பாடினான்.
சுதந்திர தாகத்தைப் பாடினான்.
ருஷ்ய பொதுவுடமைப் புரட்சியைப் பாடினான்
பெண் விடுதலையைப் பாடினான்.
காதலைப் பாடினான்.
தமிழர் ஒற்றுமையைப் பாடினான்.
சாதியத்தைச் சாடிப் பாடினான்.
தமிழைப் பாடினான்.
இந்திய நாட்டு ஒற்றுமையைப் பாடினான்.
உலகப் பொதுமையைப் பாடினான்.
அவன் பாடாத துறைகள் இல்லை எனலாம்.

00 00 00

பாரதி பற்றிய ஆய்வுகள் இன்று பட்டி தொட்டி எங்கும் நடக்கின்றது.

யானை பார்த்த குருடர்களாக ஒவ்வொருவர் ஒவ்வொரு கோணத்தில் தீர்ப்புக் கூறுகின்றனர்.

பக்திக் கவி, காதல் கவி, விடுதலைக் கவி, பொதுவுடைமைக் கவி, புதுமைக் கவி என்றெல்லாம் வரைவிலக்கணம் வகுக்கின்றனர்.
ஆனால் அவன் எல்லாவற்றையும் மானிட வாழ்வின் மேன்மைக்கு வலியுறுத்திய மகாகவி.
அதனாலேயே 38 வருட வாழ்வில் அவன் படைத்ததெல்லாம் அமரத்துவம் வாய்ந்தவையாய், அழியாப் புகழ் பெற்றவையாய் காலத்தை வென்று இன்றும் வாழ்கின்றன.

00 00 00

பாரதி மகாகவி மட்டுமா?
அவன் ஒரு சுதந்திர முரசு.
விடுதலை முழக்கப் பத்திரிகையாளன்.
தலைமறைவுப் போராளி.
சிறை சென்ற செம்மல்.
சனாதனத்துடன் சண்டமாருதம் செய்த பூணூல் அணிந்த புரட்சியாளன்.

இதனாலே அவன் வாழ்ந்த காலத்தில் மரபுக் கவி புனைந்த பண்டித வித்தகர்களால் வஞ்சனையாக தூசிக்கப்பட்டவன். அவன் வீழ்ந்த பின்னும் தமிழை உயிராக நேசித்த அவனை, திராவிட தேசிய தமிழ் வெறியர்கள் எட்டி உதைக்கத் தவறவில்லை.
ஆனால் அவன் மக்கள் மனங்களில் அன்றும், இன்றும், என்றும் வாழும் சிரஞ்சீவி.

00 00 00




இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பில் 40ம், 50ம், 60ம் தசாப்தங்களில் அவன் முடிசூடா மன்னனாக கொலுவிருந்தான். மக்கள் மனங்களிலும் அநீதிகளுக்கு எதிராக அனல் மூட்டும் அக்கினிக் குஞ்சாயிருந்தான்.
ஆனால் அவன் உயிராக நேசித்த தமிழ், தமிழ் வெறியாக மாறியபோது,
அவன் நேசித்த தேச விடுதலை, தேசிய வெறியானபோது,
அவனது மானிட நேயம், தனிமனித பாஸிசமானபோது,
அவன் நேசித்த இயற்கையும், காதலும், தெய்வங்களும் சுடுகாடாகவும், குரோதங்களாகவும், வெறும் கற்களாகவும் மாறிய போது....
அவனும் சிலையானான்.

ஆனால் தனி மனிதர்கள் அழிந்தாலும் மானிட சமூகம் அழியாது.

அந்த மானிடத்தின் நெஞ்சங்களில் அவன் நாமமும் அழியாது.

**பாரதியின் இறுதிநேர நிகழ்வுகள் சில பற்றி....**

- 1921ல் ஒரு மதம் பிடித்த யானை தாக்கியதால் நோய்வாய்ப்பட்டு செப்ரெம்பர் 11ம் திகதி தனது 38வது வயதில் பாரதியார் காலமானார்.

- அவர் இறக்கும்போது அருகில் இருந்தவர்கள் அவரது மிக நெருங்கிய நண்பர்களாக நீலகண்ட பிரமச்சாரி, பரலி சு. நல்லையப்பா, கி. லஷ்மண ஐயர் ஆகியோர்.

- மரணப் படுக்கையிலும் அவர் எழுதிய கவிதை மிகவும் உற்சாகமாகவே இருந்தது.

"காலா உன்னைச் சிறு புல்லென மதிக்கிறேன் - என்றன் காலருகே வாடா!
சற்றே உன்னை மிதிக்கிறேன்" என காலனுக்கே சவால் விட்டார்.

- இறக்கும்போது பாரதியார் 'சுதேச மித்திரன்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அப்பொழுது ஆப்கானிஸ்தானின் மன்னராகவிருந்த அமானுல்லா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை தீவிரமாக எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த காலம்.
"அமானுல்லாகானைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி நாளை ஆபிசுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்" இதுதான் பாரதியாரின் வாயிலிருந்து வந்த இறுதி வார்த்தை.

- பாரதியாரின் இறுதிக் கிரியைகள் கிருஷ்ணாம்பேட்டை மயானத்தில் நடைபெற்றன.

- தீயை விழுங்கியது தீ!

- தமிழ் கூறும் நல்லுலகம் பெற்றெடுத்த இந்த மாபெரும் உலகம் போற்றும் கவிஞனின் இறுதிக் கிரியைகளில் அன்று ஆக 20 பேர் மட்டுமே கலந்துகொண்டனர். அவர்களில் நீலகண்ட பிரமச்சாரி, வக்கீல் துரைசாமி ஐயர், ஹரிஹர சர்மா, வி. சக்கரைச்செட்டியார், சுரேந்திரநாத் ஆர்யா, மண்டபம் ஸ்ரீநிவாசச்சாரியார், கிருஷ்ணசாமி சர்மா என்போர் முக்கியமானவர்கள். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னோரைப் போற்றி...

உயிரினங்கள் அருகிவருவது சூழல் பாதிப்புக்களின் உச்சகட்டம் என்பதை 1992ம் ஆண்டு பிரேசில் ரியோ டீ ஜெனிரோ நகரில் நடைபெற்ற சூழல் மாநாட்டின் போதுதான் உலகம் உணரத் தலைப்பட்டது. சூழலின் பல்லினத்தன்மை தொடர்பான, உயிரினங்களின் பல்லினத் தன்மையைப் பாதுகாக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதும் இந்த மாநாட்டில்தான்.

இப்போது இந்த ஒப்பந்தத்திற்கு வயது 8. ஆனால் அந்த ஒப்பந்தத்திற்கேற்ப உலக மக்கள் நடந்து கொள்கிறார்களா என்பது ஆராய்ந்து பார்க்க வேண்டிய விஷயம்.



உலகில் ஒரு நாளைக்கு 100 வகைப் பிராணிகள் அருகிவருகின்றன. ஆனால் இதுவரை ஏற்படாத ஆபத்தொன்று இப்போது ஏற்பட ஆரம்பித்துள்ளது. **பிரைமேட்டா** அருகி வருவதுதான் அது.

மிருகங்களில் அளவில் உயரமான மிருகம் பிரைமேட்டாதான். சிம்பன்சி, உராங் உட்டான், குரங்கு, கொரில்லா போலவே மனிதனும் இந்த பிரைமேட்டா இனத்தில்தான் சேருகிறான்.

பிரைமேட்டாவுக்கே உரிய பிரத்தியேகமான பல அடையாளங்கள் உள்ளன. சொண்டு சிறுத்து முகம் தட்டையாக இருக்கும். விரல் நுனிகளில் தொட்டுணரும் தன்மை இருப்பதுடன் கூரான நகங்களுக்குப் பதிலாக தட்டையான நகங்கள்... மேலும் பிரைமேட்டா ஒரு தடவைக்கு ஒரு குட்டியைத்தான் ஈனும்.

இந்த அங்க அடையாளங்களைக் கொண்ட பிரைமேட்டாக்கள் 50 லட்ச வருடங்களாக வாழ்ந்து வருகின்றன.

இவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்துவிட்ட இவைகள் இன்று மறைந்துபோகும் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றன.

இது தொடர்பாக விழிப்பாக இருந்துவந்த சர்வதேச ஆய்வாளர்கள் பலர் கிழக்கு ஆபிரிக்காவின் கொரில்லாக்களில் தொடங்கி சுமாத்திராவிலுள்ள உராங் உட்டான் வரை பிரைமேட்டா வகைகள் பல இப்போது அருகிச் செல்கின்றது என்று தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அருகிவரும் பிரைமேட்டாக்கள் பற்றி இதுவரை அக்கறைப்படாதிருந்த சூழலியலாளர்கள், இதன் பிரதிபலன்களை இப்போதுதான் உணர்கின்றார்கள். இப்போது இவற்றின் சில வகைகளின் புகைப்படங்கள் கூட மனிதர்களிடம் இல்லை. இவைகள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்ட உருவங்களே இப்போது காணப்படுகின்றன.

சிலவேளை இவை உலகிலிருந்து முற்று முழுதாகவே அற்றுப் போயிருக்கலாம் என்ற ஐயமும் ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறு மறைந்துபோவது மனிதர்களை முக்கியமாக பாதிக்கின்றது. பொதுவாக சூழல் ஸ்திரத்தன்மை என்பது அந்தச் சூழலில் வாழும் உயிரினங்களின் தொகை சமச்சீரளவில் இருப்பதிலேயே தங்கியுள்ளது. அவைகளிடம் காணப்படும் சூழல் தொடர்புகள் நெருக்கமடைவதிலும் தங்கியுள்ளன.

இந்நிலையில் ஏதாவது ஒரு வகை உயிரினம் சூழலிலிருந்து மறையும்போது சூழலின் சமத்தன்மைக்கு பங்கம் ஏற்படுகின்றது.

மனிதர்களே சூழலிலிருந்து அதிக நன்மைகளும் பெற்றுக் கொள்கின்றனர். சூழலின் ஸ்திரத்தன்மை அற்றுப்போவது மனித வாழ்க்கையையே அதிகம் பாதிக்கிறது. எனவே உயிரினங்கள் அருகி வருவதை தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் மனிதர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அருகிச் செல்லும் உயிரினங்களின் மரபணுக்கள் எமக்கு மிகவும் பிரயோசனமளிக்கக் கூடியவை. இதுவரை மருந்தெதுவும் கண்டுபிடிக்கப்படாத எயிட்ஸ், புற்றுநோய் போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான மரபணுக்கள் இந்த உயிரினங்களுடனேயே மறைந்து போய்விடலாம்.

உயிரினங்களின் பரிணாமம் பற்றி மனிதர்கள் தெரிந்து கொள்ளாத விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

மேலும் பரிணாமக் கொள்கையில் மனிதன் புரிந்துகொள்ளாத சிக்கல்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இவற்றைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய அறிகுறிகள் இவ்வாறு அருகிச் செல்லும் உயிரினங்களிடம் எஞ்சியிருக்கலாம். இதுபற்றி நாம் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. அதற்குள் அந்த உயிரினங்கள் மண்ணிலிருந்து மறைந்து போவது எவ்வளவு துக்ககரமான விஷயம்.

இந்த ஆபத்து மனிதர்களுக்கும் ஏற்படலாம். பிரைமேட்டாக்கள் போல் அருகிப் போகாவிட்டாலும் மக்கள் தொகை பூமியில் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்திருப்பதால் மனிதன் கூட்டம் கூட்டமாக அழிந்து போகலாம்.

ஏனெனில் சூழல் மாசடைதல் போலவே அணுகுண்டு போன்றவற்றாலும் மனித இனம் அழிகிறது. அதனால் ஏனைய உயிரினங்களுக்கு கிடைக்கும் நல்லவிதமான மரணம்கூட மனிதனுக்குக் கிடைக்கப் போவதில்லை என்பது நிச்சயம்.

சூழல் மாற்றமடைவதால், பட்டினியாலும் வரட்சியாலும் குளிரினாலும் பாதிக்கப்படும் மனிதன் ஒரேயடியாகவே பூமியிலிருந்து மறைந்துபோகும் ஆபத்தையும் எதிர்நோக்கி இருக்கிறான் என்பது மனங்கொள்ளத்தக்கது.

பிற உயிரினங்களை ஆதரித்து ஊட்டி வளர்த்தால்தான் நம்மினமும் வாழும் என்பதே மனிதன் படித்துக்கொள்ள வேண்டிய சங்கதி.

- எம். எச். பீ. ஸமான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டுக்களல்ல, வாக்குகளே தீர்மானிப்பவை




நக்கீரன்

பதினோராவது பொதுத்தேர்தல் நாட்டுமக்களை நெருங்கிவந்து விட்டது. மக்கள் அதை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதே கேள்வி.

மிக முன்னேறிய சமூக அமைப்பில் சர்வசன வாக்குரிமை என்பது ஜனநாயகத்தின் அச்சாணியாகும்.

உலகில் சர்வசன வாக்குரிமையை முதலில் அமுலுக்குக் கொண்டுவந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

1948-ல் பிரிட்டனிடமிருந்து இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபோது நாம் எல்லோரும் இலங்கையர் என்ற எண்ணக் கருவே மேலோங்கி நின்றது.

காலனித்துவ எச்சசொச்சங்களை நீக்குவதற்கு எடுத்த முயற்சிகளின் போது பெரும்பான்மை இனத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதால் முதல் தேசிய பிளவு தோன்றியது.

சிங்களப் பெரும்பான்மை இனம் ஒரு பக்கமாயும் பாரம்பரிய தமிழர்-முஸ்லீம்கள், மலையகத் தமிழர் இன்னொரு பக்கமாகவும் நாடு பிளவுண்டது.

பாராளுமன்றச் சந்தர்ப்பவாதத்தின் ஏகபோக குழந்தையாக இருதரப்பாலும் இனவாதம் வளர்க்கப்பட்டது.

பெரும்பான்மை இனத் தலைமைகளின் இந்த வரலாற்றுத் தவறுகள் திருத்தப்பட்டு சிறுபான்மைத் தேசிய இனங்களையும் அரவணைத்துச் செல்வதற்குப் பதிலாக இனவாத யுத்தமாக மாற்றப்பட்டு நாடு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

மறுபக்கத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் தலைமையின் தொடர்ச்சியான பாராளுமன்ற சந்தர்ப்பவாத குறுகிய இனவாதப் போக்கும், பிற்போக்கான அரசியல் நிலைப்பாடும், தூரதிருஷ்டியற்ற நடவடிக்கைகளும் சிறுபான்மை இனங்கள் மத்தியிலும் பிளவுகளைத் தோற்றுவித்துள்ளது. வட கிழக்கு தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் என இவை பிளவுபட்டுள்ளன.

சுதந்திரத்திற்குப் பின் 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் (வட கிழக்கு தமிழர், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்)தலைவராகவர்ணிக்கப்பட்டார்எஸ். ஜே. வி. செல்வநாயகம். ஆனால் இன்றோ வடகிழக்குத் தமிழர்களின் ஒரு பிரிவின் தலைவராக பிரபாகரன் சுருங்கியுள்ளார்.

தமிழ் தேசியவிடுதலைக்கானயுத்தம் ஒன்றுபட்டிருந்த சிறுபான்மை இனங்களின் ஐக்கியத்தைச் சிதைத்துள்ளது.

தமிழினத்தின் தேசிய ஒற்றுமையைச் சிதைத்துள்ளது.

போராட்ட சக்திகளின் ஒற்றுமையைச் சிதைத்ததுமல்லாமல் அழித்தும் உள்ளது.

உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும், உலக அரங்கிலும் தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டிருந்த நட்புச் சக்திகளின் ஆதரவை சிதறடித்துள்ளது.

மக்கள் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறி வடகிழக்கிற்குள்ளும் வெளியிலும், உலக நாடுகளிலும் அகதிகளாகவே அலைகின்றனர்.

ஆயிரக்கணக்கான உயிரிழப்பு, கோடிக்கணக்கானசொத்தொழிப்பு,அங்கவீனம் என்பன ஏற்பட்டுள்ளன.

இலங்கையின் இரண்டாவது தேசிய இனமாக இருந்த தமிழ் மக்கள் யுத்தத்தின்பங்காளிகளாகமாற்றப்பட்டதன் மூலம் மூன்றாவது அல்லது நான்காவது இடத்திற்குத் தள்ளப்படும் நிலைக்கு வந்துள்ளனர்.

இருதரப்புமே வெற்றி பெற முடியாத இந்த யுத்தத்தில் ஆகக் கூடுதலாகப் பாதிக்கப்படப்போவது சிறுபான்மையான தமிழினத் தரப்பே.

எனவே வேட்டுக்களால் பிரச்சினைகளை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தீர்க்க முடியாது என நாம் அழுத்திக் கூறுகின்றோம்.

கடந்த சில வருடங்களின் உலக அனுபவங்களைப் பார்த்தால் கம்போடியா, சிம்பாப்வே, தென் ஆபிரிக்கா, பலஸ்தீனம், வட அயர்லாந்து, எரித்திரியா, கிழக்குதிமோர், மொசாம்பிக், அங்கோலா, நமீபியா இப்படியாக எல்லா நாடுகளிலும் வேட்டுக்கள் நிறுத்தப்பட்டு வாக்குகள் மூலமே பிரச்சினைகள் ஓரளவு தீர்க்கப்பட்டன. காஷ்மீர் பிரச்சினைக்கும் இத்தீர்வையே ஐ. நா. 40 ஆண்டுகளுக்கு முன் பரிந்துள்ளது.

எமது நாட்டிலும் கூட, சுதந்திரத்தின் போது வெறும் கொத்தடிமைகளாக இருந்த, 200 ஆண்டுகள் வரலாற்றைமட்டும் இந்த நாட்டில் கொண்ட மலையகத் தமிழ் மக்கள் இன்று ஒரு தேசிய இனமாக வளர்ந்து வருவதற்கு வேட்டுக்களல்ல வாக்குகளே வழி சமைத்தன.

பேரினவாதத்தலைமைகளுக்குதலை சாய்த்து உதிரிகளாக வெறும் கலாசார இனமாக இருந்த முஸ்லிம் மக்களும் வாக்குப் பலத்தின் மூலமே இன்று ஒரு தேசிய இன அந்தஸ்தை அடைந்துள்ளனர்.

எல்லோரும் வரலாற்றில் முன்னோக்கிச் செல்ல வடகிழக்குத் தமிழர்கள் மட்டும் இருந்த தேசிய இன அந்தஸ்தை இழந்து உலகம் முழுவதும் நாடோடிக் கூட்டமாக மாறியுள்ளனர்.

நாம் சரியான நேரத்தில் எடுத்த பிழையான முடிவுகளாலும் சரியான முடிவுகளைப் பிழையான நேரத்தில் எடுத்ததினாலும் இந்நிலைக்கு வந்துள்ளோம்.

இப்போதாவது தவறான வேட்டுப் பாதையை நிறுத்த மக்களின் வாக்குப் பலத்தால் சரியான முடிவை எடுக்க இத் தேர்தல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம்.

இப்பொழுது தேவைதேசியவிடுதலை யுத்தமல்ல, அழிந்து கொண்டிருக்கும் தேசியஇனஅந்தஸ்தைதிரும்பவும்நிலை நிறுத்துவதற்கான அரசியல் யுத்தமே! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசலைத் தாண்டிய கடிதங்கள்

அமுது ஜுலை இதழில் அமரர் அல்பிரட் துரையப்பா பற்றிய கட்டுரை படித்தேன். அந்தக் காலத்தை நினைத்தபோது, "தன்வினை தன்னைச் சுடும்" என்ற முதுமொழிதான் நினைவுக்கு வந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் 'உணர்ச்சிக் கவிஞர்' என அழைக்கப்படும் கவிஞர் காசி ஆனந்தனின் இரண்டு கவிதைகளை அனுப்புகிறேன். தயவுசெய்து பிரசுரிக்கவும். ஏனெனில் அப்பொழுது உணர்ச்சிப் பிரவாகத்தில் தவறிழைத்தவர்களில் நானும் ஒருவன்.

**துரோகப் பாடல் - 1**
**மக்கர், மானமில்லா அடிவருடி**

அக்கிராயன் குளத்தில் அரக்கர்களைக் குடியேற்றி
பொற்கழனித் தமிழர் பூமிதன்னைச் சுரண்ட
தக்க திட்டம் போட்ட அதிகார ஆட்சிக்கு
மக்கர் ஒருவர் மானமில்லா அடிவருடி
கொக்கரித்த கூச்சலும் கேட்டோமே!
சங்கரி சங்கரி சம்போ!
சங்கரி சங்கரி சம்போ!!

- கவிஞர் காசி ஆனந்தன்

இந்தக் கவிதை கவிஞர் காசி ஆனந்தனால் 1971 பிற்பகுதியில் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மகாநாட்டுக் கவியரங்கத்தில் படிக்கப்பட்டது.

அப்பொழுது இப்போதைய த.வி.கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி, கிளிநொச்சித் தொகுதியின் தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

1971 ஏப்ரல் கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட நூற்றுக்கான ஜே.வி.பி. உறுப்பினர்கள், கிளிநொச்சித்தொகுதியிலுள்ள அக்கிராயன்குளம் என்ற இடத்தில் பலத்த பாதுகாப்புடன் புனர்வாழ்வு முகாமொன்றில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த முகாம் அமைக்கப்பட்ட நிகழ்வை ஒரு சிங்களக் குடியேற்றமாக சித்தரித்து, அதற்கு ஆனந்தசங்கரியின் உடந்தையும் உண்டு என்ற உருவும் மெருகும் ஏற்றி பாடப்பட்டதே இக் கவிதை.

தவிரவும் கிளிநொச்சி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான தனி மாவட்டக் கோரிக்கையை ஆனந்தசங்கரி ஆதரித்துப் பேசியதால், அங்கு சிங்களக் குடியேற்றத்திற்கு திட்டமிடுகிறார் என்று, தமிழரசுக் கட்சியினரால் ஆனந்தசங்கரிக்கு துரோகிப் பட்டமும் சூட்டப்பட்டது.

தமிழர்களுக்கிடையே நிர்வாகப் பரவலாக்கலை பொய் பூச்சாண்டி காட்டி எதிர்த்தவர்கள் யார் என்பதையும், 'துரோகிகள்' பட்டியலுக்கு பிள்ளையார் சுழி போட்டவர்கள் யார் என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

**துரோகப் பாடல் - 2**
**ராகம் - அனுரா - கம்**

கன்னித் தமிழுக்கு கறை செய்யும்
மாற்றானை
யாழ்ப்பாண ஊருக்கு அழைத்து
உல்லாச விருந்து வைத்து
'ராகம் அனுரா கம்' என்றெல்லாம் பண்ணிசைத்து
சாராயம் கொடுத்து சதங்கைக்கால்
தமிழிச்சி ஒருத்தியையும் வாடிவீட்டுக்கனுப்பி
ஊரைக் கெடுத்து யாழ்ப்பாணம் என்னும்
உயர்ந்த பேரைக் கெடுத்த பெரியதுரை ஒருவருக்கு
காரைக் கொடுத்து கழுத்துமாலை கொடுத்த
சூரத் தமிழர் நாம், சுணைகெட்ட பெருமையுண்டு.
எம்மால் ஏன் முடியாது? எனக் கேட்ட நண்பர்களே!
எம்மால் முடியாது எனில் எப்படிக்காணும் முடியும்?
சில்வா எழுதும் அரசியல் சட்டம்
கிழித்து எறிந்து, செல்வா எழுதும்
அரசியல் சட்டம் கண்டே யாம் செத்துமடிவோம்!

- கவிஞர் காசி ஆனந்தன்

இந்தப் பாடலும் கவிஞர் காசி ஆனந்தனால் தமிழரசுக் கட்சி மாநாட்டில் படிக்கப்பட்டதே. அப்போதைய யாழ் மாநகர மேயராக இருந்த திரு. அல்பிரட் துரையப்பாவின் அழைப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வாலிப முன்னணியின் தேசிய அமைப்பாளர் திரு.அனுரா பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வந்து சுபாஸ் வாடிவீட்டில் தங்கியதையே இக்கவிதை கேவலமான முறையில் சித்தரித்துச் சொல்கின்றது.

1974ல் தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதங்கள் நடப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே "துரோகிகள்" புராணம் பாடத் தொடங்கிவிட்டனர் தமிழரசுக் கட்சியினர். 1970 பொதுத் தேர்தலில் மோசமான முறையில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோல்வியைத் தழுவிய அமிர்தலிங்கமும், கிளிநொச்சித் தொகுதியில் தோல்வியைத் தழுவிய ஆலாலசுந்தரமுமே துரோகக் குற்றச்சாட்டை ஆரம்பித்த மாவீரர்கள். (இருவரும் பின்னர் துரோகிகளாக சுட்டுக் கொல்லப்பட்டனர்).

ஆனால் 1965ல் ஐ.தே.க. ஆட்சியில் தமிழரசுக் கட்சியினர் அமைச்சர் பதவி பெற்றிருந்ததும் அக்காலத்தில் அமைச்சர்களை மாலையிட்டு, மாவிலை தோரணம் கட்டி வடக்கு கிழக்கில் வரவேற்றதும் துரோகமில்லை.!

பின்னர்1977ல் எதிர்க்கட்சி அந்தஸ்தில் இருந்து (கொல்வின் ஆர். டி.) "சில்வா எழுதிய அரசியல்சட்டத்தைக் கிழித்து எறிந்து" இன்றைய சர்வாதிகார அரசியல் சட்டத்தைக் கொண்டு வந்த ஜே. ஆர். ஜெயவர்தனவின் அரசுடன் சல்லாபம் செய்ததும் மந்திரிகளை வரவேற்றதும் துரோகமில்லை.

மாற்றுக் கட்சி மந்திரியை வரவேற்றால் அவன் துரோகி. அதையே தாம் செய்தால் தமிழினப் போராளி!

இவ்வாறு தான் துரோக நாடகம் ஆரம்பிக்கப்பட்டது.

கவிஞர் காசி ஆனந்தன் இன்று விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராக இந்தியாவில் வாழ்ந்து வருகின்றார். அவருக்கும் இன்று கூட்டணியினர் துரோகிகளே.

**ம. அகிலேஸ்வரன்**
**கொல்லன்கலட்டி, மாவிட்டபுரம்.**

ஜூலை மாத அமுதவாசல் மனோகுமாரின் கடிதம் குறித்து என் சில கருத்துக்களை பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன்.

மனோகுமார்! உங்கள் கடிதத்தை ஜுலை இதழில் வாசித்து விழித்துக்கொண்டேன். அந்தக் கடிதத்தில் நீங்கள் அமுதைப் பணம் கொடுத்து வாங்குவது, உங்கள் அறிவு ஒரு பக்கச் சார்பாக, நீதி நியாயம் எதுவும் இல்லாத ஒரு ஜடம் ஆகிவிடக்கூடாது என்பதற்காகவே எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். உங்களின் இந்த உயர் சிந்தனை பாராட்டப்பட வேண்டியது, வரவேற்கத்தக்கது. ஏனெனில் இங்கு பலருக்கு நீதி நியாயம் என்பவற்றின் அர்த்தமே வேறு. பலருக்கு பக்க சார்பான போக்கே உவப்பான வாழ்க்கை. இவற்றை ஒதுக்கி வாழ முயற்சிக்கும் உங்களின் அறிவு அற்புதமானதே. இவ்வகையில் நீங்கள் உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டது போல, கடவுள் அல்லாத - மனிதர் என்ற காரணத்தால் - புலிகள் தவறு செய்யாதவர்களாக இருக்க முடியாது என்பது உண்மையே.

புலிகள் முஸ்லிம்களை அவர்களின் உடமைகள் அனைத்தையும் சூறையாடி, வெறுங்கையராய், அவர்களின் பிறப்பு மண்ணை விட்டு அவசர அவசரமாக அவகாசமின்றி வெளியேற்றி, பள்ளிவாசல்களில் அவர்களைக் கொன்று குவித்து என்று தொடரும் முஸ்லிம் இனத்திற்கு எதிரான புலிகளின் செயற்பாடுகள் அவர்கள் மனிதர்கள் என்ற காரணத்தால் செய்யப்படக்கூடியவையே என்பது உங்களின் நியாயம். உங்கள் அறிவிற்குப் புரிந்திருந்தும் அமுது உட்பட பலரிற்கு ஏனோ புரியவில்லை. இதே செயற்பாடுகளை சிங்கள இனவாதிகள், தமிழர்கள் என அவர்களால் அறியப்பட்டவர்களிற்கு செய்ததெல்லாம் ஒரு சிறுபான்மை இனத்திற்கெதிரான அக்கிரமங்கள், கொடுமைகள் என்பது பாரபட்சமற்ற உங்கள் அறிவிற்கு எட்டியிருக்கின்றது. அமுது உட்பட பலர் இதனை உணரவில்லை.

புலிகளை யாருக்கு பிடிக்காது? தமிழர்கள் மட்டுமே மிகவும் சந்தோஷமாக, நிம்மதியாக இம் மண்ணின் பலாபலன்களை பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்ற சுயநலமற்ற சிந்தனை கொண்ட உங்களுக்கும் எனக்கும் அவர்களை பிடித்திருக்கின்றது. எனினும் முஸ்லிம்களுக்கும் இம்மண் உரியது. அவர்களும் இங்கு நிம்மதியாக வாழவேண்டும் என்ற சுயநலப் போக்குக் கொண்ட தேசத் துரோகிகளிற்கும் சமூக விரோதிகளிற்கும் புலிகளைப் பிடிக்காது. அவர்களின் அறிவு பாரபட்சமுள்ளது. உங்களின் அர்த்தம் பொதிந்த கடிதத்தில் அறிவுள்ள தமிழன் எவனும் புலிகளை ஒதுக்கிவிட முடியாது எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். ஆம். புலிகளை ஓரம்கட்டிய காரணத்தால் தேசத் துரோகிகளாகக் கணிக்கப்பட்டு புலிகளால் கொல்லப்பட்ட தமிழர் எல்லோரும் அறிவில்லாதவர்களே - ராஜினி திராணகம உட்பட - என்று வலியுறுத்தும் உங்களின் சிந்தனையை எண்ணி மீண்டும் ஒரு முறை வியக்கின்றேன்.

மனோகுமார்! புலிகளை விமர்சிப்பதை நிறுத்தும்படி அமுதை கோரியிருந்தீர்கள். 'பாரபட்சமற்ற' உங்கள் அறிவு, பாரபட்சமாக அமுதை நடந்து கொள்ளக் கேட்பது சரியல்ல. யாரும் உண்மை பேசுவதை, எழுதுவதை நாம் வரவேற்க வேண்டுமே அன்றி அதைக் கண்டித்தல் கூடாது. தவறுகள், தப்புக்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோது துணிச்சலாகத் தட்டிக் கேட்பவர்களை, சுட்டிக்காட்டுபவர்களை நாம் பாராட்ட வேண்டும். மனிதர் என்ற காரணத்தால் இதுவே எமக்கு அழகான பண்பாகும்.

**- எஸ். அனிற்றா, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல் கிழக்கில் ஒரு நேரடி ரவுண்டப்

**செந்தில்**

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கிழக்கு மாகாண மக்களின் நிலைப்பாடு மற்றும் அவர்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளுமுகமாக அப்பகுதிக்கு நேரடி விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தோம்.

அவ்வேளையில் பொதுமக்கள் சிலருடன் உரையாடிப் பெற்ற கருத்துக்களை வாசகர்களுக்கு இங்கே தருகிறோம்.

திரு. சிவராஜ் நடராஜா. இவர் ஒரு நகைக்கடை வியாபாரி. பல வருடங்களாக மட்டக்களப்பு நகரில் வசித்து வருகிறார்.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களைப் பொறுத்தவரை நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் ஒரு முக்கியமான-தொன்றாகும். ஏனெனில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இப்பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மக்களால் எவரும் முறையாகத் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

கொடிய யுத்தம் காரணமாக மக்கள் சிதறுண்டு செய்வதறியாது தமது சொந்த இருப்பிடங்களை விட்டு ஓடிவிட்டனர். இந்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட சிலர் கடந்த சில வருடங்களாக தமது சுயநலத்துடன் கூடிய அரசியலை நடத்தி வருகின்றனர்.



சிவராஜ் நடராஜா

**எமக்கு தீர்வுப் பொதி பற்றி கூட அவ்வளவு சிந்தனையில்லை. மக்களை உயிருடன் சுதந்திரமாக உலாவவிட்டதே பெரிய விடயம்.**

எனவே நடைபெறவிருக்கும் இத்தேர்தலில் அரசாங்கத்துடன் இணைந்து எமது பகுதி மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியவர்களை நாம் தெரிவுசெய்யவுள்ளோம்.

இன்றைய காலகட்டத்தில் தமிழ்க் கட்சிகளால் எதனையும் பெரிதாகச் சாதித்துவிட முடியாது என்பதனை மக்கள் கண்டுள்ளனர். எனவே அரசாங்கக் கட்சியில் நின்று அரசுக்கு எமது குறைகளை நேரடியாக எடுத்துக் கூறக் கூடிய பிரதிநிதிகளை நாம் தெரிவுசெய்யவுள்ளோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியை கிழக்கு மாகாண மக்கள் வரவேற்கிறார்கள். ஏனெனில் இப்பகுதியில் தற்போது மனித உரிமை மீறல் சம்பவங்கள் இல்லாதொழிக் கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் எமக்கு வீதியால் செல்ல முடியாத நிலை இருந்தது. வீட்டை விட்டு வேலைக்குச் செல்லும் கணவன் மாலை வீடு திரும்புவானோ எனும் சந்தேகம் மனைவிக்கு இருந்தது. பாடசாலை செல்லும் மாணவி குறித்து பெற்றோர் கவலைப்பட்டதுண்டு.

ஆனால் இந்தக் கொடிய நிலையை முற்றாக இல்லாதொழித்து இன்று மக்கள் இரவில் கூட சுதந்திரமாக நடமாடவைத்தது சந்திரிகா அம்மையாரின் அரசாங்கமே என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இந்த ஒரு விடயம் போதும் இப்பகுதி மக்களின் மனங்களை வெல்ல. எமக்கு தீர்வுப் பொதி பற்றி கூட அவ்வளவு சிந்தனையில்லை. மக்களை சுதந்திரமாக உலாவவிட்டதே பெரிய விடயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுப் பொதி விடயம் கூட அரசாங்கம் மக்களுக்கு முறையாக விளக்கமளிக்கத் தவறியதால்தான் வெற்றி காணவில்லை என நினைக்கிறேன். மக்கள் இப்பொதியை நன்கு விளங்கிக் கொண்டால் அதனையும் இலகுவில் நிறைவேற்றிவிடலாம். அடுத்த ஆட்சிப் பொறுப்பில் அவர் இதனைச் செய்வார் என நினைக்கிறோம்.

**ஜனாப் ரி. பி. ஆர். ஜுன்கீர் -காத்தான்குடியில் வசித்துவரும் இவர் ஒரு கிராம சேவை உத்தியோகத்தராவார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளனாக இருந்த நான் இன்று அக்கட்சியில் நிலையான கொள்கை எதுவுமில்லாத காரணத்தால் அதனை ஆதரிக்க முடியாது எனக் கூறிவிட்டேன். எமது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இத் தேர்தலில் என்றுமில்லாதவாறு பல கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன.



ஜனாப் ரி. பி. ஆர். ஜுன்கீர்

**அக்கட்சியில் நிலையான கொள்கை எதுவுமில்லாத காரணத்தால் அதனை ஆதரிக்க முடியாது எனக் கூறிவிட்டேன்.**

கடந்தகால வரலாற்றை நோக்கினால் எமது பகுதி மக்கள் கடந்த ஆறு வருட காலத்தில் அதிக நன்மைகளைப் பெற்றுள்ளனர். இதற்கு அரசுடன் இணைந்து எமது பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்துவைத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்கு நாம் நன்றி கூறவேண்டும்.

கடந்த தேர்தலில் பொ.ஐ.மு. அரசுக்கு ஆதரவளிப்பதாகக் கூறி முஸ்லிம் காங்கிரஸ் எமது மக்களின் பூரண ஆதரவைப் பெற்றது. அவ்வாறு வாக்குறுதிகளையும் அரசினூடாகப் பெற்றுத் தந்தது. எனவே அரசுடன் இணைந்து எமது தேவைகளை இலகுவாகத் தீர்க்கக்கூடிய கட்சியையே நாம் இம்முறையும் தெரிவு செய்வோம்.

**திரு. சீனித்தம்பி தளையசிங்கம் - ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரான இவர் தற்போது ஆட்டோ சாரதியாக இருந்து வருகிறார்.**

கிழக்கு மாகாண மக்களுக்கு இம்முறை நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் ஒரு புதிய அனுபவம் என்றே கூற வேண்டும். இப்பகுதி மக்கள் கடந்த இருபது வருடங்களாக முறையான, நேர்மையான, நீதியான தேர்தல் எதற்கும் முகங்கொடுக்கவில்லை.

தேர்தல் பற்றிய அறிவு பூரணமாக இல்லாத மக்களிடம் இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் 21 கட்சிகளும், 638 வேட்பாளர்களும் ஆதரவு கோரி நிற்கின்றனர். தமிழ் பேசும் மக்கள் அல்லது தமிழர்கள் என ஒரு இன மக்களாக வாழும் மக்கள் மத்தியில் ஏன் இவ்வளவு தொகையில் கட்சி பேதங்கள் என விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது.

கிழக்கு மாகாண மக்களைப் பொறுத்தவரையில் அரசுடன் இணைந்து செயற்படக்கூடிய



சீனித்தம்பி தளையசிங்கம்

தமிழ்க்கட்சி வேண்டும். அல்லது அரசில் எமது பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒருவரை - எமது பிரதிநிதி ஒருவரை நேரடியாக அமர்த்த வேண்டும். இதனை மனதிற்கொண்டே இம்முறை கிழக்கு மாகாண மக்களின் வாக்குகள் திசைதிரும்பும்.

திரு. செல்லையா இராஜதுரை எனது உறவினர். ஒரு நல்ல மனிதர். ஒரு காலத்தில் கிழக்கு மாகாண மக்களால் மட்டுமல்ல முழு நாட்டு மக்களாலுமே விரும்பப்பட்டவர். அவர் தனது கடந்த கால கௌரவத்தைக் காப்பாற்ற பேசாமல் மலேசியாவிலேயே இருந்திருக்கலாம். நாம் எதைச் சொன்னாலும் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.

**பாத்திமா பரீதா - இவர் ஒரு நடைபாதை வியாபாரி. ஏறாவூர் வாசியான இவர் மட்டக்களப்பு நகரில் கஜு விற்று வருகிறார்.**

ஏழைகளான எங்களுக்கு எதுக்குத் தேர்தல் வருகுது போகுது என்றே தெரியாது. ஏதோ தெருச் சுவரெல்லாம் பெரிய படம் படமாக ஒட்டுறாங்கள். கலர் கலராக கொடிகளைத் தொங்க விடுறாங்க. பெரிய அநியாயம் என்னவென்றால் இதுகளுக்குச் செலவு செய்கிற பணத்தை என் போன்ற ஏழைகளுக்குத் தந்தால் அல்லது சொத்திமுடங்களுக்குக் கொடுத்தால் அதுகள் வயிறாரச் சாப்பிட்டு வாழ்த்துங்கள்.

என்னைப் பொறுத்தவரை பணம்

**தமிழ் பேசும் மக்கள் அல்லது தமிழர்கள் என ஒரு இன மக்களாக வாழும் மக்கள் மத்தியில் ஏன் இவ்வளவு தொகையில் கட்சி பேதங்கள் என விளங்கிக்கொள்ள முடியாதுள்ளது.**

செலவு செய்யாமல் எவர் தேர்தலில் போட்டி போடுகிறாரோ அவருக்குத்தான் எனது வோட். அவர் தோத்தாலும் எனக்குக் கவலையில்லை.

**செல்வன் ரி. செந்தூரன் - மட்டு. சென். மைக்கல் கல்லூரி மாணவன்**

எமது மாணவ சமூகத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் என்பது எல்லாம் ஒரு கோவில் திருவிழா போலத்தான். கோவில் வருட மகோற்சவத்தில் 25 நாள் திருவிழா நடைபெற்று இறுதி நாள் தேர்த்திருவிழா நடைபெறுவது போலத்தான் இத் தேர்தலும்.



பாத்திமா பரீதா

**ஏழைகளான எங்களுக்கு எதுக்குத் தேர்தல் வருகுது போகுது என்றே தெரியாது. ஏதோ தெருச் சுவரெல்லாம் பெரிய படம் படமாக ஒட்டுறாங்கள். கலர் கலராக கொடிகளைத் தொங்க விடுறாங்கள். பெரிய அநியாயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேர்த்திருவிழா நடந்து முடிந்தால் அடுத்த வருட திருவிழாவிற்குத்தான் தேரைச் சுத்தம் செய்து மெருகூட்டுவோம். இப்ப திருவிழா தொடங்கிவிட்டது. அக்டோபர் 10ம் திகதி தேர். பின் அடுத்த ஆறு வருடத்திற்குப் பிறகுதான் அடுத்த தேர்த்திருவிழா. அந்த ஆறு வருடங்களும் தேர் இழுக்கும் மக்களை எவரும் கண்டுகொள்ளவே மாட்டார்கள்.

எமது மாணவ சமூகம் உண்மையான இதய சுத்தியுடன் மக்களுக்கு சேவை செய்கிறவர் யாரோ அவர்களுக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கும்.

அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி என்னைப் போன்ற இளைய சமூகத்தினரை வீதியில் சுதந்திரமாக உலாவவிட்ட இன்றைய அரசாங்கத்தைப் பாராட்டாமலிருக்க முடியாது.

இந்நிலை தொடர்ந்து, மனித உரிமை மீறல் சம்பவங்கள் முற்றாக ஒழிக்கப்பட்டு தேசிய இனப் பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும் என்பதே நம் விருப்பமாகும்.

**பெயர் குறிப்பிட விரும்பாத மட்டக்களப்பு பிரபல கல்லூரி ஒன்றின் ஆசிரியை.**

யுத்தம் காரணமாக கிழக்கு மாகாண தமிழ் மக்கள் கடந்த பல வருடங்களாக பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர். இதனை தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள சில தனித்துவ கட்சிக்காரர்களும், தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளும் முனைந்து வருகின்றனர்.

இந்த சதி முயற்சிக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் இரையாகிவிடக் கூடாது. தாம் சார்ந்த பிரதிநிதிகளை எமது மக்கள்மூலம் தெரிவுசெய்து எம்மை நடுத்தெருவில் விடுவதுதான் இவர்களது உள்நோக்கம்.

தமிழ் மக்கள் தத்தமது பகுதிகளில் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது தலையாய கடமையாகும். எமது பெறுமதி மிக்க வாக்கை வேறொருவருக்கு தாரைவார்த்து விட்டு வெற்று வேட்டுகளாக தொடர்ந்தும் பாழடைந்த வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கத் தேவையில்லை. கிழக்கு மாகாணத்தில் பாரிய அபிவிருத்தியும் வளர்ச்சியும் கண்டுள்ள சில பகுதிகள் போன்று நம் தமிழ்ப் பிரதேசங்களும் வளர்ச்சி காண அரசாங்கத்தில் எமது தமிழ்ப் பிரதிநிதி ஒருவரையும் அமர்த்த வேண்டும்.

**இப்ப திருவிழா தொடங்கிவிட்டது. அக்டோபர் 10ம் திகதி தேர். பின் அடுத்த ஆறு வருடத்திற்குப் பிறகுதான் அடுத்த தேர்த்திருவிழா. அந்த ஆறு வருடங்களும் தேர் இழுக்கும் மக்களை எவரும் கண்டுகொள்ளவே மாட்டார்கள்.**

## பொய்முகங்கள்



பொய் சொன்னதற்காக
கோபித்துக் கொள்கிற
உன் சிணுங்கல்
உன்னதமானது.
கால்களில் மட்டுமன்று
இதழ்களிலும்
பொருத்தியிருக்கிறாய்
கொலுசை.

- யுகபாரதி

கடந்த பல வருடங்களாக விடுதலைப் புலிகள்தான் எமது பிரதிநிதிகள் என்று நினைத்ததால் கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் கூட எமது மக்கள் படும் பாடு அனைவருக்கும் தெரியும். இனியும் நாங்கள் இத்தவறைச் செய்வோமேயானால் தமிழர் என்றொரு இனம் இந்நாட்டில் வாழ்ந்தது என்பது மட்டுமே மிஞ்சும்.

எனவே தமிழ் மக்களின் பிரதிநிதிகளை நேரடியாக அரசாங்கக் கட்சியில் இணைத்துச் செயற்படும் வகையில் எமது பலத்தை அரசுக்குக் காட்ட வேண்டும். எமது சமுதாய வளர்ச்சிக்கு இடைத்தரகர் யாரும் எமக்குத் தேவையில்லை.



**ரீ. செந்தூரன்**

**இந்தச் சதி முயற்சிக்கு தமிழ் மக்கள் ஒருபோதும் இரையாகிவிடக் கூடாது. தாம் சார்ந்த பிரதிநிதிகளை எமது வாக்குகள் மூலம் தெரிவு செய்து எம்மை நடுத்தெருவில் விடுவதுதான் இவர்களது உள்நோக்கம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முஹம்மத் ரஹுமான் - ஓட்டமாவடி**

தான் வெற்றி பெற்ற தொகுதியில் தங்கியிருந்து சேவை செய்பவன்தான் உண்மையான மக்கள் பிரதிநிதி. ஆனால் இப்ப கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை வெற்றிபெற்ற பின்னர் யாரும் மக்களைப் பெரிதாகக் கண்டுகொள்ளவதில்லை.

எனவே கடந்த காலத்தில் இவ்வாறு தவறு செய்தவர்களை இனம்கண்டு இத்தேர்தலில் ஓரம் கட்ட வேண்டும். இதைவிடுத்து அவர்கள் தரும் நூற்றி ஐம்பது ரூபா பணத்திற்காகவும், பிரியாணி பார்சலுக்காகவும் நமது இனத்தை அடகு வைக்கக் கூடாது.

**திரு. தணிகாசலம் தங்கவேல் - திருகோணமலை**

திருகோணமலையைப் பொறுத்தவரை தமிழ்க்கட்சிகளை விட ஜனநாயக வழிக்கு வந்த சில தமிழ் இயக்கங்கள் மக்களுக்கு குறிப்பிடத்தக்களவு சேவைகளைச் செய்துள்ளது. இதனால் தமிழ் இயக்கங்கள் தானே என நாம் இவற்றை ஒதுக்கிவிட முடியாது.

மக்களுக்கு உண்மையான சேவை செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நாம் எமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வதற்குப் பின்நிற்கத் தேவையில்லை.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படக்கூடிய தமிழ் இயக்க கட்சிகள் மூலமாக மக்கள் நன்மையடைவர் எனில் நாம் அவர்களைத் தெரிவுசெய்யலாம். ஏனெனில் நாம் அரசிடமிருந்து கிடைக்கும் சலுகைகளை நாம் தொடர்ந்தும் உதறித்தள்ளி வருவதால் எமது சமூகப் பாரிய பின்னடைவைக் கண்டு வருகிறது.

**மக்களுக்கு உண்மையான சேவை செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நாம் எமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வதற்குப் பின்நிற்கத் தேவையில்லை.**

புலிகள் போரிட்டு எமக்கு எல்லாம் பெற்றுத் தருவார்கள் எனும் நினைப்பிலேயே எமது கடந்தகாலம் சூனியமாகிவிட்டது. எமது பிரதேசங்கள் சுடுகாடாகிவிட்டது. இந்நிலை தொடர்ந்தால் தமிழ் சமூகம் இருந்த இடம் தெரியாது போய்விடும்.

எனவே தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து வைத்துள்ள ஜனாதிபதி சந்திரிகாவின் அரசிற்கு நாம் ஆதரவளித்து அவரின் கரங்களைப் பலப்படுத்தி நமது எதிர்காலத்திற்கு ஒளியூட்டுவது நமது கடமையாகும்.

**திருமதி தேவகல்யாணி சிவநாதன் - தம்பலகாமம்**

நாட்டில் இனப்பிரச்சினை தீரும். எமக்கும் இருண்ட யுகத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என எதிர்பார்த்துக் காத்திருந்தே காலங்கள் கடந்து வருகிறது.

எனவே தமிழ் மக்கள் இத்தேர்தலில் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இதுவரை காலமும் தமிழ்க் கட்சிகள் மூலமே எமக்கு விமோசனம் என நாம் நம்பிவந்தோம். அது தவறு. நாம் நேரடியாக அரசாங்கக் கட்சிக்கு எமது ஆதரவை வழங்க வேண்டும். அதன் மூலமே எமது பிரச்சினையை அரசுக்கு விளக்க வேண்டும்.

இதுவரை காலமும் தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களின் தரகர்களாகவே செயற்பட்டு வந்தது. எமது வாக்குகளால் வெற்றிபெறும் அவர்கள் தமது சுயலாபத்தையே பெரிதாகக் கொள்கின்றனர். இவ்வாறு செயற்பட்டவர்களுக்கு நாம் நல்ல பாடம் புகட்ட வேண்டும்.

**திரு. செல்வராசா சிவகுமார் - திருகோணமலை**

வடக்கு கிழக்கிலே பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்கள் தமது பலத்தை தென்பகுதி அரசியல் கட்சிகளுக்குக் காட்ட இத்தேர்தல் நல்லதொரு சந்தர்ப்பம் அளித்துள்ளது. எனவே எமது வாக்குகளைச் சிதறவிடாது எமக்கு நன்மை செய்யக்கூடியவர்களைத் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்புவது நமது கடமையாகும்.

தமிழ் மக்களிடம் வாக்குகளைப் பெறுவதற்காக ஒரு கட்சி ஆலவட்டம் பிடிக்கிறது. ஆனால் வெற்றி பெற்ற பின்னர் அது தனிக்கட்சியாகி தனித்துவமான கட்சியாக மாறிவிடும். இதற்குத் தமிழ் மக்கள் இம்முறை இரையாகிவிடக்கூடாது. தமிழரை மடையர் என்ற நினைப்போருக்கும், எம்மீது ஏறி சவாரி செய்ய முனைவோருக்கும் இம்முறை நல்ல பாடம் புகட்ட வேண்டும்.

**தமிழரை மடையர் என்ற நினைப்போருக்கும், எம்மீது ஏறி சவாரி செய்ய முனைவோருக்கும் இம்முறை நல்ல பாடம் புகட்ட வேண்டும்.**

**வடக்கு கிழக்கிலே பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்கள் தமது பலத்தை தென்பகுதி அரசியல் கட்சிகளுக்குக் காட்ட இத்தேர்தல் நல்லதொரு சந்தர்ப்பம் அளித்துள்ளது. எனவே எமது வாக்குகளைச் சிதறவிடாது எமக்கு நன்மை செய்யக்கூடியவர்களைத் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்புவது நமது கடமையாகும்.**

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆட்சியில் கிழக்கிலங்கை மக்களுக்குச் செய்த அநியாய அட்டூழியங்களையும் நாம் மனதிற் கொள்ள வேண்டும். ஐ.தே.க. ஆட்சியில் கிழக்கில் நடைபெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களைப் பட்டியலிட்டால் அக்கட்சி நாட்டில் எப்பகுதியிலுமே வெற்றி பெறாது.

இன்று தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறிவருகிறார். தனது கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைக்கே இவரால் தீர்வுகளை முடியவில்லை. இவரால் எப்படி நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துக்ளக் பத்திரிகையின் ஆசிரியரும், தமிழ்நாட்டின் பிரபல அரசியல் விமர்சகருமான திரு. சோ ராமசாமி அவர்களை சென்னை கிரீன்வேஸ் ரோடிலுள்ள அவரது அலுவலகத்தில் இம்மாதம் 2ம் திகதி சந்தித்து உரையாடினோம். அமுதுக்கு அவர் தந்த சிறப்புப் பேட்டி இது.**



# தனிநாடு நியாயம் பெறும்...

## துக்ளக் ஆசிரியர் சோ

**அமுதுக்கு பிரத்தியேகப் பேட்டி**

**நேர்கண்டவர் : இ. தயானந்தா**

**கே:** இலங்கைப் பிரச்சினை குறித்து நீங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் என்ன?

**சோ:** அதுபற்றி நான் பலமுறை எழுதியும் பேசியும் இருக்கிறேன். என் அபிப்பிராயப்படி, இலங்கை துண்டாடப் படக் கூடாது. அங்கு தனிநாடு கோரப்படுவதை இந்தியா ஏற்கக்கூடாது. அதற்குத் தூண்டுகோலாகவோ உதவியாகவோ கூட நடந்து கொள்ளக்கூடாது. இந்தியாவிலும் காஷ்மீர், முன்பு பஞ்சாபிலும், சில வடகிழக்கு மாநிலங்களிலும் இதுமாதிரிப் பிரச்சினைகள் வந்தன. அப்பொழுது இந்தியா நடந்துகொண்ட விதத்தை மறந்துவிடக் கூடாது. இந்தியா தனக்கொரு நியாயம் இலங்கைக்கொரு நியாயம் என்று நடந்துகொள்ளக் கூடாது. இதுமாதிரியான கோரிக்கைகளுக்கு இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறையே இலங்கையிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதே சமயம், இந்தியாவில் உள்ளது போல சமஷ்டி அமைப்பு ஒன்று... அதாவது அங்குள்ள தமிழ் மக்களுக்கு ஆட்சியிலும் அதிகாரத்திலும் கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் சம உரிமை அளிக்கக்கூடிய சமஷ்டி அமைப்பு ஒன்று இலங்கையில் தோற்றுவிக்கப் பட வேண்டும். இது எப்போதோ செய்யப்பட்டிருக்க வேண்டும். தாமதப்படுத்தி விட்டார்கள். இப்போது சந்திரிகா அவர்கள் அதற்கான எத்தனத்தை மேற்கொள்ளும்போது புத்த பிக்குகளும், எதிர்க்கட்சியினரும், சில தமிழ்க் கட்சியினரும் சேர்ந்து அதைக் குலைத்திருக்கிறார்கள். சிங்களப் பிரதிநிதிகள் இவ்வாறு செயற்பட்டால் தனிநாட்டுக் கோரிக்கைதான் நியாயம் பெறும். தீவிரவாதக் கொள்கைதான் நியாயம் பெறும்.

**கே:** எப்படிச் சொல்கிறீர்கள்?

**சோ:** இந்தியா பஞ்சாப்பில் ஒரு தவறைச் செய்தது. அகாலிதளத்தினர் மிதவாதிகள். அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வந்த போதெல்லாம் அவர்களது ஒரு கோரிக்கையையும் மத்திய அரசு நிறைவேற்றவில்லை. இதனால் மக்களிடையே அவர்கள் கையாலாகாதவர்களாக எந்த ஒன்றையும் நிறைவேற்றிக்கொள்ள இயலாதவர்களாக காட்சியளித்தார்கள். மத்திய அரசு அவர்களை நடத்திய விதம் அப்படித்தான் இருந்தது. அதன் காரணமாக அதாவது மிதவாதிகள் செயலற்றவர்களாக செல்வாக்கு இழந்து மக்களிடையே மதிப்பற்றுப் போனதன் காரணமாக அங்கே தீவிரவாதம் ஓங்கியது. அதே தவறைத்தான் இப்போது இலங்கை அரசியல்வாதிகள் செய்கிறார்கள். முன்பு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக ஜெயவர்தனா இதை சரிசெய்ய முயன்றார். இப்போது சந்திரிகா முயன்றிருக்கிறார். இவ்வாறு ஒருவர் முயற்சி செய்யும்போது அச்சமயம் எதிர்க்கட்சியாக இருக்கும் மற்றவர் முட்டுக்கட்டை போடுவது வழக்கமாகி வருகிறது. இது தொடர்ந்தால் அதற்குப் பிறகு தீவிரவாதத்தைக் கண்டிக்கும் தார்மீக உரிமையினை சிங்களக் கட்சியினர் இழந்துவிடுவார்கள்.

**கே:** இந்தப் பிரச்சினையின் தோற்றுவாய் என்னவென்று கருதுகிறீர்கள்?

**சோ:** தமிழ் மக்களை அடக்கியாண்டுவிடலாம் என்று சிங்களக் கட்சியினர் கருதியதுதான் தோற்றுவாய். அதனால்தான் இது வளர்ந்தது. ஒரு நிலையில் அது மாறத் தொடங்கியபோது தமிழ்த் தீவிரவாதம் இதை மேற்கொண்டு வளர்த்தது.

**கே:** தமிழ்த் தலைவர்கள் இந்தவிடயத்தில் சரியான போக்கை ஆரம்ப காலங்களில் எடுக்கவில்லை என்று சொல்வீர்களா?

**சோ:** நான் அப்படி நினைக்கவில்லை. செல்வநாயகமாக இருந்தாலும் சரி, அமிர்தலிங்கம் வரையில் செயற்பட்டுக் கொண்டிருந்தவர்களும் அதன்பின் ஈ. பி. ஆர். எல். எ.ஃப். வரதராஜப் பெருமாள் எல்லோருமே சரியாகத்தான் செயற்பட்டார்கள் என்று கருதுகிறேன்.

**கே:** அரசியல் விமர்சகராக இருக்கும் நீங்கள், இங்கே கிண்டல், நையாண்டியோடு காரமான விமர்சனங்களை முன்வைத்து பத்திரிகை நடத்தி வருகிறீர்கள். இந்தச் சுதந்திரம் இலங்கையில் இருப்பதாக நீங்கள் அவதானிக்கிறீர்களா?

**சோ:** அவ்வப்போது இருக்கிறது. அவ்வப்போது இல்லை. இந்தியாவில் எமர்ஜென்சியின்போது எவ்வாறு பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டதோ அப்படி இலங்கையிலும் அவ்வப்போது பறிக்கப்படுகிறது.

**கே:** மக்களால் மதிக்கப்படுகின்ற அல்லது துதிக்கப்படுகின்ற தலைவர்களை நீங்கள் விமர்சிக்கின்றபோது, உங்களது எழுத்தைத் தடை செய்ய முயன்ற நடவடிக்கைகளைச் சந்திக்க நேர்ந்ததுண்டா?

**சோ:** என் போன்ற பத்திரிகையாளர்கள் அதற்கெல்லாம் தயாராகத்தானிருக்க வேண்டும். அந்த மாதிரி இங்கே நிறையவே நடந்ததுண்டு. பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் அதைச் செய்துதான் இருக்கின்றன. எனக்கு மட்டுமில்லை. வேறு சில பத்திரிகையாளர்களுக்கும் அந்த மாதிரி நடந்து கொண்டிருக்கின்றன. இதை எதிர்க்கும் மன உறுதி இருந்தால்தான் இந்த மாதிரிப் பத்திரிகைகளை நடத்த வர வேண்டும். இந்த வம்பு தும்பு நமக்கு வேண்டாம் என்று நினைத்தால் இப்படிப் பத்திரிகை நடத்த வரக்கூடாது. ஜோசியம், சினிமா, சித்த வைத்தியம் என்று எதையாவது எழுதி வியாபாரம் பண்ண வேண்டியதுதான். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றும் எழுதுவேன்



## அமுதுக்கு ஜெயகாந்தன் சிறப்புப் பேட்டி

**சென்னை கே. கே. நகரில் உள்ள தனது வீட்டு மொட்டை மாடியில் ஓலை வேய்ந்து சிறு குடில் அமைத்து, மாலை நேரம் தேடி வரும் நண்பர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார் இன்றைய ஜெயகாந்தன். பேச்சு... பேச்சு... பேச்சு... இரவு 12 மணி தாண்டியும் அவரது பேச்சும், அந்த மேசையில் சுற்றுக்கு விடப்படும் விசேட புகையும் நீடிக்கிறது. அவருக்குப் பின்னால், நிஜ அளவின் நாலு மடங்கில் பைப் பிடித்துக் கொண்டிருக்கும் அவரது உருவப்படம். முன்னே அவரை வரைந்த இரு படங்கள். ஒன்று ஓவியர் ஆதிமூலத்தின் கோட்டுப் படம். மற்றது சோவியத் ஓவியர் ஒருவர் வரைந்து தந்தது என்கிறார்.**

**சட்டை போடாத மேனியில் சால்வையைத் தவழவிட்டு சாய்ந்து அமர்ந்தபடி "கேள்விகள் வைத்திருக்கிறீர்களா?" என்று புன்னகைக்கிறார். "இல்லை, முன்தயாரிப்பு எதுவுமில்லாத உரையாடலாக இது அமையவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்" என்கிறோம்.**

**"சரி" என்று கம்பீரமாகச் சொல்லியவாறு உற்சாகத்துடன் உடலை முன்னுக்குக் கொண்டுவருகிறார். யோசிப்பதற்கு நேரம் எடுத்துக் கொள்ளாமல், தயங்காமல், தடுமாறாமல் சுவற்றிலடித்த பந்து திரும்புவது போல பட் பட்டென்று வருகின்றன அவர் பதில்கள். கேள்விகளைத் தொடரச் சிரமப்படும்படியாக இருக்கிறது அவரது வேகம். பதில்களைத் தயாரித்துச் சொல்லாமல் அவரது உள்ளத்தில் இருந்ததெல்லாம் அப்படி அப்படியே வெளியே வந்தது போல இன்றைய ஜெயகாந்தனை வெளிக்கொணர முடிந்ததில் நமக்கு மகிழ்ச்சி.**

**உரையாடியவர் : இளையதம்பி தயானந்தா**

*வணக்கம் திரு. ஜெயகாந்தன் அவர்களே.*

**வணக்கம்!**

*உங்களுக்கும் உங்களது பேனாவுக்கும் உறங்கு நிலை வந்திருப்பதாகச் சொல்லப்படுவது குறித்து முதலில்.....?*

**உறங்கு நிலை வந்திருப்பது வாஸ்தவம். எதார்த்தத்தில் அது தான் நிலை. விழித்திருப்பவர்கள் உறங்கவும் வேண்டும். உறங்குபவர்கள் விழிக்கவும் வேண்டும்.**

*ஏன் நீங்கள் இப்போது உறங்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?*

**ஒருவன் உறங்குவதற்கும் விழித்திருப்பதற்குமான சுதந்திரம் அவனுக்கு இருக்கிறது என்பதனால்.**

*உங்களைப் போன்ற படைப்பாளிகள் இவ்வாறு உறங்கிவிட்டால் உங்களது இன்றைய மனநிலை எப்படி இருக்கிறது? இன்றைய சூழலை, எழுத்துலகை, ஏனைய விடயங்களை நீங்கள் இன்று எவ்வாறு பார்க்கிறீர்கள் என்பது வெளியுலகுக்குத் தெரியாதல்லவா?*

**நான் எவ்வாறு பார்த்தேன் என்பது தெரிந்தாலே போதும்.**

*உங்களை எதிர்காலம் நீங்கள் அன்று எழுதிய எழுத்துக்களின் மூலம் மட்டுமே தெரிந்து கொள்வது போதும் என்று நினைக்கிறீர்களா?*

**ஆமாம்! திருவள்ளுவரையும் நான் அப்படித்தான் அறிந்து கொள்கிறேன்.**

*வெறுமனே அன்றைய உங்கள் எழுத்துக்களின் மூலம் நீங்கள் அறியப்படுவது போதும் என்றா சொல்கிறீர்கள்?*

**போதும் என்று நினைப்பதால் தான் எழுதாமல் இருக்கிறேன். என்னுடைய மனநிலை எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது.**

*உங்கள் எழுத்தால் மிகவும் ஈர்க்கப்பட்ட பலர் இன்றும் உங்கள் எழுத்துக்களைக் காணும் ஆவலோடு இருக்கிறார்கள். எழுதக்கூடாது என்று ஏன் நினைக்கிறீர்கள்?*

**எழுதக்கூடாது என்று நான் நினைக்கவில்லை என்பதை ஏற்கனவே சொல்லிவிட்டேன். நான் எழுதாமல் இருக்கிறேன். அதற்கு எனக்குச் சுதந்திரம் உண்டு.**

*உங்களுடைய எழுத்து வாழ்க்கையின் ஆரம்ப நாட்கள் பற்றிச் சொல்வீர்களா?*

**எனது எழுத்தின் ஆரம்ப நாட்கள் நான் சந்தித்த மக்களைப் பற்றியும் அவர்களது அந்த வாழ்க்கையைப் பற்றியும் அமைந்திருந்தது. அது புதுமையாகப் பார்க்கப்பட்டதற்குக் காரணம், அதற்கு முன்னால் அந்த மாதிரி மக்களைக் கதாநாயகர்களாகவும், அவர்களது வாழ்க்கையை இலக்கியப் பொருளாகவும் கருதி எழுதுபவர்கள் மிகவும் குறைவாக இருந்தார்கள். அதையே நான் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்க முடியாது. மனிதர்களை எல்லாத் தரத்திலும் நான் பார்க்கிறேன். மனித உணர்ச்சிகள் மோதிக்கொள்வதையும் அது முன்னோக்கிச் செல்வதற்காகப் போராடுவதையும் நான் பார்க்கிறேன். அவற்றையெல்லாம் நான் தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். இன்னும் கூட நான் எழுதக்கூடும்.**

*எழுதுவீர்கள் என்று எடுத்துக் கொள்வதா அல்லது எழுதியது போதும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதா சரி?*

**எழுதக்கூடாது என்று நான் நினைக்காத வரைக்கும், எழுதுவேன் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது...**

*இனி எழுதுவதாக இருந்தால் எதுபற்றி எழுதுவீர்கள்?*

**எதுபற்றி வேண்டுமானாலும் எழுதுவேன்.**

*இப்போது, ஆன்மீகத்தின் பக்கம் திரும்பியிருக்கிறீர்கள் என்று சொன்னால்....?*

**ஆன்மீகமும் இலக்கியமும் எப்போதும் சம்பந்தமுடையதுதான்.**

*ஆண்டவனைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?*

**(சிரிப்பு) எனக்கு முன்னால் இருந்த அறிவாளிகளுடைய அபிப்பிராயம் எதுவோ அதுவேதான். ஒன்று என்னில் ஒன்றேயாம் அன்று என்னில் அன்றேயாம்... கம்பர் சொன்னது போல. இது அவரவர்களுடைய மனோதர்மத்தைப் பொறுத்தது. நான் கடவுள் விஷயத்தில் நம்பிக்கை உள்ளவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளை மறுக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**இதெல்லாம் கண் தெரியாதவர்களுக்கு தெரிந்தவர்கள் வழி காட்டுவது மாதிரி. நானும் கூட கடவுள் இல்லை என்றுதான் நம்பிக்கொண்டிருந்தேன். ஆனால் தெரிந்தவர்கள் வழி காட்டுகிற போது அதன் வழி நடப்பது தப்பாக இருக்காதல்லவா?**

நீங்கள் கண் தெரியாமல் இருந்தது எவ்வளவு காலம்?

**இப்பொழுதும் கூட கண் தெரியாமல் இருக்கிறேன். எனவே தெரிந்தவர்களை நம்புகிறேன்.**

தெரிந்தவர்கள் என்று யாரைச் சொல்கிறீர்கள்?

**நம்புகிறவர்களை.**

நம்புகிறவர்கள் என்பது?

**நம்புகிறவர்கள்தான். கடவுள் பற்றி நம்புகிறவர்களை நான் நம்புகிறேன்.**

கடவுள் என்கிறபோது நீங்கள் இந்துக் கடவுள்களைச் சொல்கிறீர்களா அல்லது பொதுவாகவே கடவுளா?

**கடவுளுக்கும் மதத்துக்கும் சம்பந்தமில்லை என்கிறேன்.**

அப்படியானால் அதிக அளவில் இந்து மக்களைக் கொண்டிருக்கும் இந்தியா இந்து தர்மம் என்று சொல்வதும், இலங்கை போன்ற நாடுகள் பௌத்த தர்மம் என்று சொல்வதும் முட்டாள்தனம் என்பீர்களா?

**முட்டாள்தனம் என்று சொல்ல மாட்டேன். சம்பந்தமில்லை என்றுதான் மறுபடியும் சொல்கிறேன். கடவுளுக்கும் மதங்களுக்கும் சம்பந்தமில்லை. (அழுத்தமாக)**


அப்படியெனில், இந்த அறையில் புத்தர் சிலை வைத்திருக்காமல் பிள்ளையார் சிலையை ஏன் வைத்திருக்கிறீர்கள்?

**ஏதாவது ஒன்று இருந்துவிட்டுப் போகிறது. பிள்ளையாரும் புத்தர்தான். புத்தரும் பிள்ளையார்தான். சிலைகள் என்ற அளவில்தான் எனக்கு அவற்றைப் பார்க்க முடிகிறதே தவிர, எந்தச் சிலையிலேயும் நான் கடவுளைப் பார்ப்பதில்லை.**

உங்கள் அறையில் விவேகானந்தரின் படத்தையும் காணக்கூடியதாக இருக்கிறது. விவேகானந்தர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**விவேகானந்தர் ஆன்மீகத் துறையில் புரட்சி செய்தவர். புரட்சிக்காரர்களை எல்லாம் எனக்குப் பிடிக்கும். அந்த முறையில் அவரையும் எனக்குப் பிடிக்கும். அந்தப் படத்தை வைத்திருப்பது நானல்ல. இந்த அறையிலுள்ளவர்கள் அவர்களுக்குப் பிடித்த படங்களையெல்லாம் வைத்து இதை அலங்கரிக்கிறார்கள். என் படத்தையும் வைத்திருக்கிறார்கள். நானா வைத்துக் கொண்டேன்? அலங்காரம் என்ற முறையில் அவையெல்லாம் இருக்கின்றன அவ்வளவுதான்.**

கடவுளுக்கும் மதத்துக்கும் சம்பந்தமில்லை என்கிறேன்.



விவேகானந்தரை ஒரு புரட்சிக்காரர் என்று நீங்கள் ஏற்றுக்கொள்வது போல, 'யாமார்க்கும் குடியல்லோம்' என்ற அப்பரை, அல்லது நாவலரை எப்படிச் சொல்வீர்கள்?

**அந்தக்காலத்தில் அவரவர்கள் புரட்சிக்காரர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். அதாவது கவிஞர்கள் அனைவருமே.**

யாழ்ப்பாணத்து நாவலர் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**நாவலரைப் பற்றி நான் என்ன தனியாக அபிப்பிராயம் சொல்ல இருக்கிறது? தமிழ் வளர்த்த தமிழ் அறிஞர்களில் ஒருவர்.**

நாவலரையும் இராமலிங்க வள்ளலாரையும் ஒப்பிட்டு ஒருவரை ஏற்றுக்கொள்கிறவர்கள் மற்றவரை மறுத்துப் பேசும் சர்ச்சை பற்றி?

**அதுமாதிரி விஷயங்களில் எல்லாம் நான் தலையிடுவதில்லை.**

பலராலும் பாராட்டப்பெற்ற திரைப்படம் ஒன்றை எடுத்தவர் நீங்கள். திரைப்படத்துறை பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

**திரைப்படத்துறையில் சில நாவல்களைப் படமாக்க வேண்டும் என்கிற, அதுவும் என் நாவல்களை நான் எழுதியது போலவே செலுலாய்டில் பார்க்க வேண்டும் என்கிற ஆசை எனக்கும் எனது நண்பர்கள் சிலருக்கும் இருந்ததினால் அவற்றை நான் படமாக்கினேனே ஒழிய நான் சினிமாக்காரன் அல்ல.**

நீங்கள் இயக்கிய 'உன்னைப் போல் ஒருவன்' விருது பெற்றது. பல இடங்களிலும் பாராட்டைப் பெற்றது. அதன் பிறகு நீங்கள் படம் எடுக்கலாமே என்று நினைத்ததில்லையா?

**நினைத்தால் செய்வேன். அப்போது நினைத்தேன். செய்தேன். இப்போது நினைக்கவில்லை.**

திரைப்படங்களுக்கென நீங்கள் எழுதிய பாடல்களும் வெகுவாகப் பேசப்பட்டன. நீங்கள் எழுதியவற்றில் எந்தப் பாடல் உங்களுக்குப் பிடித்தது?

**எனது படங்களுக்கு நான் பாடல்கள் எழுதியிருக்கிறேன் என்பது தவிர அதில் விஷேசமாக ஒன்றுமில்லை. அந்தப் பாடல்களில் எதுவும் படத்திற்காக எழுதப்பட்டதுமில்லை. அவ்வப்போது நான் கவிதை மாதிரி சொல்கிற சில வரிகளை நண்பர்கள் குறித்து வைத்திருந்தார்கள். அவற்றை நான் சினிமாவுக்குப் பயன்படுத்திக் கொண்டேன்.**

அவற்றில் மிகவும் பிடித்த பாடல் என்றால்...?

**எல்லாமே பிடித்ததைத்தான் செய்கிறோம். பிடிக்காத காரியத்தை ஏன் செய்யப் போகிறோம்? ம்.. பிடித்தது என்றால்... 'கண்டதைச் சொல்கிறேன் உங்கள் கதையைச் சொல்கிறேன்' என்று ஒரு பாடல் எனக்கு மிகவும் பிடித்தது.**

தமிழர்களின் இப்போதைய அரசியல் பற்றி?

**தமிழர்கள் அரசியலிலிருந்து விலகியிருக்கிறார்கள்.**

எப்படிச் சொல்கிறீர்கள்?

**அவர்களின் நடைமுறையிலிருந்துதான். அவர்கள் யாருக்கு வேண்டுமானாலும் வோட்டுப் போடுவார்கள். எதற்கு வேண்டுமானாலும் வோட்டுப் போடுவார்கள். ஒரு கட்சியைத் தேர்ந்தெடுத்துவிட்டுப் பின்னர் அதை எதிர்க்கட்சியோடு சேர்ந்துகொண்டும் எதிர்ப்பார்கள்.**

தமிழர்களுக்குத் தாங்கள் தலைவர்கள் என்று சொல்பவர்கள் பற்றி?

**தமிழ்நாட்டில் எல்லாரும்தான் தங்களைத் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். உரிமை இருக்கிறது. சொல்லிக் கொள்கிறார்கள். அதை நம்புவதற்கும் பிரசாரப்படுத்துவதற்கும் கொஞ்சப் பேர் கூட இருக்கிறார்கள். நடக்கிறது நாடகம்.**

அரசியலில் தமிழர்கள் ஒதுங்கியிருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். அப்படி இல்லாமல் அரசியலில் சேர்ந்து கொண்டால் என்ன மாற்றம் ஏற்படக்கூடும்?

**அவர்கள் எப்படி இருக்க வேண்டும் சொல்வதற்கு நான் ஒன்றும் அவர்களுக்கு அதிகாரி இல்லை. அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பிரதிபலிப்பதுதான் என்னுடைய வேலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் எழுத்தாளனுடைய வேலை எது என்று நினைக்கிறீர்கள்?

**எழுதுவதுதான்.**

எதை?

**அவன் நினைக்கிறவற்றை நேர் மையாக, தெளிவாக, பிறருக்குப் புரியவேண்டும் என்ற நோக்கத் தோடு எழுத வேண்டும். தெளிவு றவே அறிந்திடுதல் தெளிவு தர மொழிந்திடுதல் சிந்திப்பார்க்கு களி வளர உள்ளத்தே ஆனந் தக் கனவு பல காட்டல் கண் ணீர்த்துளி வர உள்ளுருக்கு தல்... இவையெல்லாம் எழுத்தா ளர்களுடைய பணி.**

அந்த இலக்கணத்திற்குட்பட்டு உங்கள் கணிப்பின்படி இவர்க ளெல்லாம் எழுத்தாளர்கள் என்று சிலரையாவது சொல்ல முடியுமா?

**நான் விமர்சகன் அல்ல.**

ஏன் விமர்சிக்கக் கூடாது என்று நினைக்கிறீர்கள்?

**நான் (அழுத்தம்) அவ்வாறு கருதுகிறேன்.**

சரி, விமர்சகராக வேண்டாம். ஒரு ரசிகராக உங்களுக்குத் தமிழில் எழுதுகிறவர்களில் யாரைப் பிடிக்கிறது?

**ரசிகனாக நான் பேசுவதே இல்லை. எழுத்தாளனாகத்தான் என்னால் பேச முடியும்.**

அரசியல் நோக்கர் என்ற வகையில் இன்று இலங்கையில் நிலவுகிற சூழல் பற்றி ஏதாவது கருத்துச் சொல்வீர்களா?

**நிறைய சொல்லியிருக்கி றேன். அது போதும் என்று நினைக்கிறேன்.**



ஒலி வடிவில் உங்கள் குர லில் பதிவு செய்வதற்காக...?

**இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்பது தவிர, எனக் கும் எங்கள் தேசத்திற்கும் வேறு நோக்கங்கள் இல்லை.**

திரையுலகில் உங்களுக்குப் பிடித்தமானவர்கள் யார்?

**இதுமாதிரிக் கேள்விகளுக் கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டும் என்று நினைப்பது தான் எனக்கு நகைப்பைத் தரு கிறது. எல்லாரையும்தான் எனக் குப் பிடிக்கும்.**

கண்ணதாசன் பற்றி என்ன சொல்வீர்கள்?

**நல்ல கவிஞன். பழந்தமிழ் இலக்கியங்களின் சாரத்தை எல் லாம் பழகு தமிழுக்குள் கொண் டுவந்து திரைப்படங்களில் இல க்கியத் தரத்தை ஏற்படுத்திய வர். எனக்கு நல்ல நண்பர். நல்ல நண்பரைப் பற்றி அதிகம் என்ன கருத்துச் சொல்ல முடியும். நல்ல நண்பர் அவ்வளவுதான்.**

சந்திரபாபுவும் உங்களுக்கு நல்ல நண்பர் என்று அறிகி றோம். அவர் பற்றிய உங்கள் மனப்பதிவுகள்?

**அவர் நல்ல ரசிகர், நல்ல கலைஞர், அவரிடம் பல திறமை கள் இருந்தன. இந்த சினிமா வாழ்க்கை அவருடைய ஆயுளை சீக்கிரம் முடித்துவிட்டது என்கிற வருத்தம் எனக்கும் உண்டு.**

எல்லா மனிதர்களுக்கும் மன தில் ஏதாவது இலட்சியம் இருக் கிறது. உங்களது இலட்சியம் என்ன?

**மானுட குலத்தின் இலட்சியம் எதுவோ அதுதான் எழுத்தாள-னின் இலட்சியமாகவும் இருக்க முடியும்.**

மானுட குலத்தின் இலட்சியம் என்று எதைக் குறிப்பிடுகிறீர் கள்?

**சுதந்திரம். சுதந்திரம். சுதந்திரம்.**

சுதந்திரம் என்பது மனி தருக்கு மனிதர் மாறு படும் ஒன்றாகவும் இருக் கிறது. ஒவ்வொருவரும் ஒவ் வொரு விதமான சுதந்திரத்தை விரும்புபவர்களாக இருக்கிறார் கள். உங்களுடைய மனதில் எதைச் சுதந்திரம் என்று வரை யறுத்து வைத்திருக்கிறீர்கள்?



**மானுட குலத்தின் இலட்சியம் எதுவோ அதுதான் எழுத்தாளனின் இலட்சியமாகவும் இருக்க முடியும்.**

**பிறருக்கு இன்னா செய்யாத சுதந்திரம்.**

வள்ளுவர் பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்?

**நாம் வளர வளர வள்ளுவ மும் பிரமாண்டமாக நமக்குப் புரிகிறது. நாம் எந்த அளவுக்கு வளர்கிறோமோ அந்த அளவுக்கு அதைப் புரிந்து கொள்ளலாம். அந்த அளவுக்கு அது செழுமை யானது. சிந்தனை மிக்கது. எக் காலத்து மனிதர்க்கும், எந்த மொழி பேசுகிற மனிதர்க்கும் உதவி செய்யக் கூடியதாக தமி ழிலே ஒரு கருத்துப் பொக்கிஷம் இருக்கிறதென்றால் அது குறள் என்பது என்னுடைய அனுபவம்.**

கவிச்சக்கரவர்த்தி என்று கொண் டாடப்படுகின்ற கம்பன் பற்றி?

**கம்பனிலிருந்துதான் தமிழ்க் காவியம் தொடங்குகிறது. கம்ப னுடைய காலம்தான் தமிழிலே காவிய காலம். கம்பனுடைய சிறப்பு ராமனைப் பாடியதல்ல, மனிதனைப் பாடியதுதான். செல் வர்களைப் பாடியதல்ல, உழவ ரைப் பாடியது. சோழனின் பெரிய சாம்ராஜ்யத்தையும் மதிக்காமல் தலை நிமிர்ந்து நின்றது.**

பாரதி பற்றி?

**பாரதியை நான் குருவாகக் கொண்டவன். பாரதியின் கட்ட ளைக்கு ஏற்பவே எழுத ஆரம்பி த்தவன். பாரதி விட்ட இடத்திலி ருந்து தொட்டுத் தொடங்கியவன்.**

பாரதிக்குப் பிறகு பாரதியின் பரம்பரை என்று சொல்லிக் கொள்கிற ஒரு மிக நீண்ட பரம் பரை இருக்கிறது. அதுபற்றி ஏதாவது சொல்வீர்களா?

**பாரதிக்குப் பிறகு தமிழில் எழுத வந்தவர்கள் அனைவரும் பாரதியின் பரம்பரைதான். இதை அவர்கள் ஒத்துக்கொண்டாலும் சரி, மறுத்தாலும் சரி.**


ஈழத்திலும் தமிழகத்திலும் இன் னும் தமிழ் பேசும் இடம் எங்கி லும் கவிதைகள் எழுதிக் கொண் டிருப்போரில், பாரதியின் பாதிப் போடு எழுதுகிறார்கள் என்று யாரை இனம் காண்கிறீர்கள்?

**அநேகமாக எல்லா நல்ல கவி ஞர்களுமே பாரதியின் பாதிப் பில்தான் எழுதுகிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் பாரதி யை விஞ்சி எழுதக்கூடிய அள விற்கு காலம்தான் ஒரு கவிஞ னை உருவாக்கும். அப்படிக் காலத்தால் உருவாக்கப்பட்ட கவிஞன் மகாகவி பாரதி.**

(தொடர்ச்சி அடுத்த இதழில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் பண்டாரநாயக்கா சாதாரண மனித யுகத்தின் சிற்பி

**மனிதர்கள் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், இறக்கின்றார்கள். ஆனால் சில மனிதர்களின் பெயர்களே வரலாற்றில் பொறிக்கப்படுகின்றன. மனிதகுல மேம்பாட்டுக்கு, அவர்கள் தம் வாழ்நாளில் ஆற்றிய அரும்பணிக்காக அவர்களது நாமம் என்றென்றும் மக்கள் இதயங்களில் வாழ்கின்றது. அவ்வாறு எமது நாட்டில், எமது யுகத்தில் தோன்றி மறைந்த ஒருவரே அமரர் பிரதமர் சொலமன் வில்சன் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா அவர்கள்.**

இன்னும் சிலர் - உதாரணமாக ஜேர்மனியின் அடொல்ப்ற் ஹிட்லர், எமது நாட்டின் ஜுனியஸ் றிச்சர்ட் ஜெயவர்தனா போன்றவர்களின் பெயர்களும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளனதான்.

ஆனால் அவர்களை எதிர்மறையாக - மக்கள் விரோதிகளாக வரலாறு குறித்து வைத்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் இலங்கை வரலாற்றில் ''பண்டாரநாயக்காசகாப்தம்'' என்றஒரு காலகட்டத்தை அமரர் பொறித்துச் சென்றுள்ளார்.

நாட்டின் தலைவிதியை மாற்றியமைக்கக் கூடிய பிரதமர் பதவியில் மிகக் குறுகிய காலமான ஒரு வருடத்திற்கும் சற்றுக் கூடுதலான காலம் (1956 - 1957 செப்டெம்பர் 29 படுகொலை செய்யப்படும் வரை) இருந்த போதிலும் மக்கள் மனங்களில் அவரது தலைமைத்துவ பண்பின் தாக்கம் இன்றும் மிக வலுமிக்கதாகவே இருந்து வருகின்றது.

இதற்குக் காரணம் அவரது இளமைக்காலம் முதல் அவர் தனது சிந்தனையில் உருவாக்கி கட்டியெழுப்பி வந்த தேசாபிமான, முற்போக்குஎண்ணங்களின் வளர்ச்சியும் செயல்பாடுகளும் ஆகும்.

அவரது கொள்கைகள், நடைமுறைகள் பதவியை நோக்கமாகக் கொண்டவையாகவோ அல்லது பதவி வந்த பின் உருவானவையாகவோ இருக்கவில்லை. அதனாலேயே அவரது மரணத்திற்குக் காரணமான கொலையாளியின் துப்பாக்கிரவைகளால் அவரது செல்வாக்கின் வீச்சை மட்டுப்படுத்த முடியவில்லை.

மாறாக அக்கொலைஞனை ஏவிய சக்திகளினது தீய நோக்கங்களே மக்களால் முறியடிக்கப்பட்டது.

செல்வாக்கும், செல்வமும் மிக்க குடும்பத்தில் பிறந்து அதேவகையான குடும்பமொன்றில் திருமணம் முடித்து இல்வாழ்க்கையில் நுழைந்த அமரர் பண்டாரநாயக்கா அவர்கள், அவரதுசமகாலத்தியஅரசியல் தலைவர்களைப் போல் தனது பிரபுத்துவ அந்தஸ்தைப் பேணியபடி, அன்றைய காலத்தில் எமது நாட்டின் மீது கோலோச்சிய பிரித்தானிய ஏகாதிபத்திய காலனித்துவ ஆட்சிக்கு முண்டு கொடுப்பவராக, அதன் அடிமைவிசுவாசியாகவாழ்ந்திருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு வாழவில்லை.

அவர் காலத்திய தலைவர்களான டி. எஸ். சேனநாயக்கா அவரது மகன் டட்லி சேனநாயக்கா, சேர். ஜோன் கொத்தலாவல, ஒலிவர் குணதிலக்க, சேர். பொன் இராம்நாதன், அருணாசலம் சகோதரர்கள், ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம் (ஜே. ஆர். மட்டும் சற்று வித்தியாசமாக ஆரம்பம் முதல் இறக்கும்வரை அமெரிக்க ஏகாதிபத்திய விசுவாசியாக இருந்தார்) போன்றோர் பிரித்தானியகாலனியாதிக்கவாதிகளின் பக்தி சிரத்தையான ஆதரவாளர்களாகவே இருந்தனர்.

ஆனால் அமரர் பண்டாரநாயக்கா மட்டும் இவர்களில் மிகவும்வித்தியாசமானவராகஇருந்தார். (இதே காலகட்டத்தில் உருவான இடதுசாரித் தலைவர்களான பிலிப் குணவர்தனா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, பீட்டர் கெனமன், பொன். கந்தையா, அ. வைத்திலிங்கம் போன்றோர் தீவிர பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு தலைவர்களாக இருந்த போதிலும் இலங்கை மக்களின் ஒட்டுமொத்தமானதேசிய, வர்க்கஅபிலாஷைகளைக் கணக்கில் எடுக்கத் தவறி, முதலில் அத்தீவிர இடதுசாரித்தவறுகளையும்பின்னர் பாராளுமன்றசந்தர்ப்பவாத தவறுகளையும் இழைத்து மக்கள் மனங்களில் நிலைத்து நிற்க முடியாதவாறு வரலாற்றின் ஓரத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்).





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இருபதாம் நூற்றாண்டின் எல்லா நாடுகளிலுமிருந்த ஏகாதிபத்திய - எதிர்ப்புத் தலைவர்களைப் போலவே பண்டாரநாயக்காவையும் அன்றைய சர்வதேசிய நிலைமையின் புரட்சிகர அம்சங்கள் பாதித்தன.

முதலாம் உலகப் போரும், ருஷ்யாவில் ஏற்பட்ட அக்டோபர் சோஷலிசப் புரட்சியும், சீன விடுதலைப் போரும், இந்திய, சுதந்திரப்போராட்டமும், இரண்டாம் உலகப் போரில் ஹிட்லர் தலைமையிலான பாஸிச சக்திகள் தோற்கடிக்கப்பட்டமையும், கிழக்கு ஐரோப்பாவில் சோஷலிச நாடுகளின் தோற்றமும் உலக அரங்கில் பிரமாண்டமான மாற்றங்களை ஏற்படுத்தியது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உறக்கத்திலிருந்த உலகம் சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிசம் என்ற பெரும் புயல்களால் உலுக்கப்பட்டது. மனித குலம் மெதுவாக தான் நடந்து வந்த பாதையில் திடீர் பாய்ச்சல் ஒன்றை நிகழ்த்தியது.

ஆங்கிலேய, ஜப்பானிய, ஒல்லாந்த, போர்த்துக்கேய, பிரான்சிய, ஸ்பானிய, இத்தாலிய காலனியாதிக்கவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நாடுகளில் மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர்களை வரலாறு எங்கும் உருவாக்கியது.

சீனாவின் மாவோசேதுங், வியட்நாமின் ஹோசிமின், இந்தியாவின் காந்தி, பாகிஸ்தானின் ஜின்னா, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்ணோ, கொங்கோவின் பட்ரிஸ் லுமும்பா, யுகோஸ்லோவாக்கியாவின் மார்ஷல் டிட்டோ போன்றோரின் வரிசையில் எமது சின்னஞ்சிறிய இலங்கைத் தீவில் பண்டாரநாயக்கா உருவானார்.

அன்றைய காலகட்டத்தில் இலங்கை அரசியலில் பிரகாசித்த அநேகமான தலைவர்கள், அவர்கள் வலதுசாரிகளோ இடதுசாரிகளோ பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் கல்விகற்றோரே. அத்தகைய தலைவர்களில் ஒரு பகுதியினர் இலங்கை திரும்பியதும் பிரித்தானிய எஜமானர்களைப் போலவே, கோர்ட்டும், சூட்டும், தொப்பியும் அணிந்து, ஆங்கிலம் பேசி மேற்கத்தைய கலாசார மரபுகளுடன் வாழ்ந்ததுடன் அரசியலிலும் அவர்களது அடிச்சுவட்டையே பின்பற்றினர்.

இன்னொரு பகுதியினர் பிரித்தானிய காலனித்துவத்தை தீவிரமாக எதிர்த்தபோதும் அதன் ஒரு அம்சமாக தன்னியல்பாகவே திகழ்ந்த பிரித்தானிய இடதுசாரி இயக்கத்தின் கொள்கைகளைப் பின்பற்றி இலங்கை மக்களின் உடனடித் தேசியப் பிரச்சினைகளை கணக்கிலெடுக்கத் தவறினர். (இதன் ஒரு விளைவே இன்று மோசமடைந்திருக்கும் தேசிய இனப்பிரச்சினை!)

இவ்விரு பகுதியினரும் நேரெதிரெதிரான அரசியல் கொள்கைகளைப் பின்பற்றிய போதிலும் இலங்கை மக்கள் எதிர்நோக்கிய தேசியப் பிரச்சினைகளுக்கான யதார்த்தபூர்வமான தீர்வையோ தலைமைத்துவத்தையோ வழங்கத் தவறினர்.

இவர்கள் நிரப்பத் தவறிய வெற்றிடத்தை பண்டாரநாயக்காவே நிரப்பினார்.

தனது பிரித்தானிய ஒக்ஸ்போட் பல்கலைக்கழக கல்விக் காலத்தின் போது, பல்வேறு நாட்டு சோஷலிஸ்டுகளுடனும் தேசியவிடுதலை இயக்கங்களுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்த பண்டாரநாயக்கா ஏகாதிபத்திய எதிர்ப்பு முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட ஒருவராக இலங்கை திரும்பினார்.

இலங்கையின் ஒரேயொரு ஏகபோக முதலாளித்துவக் கட்சியான ஐக்கிய



தேசியக் கட்சியில் அவர் அங்கம் வகித்து ஐ. தே. க. அமைச்சரவையில் ஒருவராக இருந்த போதிலும் அதனுடைய தேச விரோத, மக்கள் விரோத கொள்கைகளுடன் நீண்ட காலம் ஒத்திருக்க முடியவில்லை.

எனவே 1952ம் ஆண்டில் ஐ. தே. க. அரசில் இருந்து விலகி தனது தலைமையின் கீழ் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்ற கட்சியை உருவாக்கினார். இக்கட்சியின் தோற்றத்துடன் தான் இலங்கையில் இருகட்சி ஆட்சி முறை உருவாகியது.

அநேக நாடுகளில் இருகட்சி ஆட்சிமுறை இரண்டு சூழ்நிலைகளில் உருவானது. ஒன்று காலனித்துவ ஆட்சிகளின் போது பல நாடுகளில் தேசிய உற்பத்தி சக்திகள் (தேசிய முதலாளிகள், கைத்தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோர்) காலனித்துவவாதிகளால் முடமாக்கப்படுகின்றனர்.

இதனால் ஏகாதிபத்திய நாடுகளின் உற்பத்திப் பொருட்களை வாங்கி விற்கும் உள்நாட்டுத் தரகு முதலாளிகளே சமூகத்திலும் அரசியலிலும் முன்னணிச் சக்திகளாக இருக்கின்றனர். இவர்களால் ஈட்டப்படும் லாபத்தின் ஒரு பகுதியும், செல்வந்த விவசாயிகளால் உருவாக்கப்படும் மூலதனமும் சேர்ந்து சிறிய அளவிலான தேசிய கைத்தொழிலையும் தேசிய முதலாளிகளையும் உருவாக்குகின்றது.

உள்நாட்டு முதலாளித்துவத்தின் இரு பகுதியினரும் இணைந்தே காலனி ஆட்சிக்கெதிரான தேசிய சுதந்திர இயக்கத்தை உருவாக்குகின்றனர்.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சி நிலவிய இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலும் இவ்வாறான நிலைமை இருந்தது.

## பொய்முகங்கள்

உரசிப் போகும் மனித முகங்களில்
எவன் சட்டைப்பையிலாவது
என் முகத்தின் பாகங்கள் இருக்கிறதாவென
தேடித் தேடிக் களைத்திருக்கையில்
இவன் அறிமுகமாகியிருக்கிறான்
சொந்த முகத்துடன்.

நாகரிகம் கற்றுத் தருகிறேன்
நடைமுறைகளில் நளினமூட்டுகிறேன்.

யார் யாரோ வந்து
என் முகத்தைப் பறித்துக் கொள்கையில்
இவன் முகத்தைக் கொஞ்சம் பறிக்க
எனக்கிருக்காதா கர்வம்?

- நிஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்கேரிய நாட்டுத் தூதுவரோடு

இலங்கையைப் பொறுத்த வரை இந்திய, சீன நாடுகளைப் போன்றுபிரமாண்டமான ஆயுத, வெகுஜன சுதந்திரப் போராட்டங்கள் நிகழாவிடினும், இலங்கையின் தேசிய முதலாளி வர்க்கம் சுதந்திரத்துக்கான கோரிக்கையை முன்வைக்கத் தவறவில்லை. இன, மொழி, மத வேறுபாடற்ற முறையில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன் காரணமாகவே, யுத்தக் கப்பல்களின் நடமாட்டம் மிகுந்த இரண்டாம் உலக மகா யுத்தகாலத்தில் ஒருதமிழரான சேர். பொன் இராமநாதன் இலங்கை மக்களின் பிரதிநிதியாக துணிந்து லண்டனுக்கு கப்பல் பிரயாணம் செய்து பிரிட்டிஷ் அரசிடம் சுதந்திரக் கோரிக்கைக்காக வாதாடினார். அவர் நாடு திரும்பிய போது அவரது ரதத்தின் குதிரைகளை அவிழ்த்து விட்டு,ஏ.ஈ.குணசிங்காபோன்ற பிரபல தலைவர்களே ரதத்தை கொழும்பு நகர வீதிகளில் இழுத்துச் சென்றனர். அதுமாத்திரமன்றி இலங்கையில் படித்தவர்களுக்கான தொகுதியில் தமிழர்களே வெற்றி பெற்று பாராளுமன்றமும் சென்றனர்.

ஆனால் பித்தானிய அரசு வழங்கிய அரைகுறை சுதந்திரத்தின் காரணமாகவும், தரகு முதலாளி வர்க்கத்தின் காலனித்துவ சார்பு நடவடிக்கைகளாலும், தேசியமுதலாளிவர்க்கம் நாட்டின் இதர உழைக்கும் பிரிவுகளுடன் இணைந்துபூரண சுதந்திரத்துக்கான இயக்கத்தை முன்னெடுத்தது. ஐ. தே. க. தலைமையில் இருந்த இலங்கை முதலாளி வர்க்கத்தில் பண்டாரநாயக்கா ஏற்படுத்திய பிளவு அவ்வாறானதே.

இதன் காரணமாகவே இலங்கையில் இரண்டு கட்சி ஆட்சி முறை உருவானது. தனது காலனித்துவ நாடுகளில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை பிரித்தானிய ஏகாதிபத்தியமும் அவர்களது 'வெஸ்ற்மினிஸ்டர்' ஆட்சிமுறையும் விருப்பமுடன் வரவேற்க வேண்டியநிலையில் இருந்தது. ஏனெனில் வேறுசிலநாடுகளில் (சீனா, வியட்நாம், கொரியா) ஏற்பட்டது போல் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் தொடர்ச்சி சோஷலிச சமூகம் ஒன்றுக்கு இட்டுச் செல்வதைத் தடுப்பதற்கு இந்த இரு கட்சி ஆட்சிமுறை பெரிதும் உதவும் என்பதே பிரித்தானிய காலனியாதிக்கவாதிகளின் எதிர்பார்ப்பாகும்.

1952ல் பண்டாரநாயக்கா தனியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிய போதும், அதன் பலவீனம், மற்றும் அவரது ஏகாதிபத்திய - விரோத சிந்தனைகள் என்பன தவிர்க்க முடியாமல் பிலிப் குணவர்தன போன்றவர்களின் தலைமையிலான இடதுசாரி சக்திகளுடனான கூட்டுக்கு வழிவகுத்தன. அவ்வாறு உருவான மக்கள் ஐக்கிய முன்னணி (எம். ஈ. பி.) என்ற கூட்டே 1956 பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சியை வெறும் எட்டே எட்டு ஸ்தானங்களுக்குள் முடக்கி வரலாறு காணாத வெற்றியை ஈட்டியது.

இந்த வெற்றிக்கான புறச்சூழலை பேச்சாற்றல் மட்டுமன்றி, மிகச் சிறந்த நுண்ணறிவு மிக்க புத்திஜீவித்தனமும் பெற்றவரான பண்டாரநாயக்கா முன்கூட்டியே கணிப்பிட்டிருந்தார்.

இலங்கை மக்களின் தீவிர ஏகாதிபத்திய - ஐ. தே. க. எதிர்ப்பு உணர்வின் உச்ச நிலையாக 1947 பொது வேலை நிறுத்தம், 1953ம் ஆண்டு ஹர்த்தால் என்பவற்றை பண்டாரநாயக்காஇனம்கண்டுகொண்டார். அவற்றிலிருந்த நியாயப்பாட்டையும் அவர் ஏற்றார். அதனாலேயே1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தாலுக்கு அவர் பூரண ஆதரவு தெரிவித்தார்.

**1930களிலேயே இலங்கையில் யாழ்ப்பாணம் உட்பட மூன்று சமஷ்டி அரசுகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை யாழ்ப்பாணத்தில் வைத்தே பண்டாரநாயக்கா அறிவித்தார்.**

இந்த ஹர்த்தாலின் தலைமைச் சக்தியாக தொழிலாள வர்க்கம் இருந்த போதிலும், நகர்ப்புற மத்தியதர எழுதுவினைஞர்களும், முழு ஆசிரிய சமூகமும், விவசாயிகள், மதகுருமார்கள், நாட்டுப்புறவைத்தியர்கள்,கலைஞர்கள் என்போரும் பூரண ஆதரவு வழங்கியிருந்தனர்.

அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர், 1956 தேர்தலுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்து நாட்டுப்புறங்களுக்குச் சென்று ஆய்வு செய்த பின் கொழும்பு திரும்பி, லேக் ஹவுஸ் பத்திரிகையொன்றுக்குகருத்துத்தெரிவிக்கையில் திரு. பண்டாரநாயக்காவின் அமோக தேர்தல் வெற்றியை மிகவும் அச்சொட்டாக குறிப்பிட்டிருந்தார். அவர் மிகச் சரியாக அத்தேர்தலில் ஐ. தே. க. எட்டு ஸ்தானங்களே பெறும்என்றுஆருடம்கூறினார். அவ்வாறே உண்மையில் நடந்தது. (இப்பேராசிரியர் பின்னர் 1977ல் ஜே. ஆர். அமோக வெற்றி பெற்ற பின் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டார்).

பண்டாரநாயக்காவை நீண்ட காலம் வாழ ஏகாதிபத்தியவாதிகளும் உள்நாட்டு பிற்போக்குவாதிகளும் விட்டு வைக்கவில்லை. ஆனால், தனது குறுகிய பிரதமர் பதவிக் காலத்தில் பெறுமதி வாய்ந்த முடிவுகளை அவர் எடுத்தார்.

பிரித்தானிய காலனியாதிக்கத்தின் நேரடி மிச்ச சொச்சமாக, திருகோணமலையிலும், கட்டுநாயக்காவிலும் இருந்த அவர்களது கடற்படைத்தளத்தையும், விமானப் படைத் தளத்தையும் அகற்றினார்.

போக்குவரத்தையும், துறைமுகத்தையும் தேசிய மயமாக்கினார். நெற்காணிமசோதாவையும், காணிச்சீர்திருத்தத்தையும்அமுலாக்கினார். தேயிலை, றப்பர் தோட்ட தேசியமயத்தை அவர் முயற்சித்த போதிலும் அது பின்னர் அவரது மனைவி திருமதி ஸ்ரீமாவோ காலத்திலேயே நிறைவேறியது.



மாணவனாக ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையாக தூளியில்



இதுதவிர, ஐ. தே. க. ஆட்சியினால் கடுமையாக நிராகரிக்கப்பட்டிருந்த தொழிலாளருக்கான வேலைநிறுத்த உரிமை, தொழிற்சங்கம் அமைப்பதற்கான உரிமை, மேதினவிடுமுறை, சோஷலிசநாடுகளுடனானராஜதந்திர வர்த்தக உறவுகள் போன்ற முற்போக்கானநடவடிக்கைகள்எல்லாம் அவரது ஆட்சிக்காலத்திலேயே எடுக்கப்பட்டன.

1956ம் ஆண்டுவரை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, பிரித்தானிய கொள்கையின் மறுபதிப்பாகவே இருந்தது. வெளிநாட்டுக் கொள்கையை சுதந்திரமான நடுநிலைமையான கொள்கையாக பண்டாரநாயக்காவே மாற்றயமைத்தார். எமது பெரிய அண்டை நாடான இந்தியாவுடனும், சோஷலிச நாடான சீனத்துடனும் சிறந்த நட்புறவைப் பேணினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றைப் பாதுகாப்பதில் தீர்க்கமான பங்கு வகிக்கும் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதின் முக்கியத்துவத்தை தீர்க்கதரிசனத்துடன் உணர்ந்து, தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் 'பண்டா - செல்வா ஒப்பந்தம்' என்ற பிரச்சித்திபெற்ற (நடைமுறைப்படுத்தமுடியாமல் போன) ஒப்பந்தத்தை உருவாக்கினார்.

ஜே. ஆர். ஜெயவர்தனாவும் அவரது ஐ. தே. கட்சியினரும் சிங்கள இனவாத பௌத்த பிக்குகளை அழைத்துக் கொண்டு அபகீர்த்தியான "கண்டி யாத்திரை" என்ற தமிழர் விரோத கலகத்தை உருவாக்கி (இன்று ரணிலின் ஐ. தே. க. செய்வது போல) ஒப்பந்தத்தை எதிர்க்காமல் இருந்து, தமிழரசுக் கட்சியும் எதிர்க் குழப்பவேலைசெய்யாமல் இருந்திருந்தால் அவ்வொப்பந்தம் அமுலுக்கு வந்து, இலங்கை ஏனைய நாடுகளுக்கு இனப்பிரச்சினைத் தீர்வில் முன்னுதாரணமாக இருந்திருக்கும்.

தமிழ் அரசியல் தலைமை தனிநாடு பற்றிச் சிந்திப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்பே, அதாவது 20 வருடங்களுக்கு முன்பே (1976ஆம் ஆண்டில் வட்டுக் கோட்டை மகாநாட்டில் தமிழீழத் தீர்மானம் எடுக்கப்பட்டது. பண்டா - செல்வா ஒப்பந்தம் 1957ல் செய்யப்பட்டது) எழுதப்பட்ட இந்த ஒப்பந்தம் இன்றுவரையும் பெறுமதிமிக்க ஒன்றாகவும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படையாகவும் இருந்து வருகின்றது.

சிறுவனாக சகோதரிகளுடன்



ஆனால் துரதிர்ஷ்டவசமாக அமரர் பண்டாரநாயக்கா மீது உள் நோக்கத்துடன் சேறுபூச முயல்பவர்கள், அவரது அரசியல் வாழ்வின் போற்றுதற்குரிய பிரதான பகுதியை மறந்துவிட்டு, அவரது "சிங்களம் மட்டும்" என்ற சந்தர்ப்பவசத்தால்ஏற்பட்டகருத்தைத் தூக்கிப்பிடிக்கின்றனர்.

உண்மையில் வரலாற்று ரீதியாக இலங்கையில் சமஷ்டிக் கொள்கையின் பிதாமகரே பண்டாரநாயக்காதான். 1930களிலேயே இலங்கையில் யாழ்ப்பாணம் உட்பட மூன்று சமஷ்டி அரசுகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை யாழ்ப்பாணத்தில் வைத்தே பண்டாரநாயக்கா அறிவித்தார். அவரது இக்கருத்து அன்றைய சூழ்நிலையில் தமிழர் தரப்பாலேயே வலுவாக எதிர்க்கப்பட்டு எள்ளிநகையாடப்பட்டதை வரலாறு தெரிந்தவர்கள் அறிவர்.

அதன் பின்னர் கூட, 1952ல் களனியில் நடந்த ஐ. தே. க. மாநாட்டில்ஐ.தே.க.ஆட்சிக்கு வந்தால் சிங்களத்தை ஆட்சி மொழியாக்கும் என ஜே. ஆர். ஜெயவர்தனா தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். அந்த அரசியல் சூழ்நிலையின் கைதியாகவே பண்டாரநாயக்கா அதே நிலைக்குள் வீழ்ந்தார்.

இருந்தபோதிலும், பதவிக்கு வந்ததும் அதற்கு எதிராக ஒரு கண்ணியவானாக நடந்து தமிழ் மொழியை தேசிய மொழியாகவும், வடக்கு கிழக்கின் நீதி நிர்வாக மொழியாகவும் ஏற்று ஒப்பந்தம் செய்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்றைய ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க செய்வதுபோல அன்றும் ஜே. ஆரும் ஐ. தே. க. வும் குழப்பம் செய்து ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தனர்.

இந்த விடயத்தில் பண்டாரநாயகா பௌத்த பேரினவாத சக்திகளுக்கு முன்னால் கையாலாகாதவராக மாறினார் என்பது உண்மையே. பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்துவிட்டார் என்று ஒருதலைப்பட்சமாக பிற்காலத்தில் தமிழ் அரசியல்வாதிகள் பிரசாரம் செய்யவும் தவறவில்லை. ஆனால் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதற்கான சூத்திரதாரி யார் என்பதையும், அதில் தங்களது பங்கு என்ன என்பதையும் இவர்கள் மூடிமறைத்தே வருகின்றனர்.

இன்றும் நிலைமை என்ன? பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அடியொற்றி, அதையும் விட எத்தனையோ விடயங்களில் கூடுதலான அதிகாரங்களை வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வழங்கும் தீர்வுத் திட்டத்தை இன்றும் ஐ. தே. க. வும் பௌத்த பேரினவாத சக்திகளும் மூர்க்கமாக எதிர்க்கின்றன. ஆனால் சோகமான விடயமென்னவெனில், அன்று ஒப்பந்தத்தின் பங்காளியாகவிருந்த தமிழ்த் தலைமை (இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி) இன்று பண்டாரநாயக்காவின் புதல்வி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவினால் கொண்டுவரப்பட்ட தீர்வுத் திட்டத்தை ஐ. தே. கட்சியுடன் இணைந்து நின்று எதிர்ப்பதுதான்.


**இன்றைய ஐ. தே. க. தலைவர் ரணில் செய்வதுபோல அன்றும் ஜே. ஆரும் ஐ. தே. க. வும் குழப்பம் செய்து ஒப்பந்தத்தைக் கிழித் தெறிய வைத்தனர்.**

எது எப்படியிருந்தபோதும் பண்டாரநாயக்கா என்ற மனிதரை, மொழி பற்றிய அவரது கொள்கையினூடு அளவிடுவது 'யானை பார்த்த குருடர்களின் கதை' போன்றதே. அவரது முழு வாழ்விலும் இது ஒரு சிறு அங்கமே.

சுதந்திர இலங்கையின் சாதாரணமனிதனை, ஓரளவுசுதந்திர மனிதனாக வாழ வழிதிறந்ததே அவரது பெரும் செயலாகும்.

வரலாற்றை அவர் உருவாக்கவில்லை. வரலாறு அவரை உருவாக்கியது. தனது சக்திக்குரிய ஆளுமையினால் இலங்கைவரலாற்றின்குறிப்பிட்டஒரு காலகட்டத்தை இவர் நெறிப்படுத்தினார். அவர் கடவுளாகவோமகாத்மாவாகவோ இருக்கவில்லை. சாதாரண மனிதனின் தலைவனாக வாழ்ந்தார். ●

தலைவனாக வாக்களிப்பு நிலையத்தில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# உரசிப் போகும் மேகங்கள்

**நான் அழகானவன் என்பது குறித்து ஒருபோதும் பெருமைப்பட்டதில்லை. ஆனால் என் மீது விழுந்து கொத்தும் பார்வைகளால் தினமும் வதைக்கப்படுவதாக உணர்கிறேன். ஆந்தைப் பார்வை, கழுகுப் பார்வை, வல்லூறுப் பார்வை என அந்தப் பார்வைகள் கொடூரமானதாயிருக்கும். வக்கிரம் நிறைந்ததாய் இருக்கும். காமம் கலந்ததாய் இருக்கும். இந்நேரங்களில் உடம்பு முழுவதும் கரப்பான் பூச்சிகள் ஊர்வதாய் உணர்வேன். அதைவிட ஆளாளுக்கு ஒவ்வொரு நடிகையின் பெயரைச் சொல்லி விமர்சனம் வேறு செய்து கொண்டிருந்தனர்.**

கடந்த சில நாட்களாய் எனக்கு புதிதாக ஒரு தலையிடி ஆரம்பித்திருக்கிறது. நான் வழமையாக பிரயாணம் செய்யும் பேரூந்தில் நடத்துநராக இருக்கும் அந்த நடுத்தர வயதுக்காரரின் நடவடிக்கைகள் வெறுப்பேற்றுவதாக உள்ளன. நான் பேரூந்தில் ஏறியதும் அவர் நடந்து கொள்ளும் முறை வித்தியாசமானதாக இருந்தது. எனக்கு எப்படியாவது இருக்கை பெற்றுத்தர முயற்சித்தல், எவரையும் நெருங்க விடாது தடுத்தல், நான் தரிப்பிடத்தில் இறங்கும் போது பத்திரமாக இறக்கிவிட முயலுதல்.... என்றவாறு அவரது நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

"அடச்சீ! என்ன மனிசனப்பா, என்ர வய சில மகள்கூட இருக்கலாம். அப்படியிருக்க..." என் மனம் வெறுப்புடன் சலித்துக் கொண்டது. இந்தப் பிரச்சினைக்கு எவ்விதம் தீர்வு காண்பது? கூடவே இத்தகையதொரு கேள்வியும் என் மனதில் எழுந்தது. அவ்வளவு சுலபமாக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென நான் நம்பவில்லை.

'அந்த மனிதர் நடத்துனராக இருக்கும் பேரூந்தில் ஏறுவதைத் தவிர்த்துவிடலாம்" என்றொரு எண்ணம் உதித்தது. ஆனால் அந்தப் பேரூந்தில் ஏறுவதைத் தவிர்த்து விட்டால் அலுவலகத்திற்கு நேரத்திற்கு சமூகமளிப்பதென்பது கேள்விக்குறியாகிவிடும். அலுவலகத்திற்குப் பிந்தினால் மேலதிகாரியின் கழுகுக் கண்கள் என் உடல் முழுவதும் ஊடுருவும் என்ற பயம். என்ன செய்வது? எந்த வழியும் தோன்றவில்லை.



இராகவன்

வேகமாக வந்து நின்ற பேருந்து என் சிந்தனையைக் கலைத்தது. நான் நிமிர்ந்து பார்த்தேன். அந்த நடத்துநர் என்னையே பார்த்தபடி நின்றிருந்தார். எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. நான் விரைந்துபோய் பேருந்தில் ஏறிக் கொண்டேன்.

நடத்துநர் என்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர முடிந்தது. நல்ல வேளையாக இருக்கையொன்று வெற்றிடமாக இருந்தது. நான் அதில் அமர்ந்துகொண்டேன்.

இப்போது அவரது பார்வையின் தாக்கம் குறைந்த மாதிரி இருந்தது. அதுவும் சிறிது நேரந்தான். அவர் என்னருகில் வந்து,

'யாழ்ப்பாணத்துக்கு ஒரு ரிக்கட் தானே' எழுதி என்னிடம் நீட்டினார். நான் காசை எடுத்து நீட்டியபோது அவர் என்னருகில் இல்லை. நான் அவரிடமிருந்து பெற்ற ரிக்கெட் மட்டும் என்னிடமிருந்தது.

எனக்கு கோபம் அதிகரித்தது. விடயம் எல்லை மீறிச் செல்வதற்கிடையில் இதற்கொரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் எனத் தீர்மானித்தேன். அவருடைய செயற்பாடுகள் எல்லாவற்றிற்கும் நான் இதுவரை மௌனமாய் இருந்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு அந்த நடத்துநரின் செயற்பாடுகளுக்கு எவ்விதம் முற்றுப்புள்ளி வைப்பதெனத் தோன்றவில்லை. நண்பி வாசுகியிடம் எனது பிரச்சினையை எடுத்துச் சொல்லி ஆலோசனை கேட்டேன்.

அவள் சிரித்தபடியே சொன்னாள்...

"சுசீலா! இதுதானடி இளமைக்கால வாழ்க்கையில் சுவாரசியமான பகுதி. இது ஒரு பிரச்சினையே இல்லை. நீ ஏன் வீணாய் மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறாய். என்னைப் பொறுத்த வரை இது எவ்வளவு பெருமைக்குரிய விடயம். நான் என்னை யாராவது காதலிக்க மாட்டார்களா? என ஏங்கி வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நீ என்னடா எண்டால் உன்னை ஒருவன் காதலிக்கிறானே என வேதனை அடைகிறாய்!..."

வாசுகியின் பதில் எனக்கு எரிச்சலூட்டுவதாய் அமைந்தது.

நான் அவளுக்கு எதுவும் சொல்லாமல் மௌனியானேன். பெண்ணாக இருந்து எப்படி இவளால் இவ்விதம் ஒரு பதிலைச் சொல்ல முடிந்தது. எனக்கு கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஒருவன் என்னைக் காதலிப்பதை எப்படி என்னால் இரசிக்க முடியும்...

அவன் காதலிப்பதை இரசிப்பதாயின் நான் அவனைக் காதலித்தாக வேண்டும். அது என்னால் ஒருபோதும் முடியாது. தவிரவும், 'காதல்' என்ற சொல்லில் எனக்கு அவ்வளவாக நம்பிக்கையில்லை....

வேலை செய்தபடியே இருந்த என் மனத்தினுள் இவ்வாறானதொரு போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

வீட்டிலே இந்த விடயத்தை சொல்ல முடியாது. அப்பா கொஞ்சம் வித்தியாசமானவர். "நீ இனிமேல் வேலைக்குப் போக வேண்டாம். அப்ப ஒரு பிரச்சினையும் வராது" என்று ஒரேயடியாக அடித்துச் சொல்லிவிடக்கூடிய பிரகிருதி.

அம்மா அப்படியில்லை. நிறையவே மென்மையானவள். இந்த விடயத்தைச் சொன்னாலே பதறிப்போவாள். "பிள்ளை நேரம் போனாலும் பரவாயில்லை. அந்த பஸ்ஸில போகாதையடியம்மா" என்று சொல்லக்கூடியவள்.

அவளிடம் அலுவலகத்திற்குப் பிந்திப் போனால் மேலதிகாரியின் கழுகுக் கண்கள் என்னை ஊடுருவி அசிங்கப்படுத்துவதைப் பச்சையாக எடுத்துச் சொல்ல என்னால் முடியாது.

எனவே இந்தப் பிரச்சினைக்கு நானே ஒரு தீர்வை வழங்கியாக வேண்டும். அதாவது கண்டுபிடித்தாக வேண்டும். அதுவும் மிகவும் குறுகிய கால இடைவெளியில். இல்லாவிட்டால் "கண்ணே! என் யன்னல்களை பெண்கள் உரசிப் போனதுண்டு மேகங்கள் மாதிரி.... ஆனால் உரசிப்போன வேகத்தில் உட்கார்ந்து மழை பெய்தவள் நீதானடி..." என்று வைரமுத்துவின் கவிதையை ஆதாரப்படுத்தி காதல் கடிதம் எழுதி நீட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று வீட்டிலிருந்து புறப்படும் போதே ஒரு முடிவோடுதான் புறப்பட்டேன்.

'இண்டைக்கு எப்படியும் அந்தப் பிரச்சினைக்குரிய மனிதனிடம் சொல்லிவிட வேணும். உங்கடை நடவடிக்கையள் எனக்கு பிடிக்கல்லேயெண்டு. அது எவ்வளவு சனம் இருந்தாலும் பரவாயில்லை' எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

சரியாக புதிய நேரம் ஒன்பது மணிக்கு அந்த பேருந்து தரிப்பிடத்துக்கு வந்து நின்றது. அதே நடத்துநர். சனம் அதிகமில்லை. நான் விரைந்து போய் ஏறிக்கொண்டேன். யன்னலோர இருக்கையொன்று கிடைத்தது. சந்தோஷத்துடன் அமர்ந்தேன்.

பிரச்சினைக்குரிய அந்த தினம் என்னிடம் வழியும் நடத்துநர், வழமைபோல் தானே ரிக்கற்றை எழுதி என்னிடம் நீட்டினார். நான் அடக்க முடியாத கோபத்தோடு அவரை நோக்கினேன். அவர் கண்கள் கலங்கியிருந்தன.

அவர் வேதனை நிறைந்த குரலில் எனக்கு மட்டும் கேட்கக்கூடியதாக பேச ஆரம்பித்தார்.

"தங்கச்சி! எனக்கு உம்மைப் பார்க்கிற நேரமெல்லாம் என்ர தங்கச்சியின்ர ஞாபகம்தான் வருது. அவவும் அசலா உம்மைப் போலவே இருப்பார். நான் என்ர தங்கைச்சியே மறுபிறவி எடுத்து வந்தாவோ எண்டு உம்மைக் காணுற நேரமெல்லாம் ஆச்சரியப்படுறன்..."

அவர் சொல்லி முடிந்ததும் நான் கேட்டேன், "உங்கட தங்கச்சி இப்ப எங்கை?" என்னுடைய கேள்வி அவரை நிறையப் பாதித்தது.

மீண்டும் கண்கலங்கியது. ஈரம் மிகுந்து வார்த்தைகள் வெளிப்பட்டன. "அவ தொண்ணூற்று எட்டில லயன் எயார் விமானத்தில பலாலியில இருந்து கொழும்புக்கு போகேக்க மன்னார்க் கடலில பிளேன் விழுந்து.... மேலே சொல்ல முடியாமல் குலுங்கினார். நான் என்னை நினைத்து கூனிக் குறுகினேன். •

## பொய்முகங்கள்

இறந்துபோன நீரோ மன்னன்
எமது மண்ணிலே
நூறாய்ப் பிறந்தான்

எதிரியின் முகாமில்
இறைச்சி புசித்தான்

நாட்டின் மீது
தீ படர்கையில்
சிம்மாசனம் பற்றியே
சிந்தித்திருந்தான்


வீட்டுக் கூரைகள்
பற்றியெரிகையில்
உடன்படிக்கையில்
ஒடுங்கிக் கொண்டான்

கொலைகளை
வரவுக் கணக்கில்
எழுதிக் குவித்தான்

மண்ணை நேசித்து
மடிந்தவரெல்லாம்
மடையர்கள் என்று
பட்டம் சூட்டினான்

சாக்கடை தோறும்
புழுத்துக் கிடக்கிற
பிணங்களைப் புணர்கிற
மன்னனை
நான் அறிவேன்
என் தேச மக்களும் அறிவர்.

– இளவாலை விஜயேந்திரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலை, டென்ஷன் தீர யோகம்...





கவலைகள், மன அழுத்தங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள் இவைதான் இன்று பத்திரிகைகளில் நிறைந்திருக்கும் செய்திகள். மனநோயாளர்களின் எண்ணிக்கை கிடுகிடுவென அதிகரிக்கின்றது. மன அழுத்தம் மன இறுக்கங்களினால் ஏற்படும் நோய்களும் எக்கச்சக்கம். இவற்றின் காரணமாக ஏற்படும் தற்கொலை வீதங்களும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இலங்கையின் வடகிழக்கு யுத்தம் கடந்த 17 வருடங்களுக்கு மேலாக மனித மனங்களைப் பாதித்து வருகின்றது. பயம், பயம், பயம், டென்ஷன், டென்ஷன். இப்படி பயத்திலும் டென்ஷனிலும் அதிகமானோர் மன நோயாளிகளாகின்றனர். மறுபுறம் குடும்பம், சொத்து சுகங்களை இழந்து அநாதையாகி, அகதியாக அதனால் ஏற்படும் துன்ப துயரங்களின் தாக்கம் மன நோயாளர்களை உருவாக்குகின்றது.

ஆகவே இந்த கவலைகளையும் டென்ஷன்களையும் தீர்க்க என்ன வழி?

இதுபற்றி உலகளாவிய ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகமும் கவலை, டென்ஷனால் பாதிக்கப்படுவதே இந்த ஆய்வுகளுக்கான காரணம்.

இதுபற்றி அமெரிக்காவில் ஒரு பெரிய சர்ச்சையே நடைபெற்று வருகின்றது. கடுமையான உடற்பயிற்சிகள் செய்வதன் மூலமே மனத்திலிருந்து இறுக்கமும் கவலையும் மறையும் என்கின்றனர் ஒரு சாரார். அப்படி இல்லை என்று மறு சாராரும் வாதிட்டு வருகின்றனர்.

வாழ்க்கையில் நெருக்கடிகளினால் மன இறுக்கமும் கவலையும் பீடித்த பலர் உடற்பயிற்சி நிலையங்களுக்கோ, விளையாட்டு மைதானங்களுக்கோ சென்று வியர்க்க விறுவிறுக்க உடற்பயிற்சிகளை செய்து வருகிறார்கள்.

உடற்பயிற்சிக்குப் பிறகு தசைகளில் பரவியிருக்கும் களைப்பு உணர்வு, உடலில் அநாவசியமான தசைகள் மறைந்து எடை குறைந்த நிலை, உடற்பயிற்சியில் மனதை ஈடுபடுத்தியதால் ஏற்பட்ட நிம்மதி ஆகியவை ஒரு சந்தோஷமான மனநிலையை ஏற்படுத்தும் என சில நிபுணர்கள் சொல்கிறார்கள்.

ஆனால், அண்மைக்கால ஆய்வுகள் நேர்மாறான முடிவுகளையே தந்திருக்கின்றமை கடுமையான உடற்பயிற்சிகளுக்குப் பிறகு மனத்திலிருந்த இருக்கமும் கவலையும் மறைவதில்லை. அவற்றின் கடுமை குறைவது கூட இல்லை எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கடுமையான உடற்பயிற்சிகளை விட யோகா, தியானம் போன்ற மனப் பயிற்சிகள் மன இறுக்கத்தையும் கவலையையும் குறைப்பதில் அதிக பயனுள்ளவையாக இருக்கின்றன.

யோகா முறைகளில் செய்யப்படும் நளினமான உடலசைவுகள் உடலின் வலுவைக் கூட்டுவதோடு இதயத்திற்கும் வலுவூட்டிவிடுகின்றன.

மனம் உற்சாகமடைந்து ஆத்மா அமைதியடைகின்றது. இத்தகைய மனப் பயிற்சிகளைக் கற்றுக் கொடுக்கும் நிலையங்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் பெருகி வருகின்றன.

இதனால் யோகாவின் தாயகம் எனக் கருதப்படும் இந்தியாவுக்கு வெளிநாட்டவர்கள் படையெடுக்கின்றனர். கற்பதற்காக என்ற பல பேர், கற்று யோகா நிலையங்கள் அமைக்க என்று பல பேர் வந்து போகிறார்கள்.

சினிமா நட்சத்திரங்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போய் வருவது போல இன்று யோகாசன நிபுணர்களும் அடிக்கடி லண்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், அவுஸ்திரேலியா, கனடா என்று சென்று வருகின்றனர். இவர்களுக்கு அங்கு ஏகப்பட்ட மவுசு. பணத் தையும் அள்ளிக்கட்டிக் கொண்டு வர முடியும்.

அண்மையில் இலங்கைக்குக் கூட இந்திய விவேகானந்த கேந்திரத்திலிருந்து யோக சிரோன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மணி தீபக் பந்து என்பவர் வருகை தந்து இந்திய கலாசார நிலையத்தில் ருஹுணு பல்கலைக்கழகம், பறிபாத கல்வியியல் கல்லூரிகளிலும் யோகாசன வகுப்புக்களை நடத்தினார். கல்வி அமைச்சும், ருஹுணு பல்கலைக்கழகமும் இணைந்து இவரை வரவழைத்திருந்தன.

மனப் பயிற்சிகளின்போது உடலில் என்டார்பின்கள் பெருக்கெடுப்பதில்லை. கடுமையான உடற்பயிற்சியினால் ஏற்படும் போதையும் ஏற்படுவதில்லை. வியர்ப்பதும் இல்லை. அமெரிக்க விஞ்ஞானிகளின் ஆய்வுகள் பெண்களின் மன இறுக்கத்தையும் கவலைகளையும் போக்குவதில் மனப்பயிற்சிகள் பேருதவி செய்கின்றன என்று தெரிவிக்கின்றன.

அதுமட்டுமன்றி உடற்பயிற்சி செய்பவர்களை விட மனப்பயிற்சி செய்பவர்கள் அதிக ஆற்றலும் உற்சாகமும் தன்னம்பிக்கையும் உடையவர்களாகியிருப்பதாகவும் தெரிய வந்திருக்கின்றது.

கிட்டத்தட்ட 16 ஆண்டுகள் ஆய்வு செய்த பிறகு கடுமையான உடற்பயிற்சிகள் மன இறுக்கத்தையும் கவலைகளையும் குறைப்பதற்கு உதவவில்லை என்று ஆய்வாளர்கள் முடிவு செய்திருக்கின்றார்கள். அவை உடலளவில் மட்டுமே நல்ல பலனை அளிக்கின்றன. உடலின் எடை குறைவதால் சுறுசுறுப்பும் மிகும் என்பது உண்மையே.



உடற் பயிற்சி செய்யாமலேயே உணவுக் கட்டுப்பாட்டின் மூலமாக உடல் எடையைக் குறைக்க முடியும் என்பதால் இதுவும் முக்கியத்துவத்தை இழந்து விடுகின்றது.

உடற்பயிற்சித் திட்டம் ஒன்றை முழுமையாக நிறைவேற்றி முடிக்கும் போது மனதில் ஒரு சாதனை படைத்த உணர்வும் திருப்தியும் ஏற்படும். ஆனால் ஒரு நாவலை எழுதி முடிப்பது போன்ற காரியங்களும் அதே மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

இவ்வாறு உடற்பயிற்சியால் உடலில் விசேஷமான நரம்பு, ரசாயன அல்லது உயிரியல் விளைவை ஏற்படுத்தி உணர்வுகளையோ, மூளையையோ மேம்படுத்தி மன இறுக்கத்தைத் தவிர்க்க முடியும் என்ற சான்றுகள் இதுவரை ஏதும் கிட்டவில்லை.

மாறாக பல கடுமையான தேகப்பயிற்சிகளைச் செய்து முடித்த பிறகு மனக் கவலைகளும் இறுக்கமும் அதிகமாகி விடுவதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. தன்னைத் தானே தண்டித்துக்கொள்ளும் உபாயமாகக் கூட அவை அமைந்து விடும்.

நீண்டகாலமாகவே ஆய்வாளர்கள் கடுமையாக உடற்பயிற்சி செய்வதால் இதயத் துடிப்பு வீதம் அதிகமாகும். மனதில் அமைதியையும் சந்தோஷத்தையும் உண்டாக்குகின்றன. என்டர்பின் என்ற ரசாயனங்கள் பெருக்கெடுததோடும். உடலின் வெப்பநிலையை உயர்த்தி தசைகளையும் நரம்புகளையும் தளரச் செய்யும் என்றெல்லாம் கூறி வந்திருக்கிறார்கள். உடற்பயிற்சியின் அளவு அதிகமாக அதிகமாக இத்தகைய நல் விளைவுகளின் அளவும் அதிகமாகும் என்றும் கூறி வந்திருக்கிறார்கள்.

ஆனால் உண்மை நிலை என்ன? மூளையில் என்டார்பின் அளவு அதிகமானால் சுகமான உணர்வுகள் உண்டாவது என்பதும் உண்மைதான். ஆனால் உடற்பயிற்சி செய்வதால் உடலில் மட்டுமே என்டார்பின் செறிவு அதிகரிக்கிறதே ஒழிய மூளையில் அல்ல.

ரத்தவோட்டத்தில் தோன்றும் என்டார்பின்கள் மூளைக்குள் நுழையாமல் தடுக்கப்படுகின்றன. இந்த என்டார் பின்கள் தசைகளின் துன்பத்தை மழுக்க மட்டுமே உதவும். மூளையை உற்சாகப்படுத்தாது.





உடற்பயிற்சி செய்யும் போது உடல் வெப்பநிலை உயர்வதால் மனநிலை மேம்படும் என்ற கருத்தும் தவறு என்று நிருபிக்கப்பட்டுள்ளது.


தினசரி கவலைகளிலிருந்தும் பொறுப்புக்களிலிருந்தும் கவனத்தைத் திசைமாற்றுவதைத் தவிர கடுமையான உடற்பயிற்சிகளின் பங்கு ஏதுமில்லை. அதைவிட அமைதியாக அரை மணி நேரம் தியானம் செய்வது அதிக பலனை அளிப்பதுடன் அடல் சோர்வு ஏற்படாமலும் தவிர்க்கின்றது. யோகாசனங்களும், சுவாசப்பயிற்சிகளும் மனதை ஒருமைப்படுத்துவதுடன் உடலுக்கும் தேவையான பயிற்சிகளை அளிக்கின்றன.

E. JOHNSON (B.A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









வின்கான்சின் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட ஓர் ஆய்வில் ஒரு மாணவர் குழு 20 நிமிடங்களுக்கு 'ட்ரெட்மில்' எனப்படும் வேக நடை இயந்திரத்தில் நடக்குமாறும் இன்னொரு குழு அமைதியாக ஒரு மந்திரத்தை ஜபித்தவாறு ஆழ்ந்த சுவாசங்களை விட்டுக்கொண்டிருக்குமாறும் செய்யப்பட்டது. மூன்றாவது குழு ஒலி புகாமல் பாதுகாக்கப்பட்ட ஒரு அறையில் சும்மா உட்கார்ந்திருந்தது.

சோதனை முடிந்த பிறகு மூன்று குழுக்களுமே ஒரே அளவில் மன இறுக்கமும் கவலைகளும் தணிந்திருந்தாக உணர்ந்தன. இவ்வாறு பல சோதனைகளை நடத்திய பிறகு கடுமையான உடற்பயிற்சி செய்தாலும் மென்மையாக தியானம் மற்றும் சுவாசப் பயிற்சி செய்தாலும் ஒரே அளவான மன் நிம்மதியே கிடைக்கின்றது என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்தார்கள். கடுமையான உடற்பயிற்சி செய்ய முடியாதவர்களுக்கு இது ஒரு நல்ல செய்தி.

எந்தக் காரியமானாலும் சரி அது நம் மனதுக்குப் பிடித்தமானதாக இருந்து விட்டால் அந்தக் காரியத்தைச் செய்துமுடித்த பிறகு மனதில் நிம்மதியும் சந்தோஷமும் உண்டாகும். கடுமையான உடற் பயிற்சி செய்ய விரும்புபவர்கள் அப்படியே செய்யலாம். தோட்ட வேலை, மெது நடை போன்ற மென்மையான பயிற்சிகளும் அதே அளவில் நிம்மதியும் சந்தோஷமும் உண்டாக்கும். வீட்டு வேலைகளில் முழு மனதுடன் ஈடுபடுகின்ற பெண்களுக்கும் இதே பலன்கள் கிடைக்கும். தன் வீடு பளிச்சென்று இருக்க வேண்டும் என்ற ஆசையுடன் துடைத்துக் கொண்டும் பெருக்கிக் கொண்டும் இருக்கின்ற பெண்களுக்கு இது மிகவும் பொருந்தும்.


நடப்பது, ஓடுவது நீந்துவது போன்று ஒரே மாதிரியான உடலசைவுகளின் மூலம் செய்யப்படும் உடற் பயிற்சிகள் மனக் கவலைகளையும் இறுக்கங்களையும் கணிசமானளவு குறைக்கின்றன என்று கனடா நாட்டு ஆய்வாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஒருவிதமான சீரான கதியில் செய்யப்படும் எல்லாச் செயல்களுமே மனதில் அமைதியை உண்டாக்குகின்றன. தியானம் அல்லது சுவாசப் பயிற்சியின் போது ஓர் ஒற்றைச் சொல் மந்திரத்தை திரும்ப திரும்ப மனதுக்குள் சொல்லிக் கொண்டிருப்பது நல்ல பயனைத் தரும். இதன் மூலம் வேண்டாத நினைவுகள் மனதில் படையெடுப்பதைத் தடுக்கலாம். பெண்மணிகள் வீட்டு வேலைகளைச் செய்யும்போது ஏதாவது சுலோகத்தை முணு முணுத்துக் கொண்டிருப்பது நல்லது.

கனடாவில் செய்யப்பட்ட ஓர் ஆய்வில் இரண்டு குழுவினர் அரை மணி நேரத்துக்கு அசையாது சைக்கிளை மிதித்தார்கள். ஒரு குழுவினர் மனதுக்குள் ஏதோ ஜபித்தவாறு மிதித்தார்கள். இரண்டு குழுவினரும் ஒரே வேகத்தில் சைக்கிளை மிதித்த போதும் ஜபம் செய்தவர்கள் செலவழித்த ஒக்ஸிஜன் மிகக் குறைவாக இருந்தது. கடுமையாக உழைத்த போதுகூட அவர்களுடைய உடல்கள் இறுக்கமடையவில்லை என இது நிருபித்தது.

இறுதியாக ஆய்வாளர்கள் சொல்லுவது என்னவெனில் கடுமையான உடற்பயிற்சி உங்களுக்குப் பிடித்தமானது என்றால் தாராளமாகச் செய்யுங்கள். ஆனால் பயிற்சி முடிந்ததும் அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து கால் மணி நேரம் தியானமும் சமநிலை சுவாசப் பயிற்சியும் செய்யுங்கள். மனதிலுள்ள பாரங்களெல்லாம் மறைந்துவிடும். ●

## அச்சந் தவிர்



(ஜென் குட்டிக்கதை)

தளபதி ஒருவருக்கு அழகான கோப்பை ஒன்று அன்பளிப்பாகக் கிடைத்தது. அவர் அதைத் தன் மேசைமேல் வைத்து அழகு பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

பிறகு அதைக் கையிலெடுத்துத் தடவிப் பார்த்தார். கைகளில் உருட்டிப் பார்த்தார்.

பிறகு, மெல்லத் தூக்கிப்போட்டுப் பிடித்துப் பார்த்தார்.

அப்போது அது சட்டெனக் கைநழுவி கீழே விழுந்துவிடும் போலிருந்தது.

அவர் கிடுகலங்கிப் போய் சட்டெனப் பிடித்துக் கீழே விழவிடாமல் மேசைமேல் வைத்து விட்டார். குப்பென்று வியர்த்துவிட்டது.

அது அவருக்கே வியப்பாக இருந்தது. 'எத்தனை போர்க்களங்களில் பகைவர் படை நடுங்கவே அஞ்சாமல் பாய்ந்திருக்கிறோம். பாய்ந்து வரும் வாள் கண்டு, நடுங்காமல் எதிர்த்துத் தாக்கியிருக்கிறோம். அப்போதெல்லாம் திடுக்கிடாத என் மனம், இந்தச் சின்னக் கோப்பை கைநழுவும்போது திடுக்கிட்டுவிட்டதே! என்ன அதிசயம் இது!' என்று வியந்தார் தளபதி.

சற்று ஆறஅமர சிந்தித்தபோது உண்மை புலனாயிற்று.


அந்தப் பொருளின்மீது கொண்ட பற்றுத்தான் அந்த அச்சத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்தார்.

உடனே அந்தக் கோப்பையைத் தூக்கி எறிந்து உடைத்து நிம்மதியடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் சிமிட்டும் கமெராக்கள்








கிறிஸ்டினா சோனி - DCS-P1 என்ற இலக்ரோனிக் கமெரா ஒன்றை சோனி நிறுவனம் அறிமுகப்படுத்துகின்றது. இந்த மொடலில் உலகிலுள்ள ஆகச் சிறிய கமெராவாக இது அமையும் என்று நம்பப்படுகிறது.

அண்மையில் நடைபெறவுள்ள 45 நாடுகளின் 1633 கம்பனிகள் கலந்துகொள்ளவுள்ள 'போட்டோகினா' வர்த்தக சந்தையில் இது பரபரப்பை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.


ஜப்பான் கஸினோ கொம்ப்யூட்டர் நிறுவனம் சட்டலைட் நேவி PRT-29P என்ற கைக்கடிகாரத்தின் உருவத்தில் புதுவகை கமெராவை அறிமுகப்படுத்தியுள்ளது. 84 கிராம் பாரமுள்ள இதன் விலை 59000 யென் அதாவது 550 டொலராகும்.




ஜப்பான் கஸினோ கொம்ப்யூட்டர் நிறுவனம் சட்டலைட் நேவி PRT-29P என்ற கைக்கடிகாரத்தின் உருவத்தில் புதுவகை கமெராவை அறிமுகப்படுத்தியுள்ளது. 84 கிராம் பாரமுள்ள இதன் விலை 59000 யென் அதாவது 550 டொலராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ரஃப் விடைபெறுகின்றார்...

என் பாதை இனிவேறு
நான்
புதிய பாதையொன்றில்
புறப்பட்டுச்
செல்கின்றேன்
இதயங்கள் இருக்கின்ற
இனியவர்கள்
செல்லுகின்ற
புதிய அப்பாதையில்
நான்
புறப்பட்டுச் செல்கின்றேன்!

கற்பனாவாதம் பேசிக்
காலத்தை வீணடிக்கும்
விற்பன்னர்களிலிருந்து
விலகி நான்
செல்கின்றேன்!

என்றன் பாதையிலே
எத்தனையோ இன்னல்கள்
ஒன்றன்
பின் ஒன்றாய்
ஒழுங்காக வந்திடினும்
அத்தனை
இன்னல்களையும்
அமைதியுடன்
தாண்டுகிறேன்
இன்னல்களைத்
தாண்டுகையில்
இரத்தம் வடிகிறது
தடைகளைத்
தாண்டுகையில்
தாடை உடைகிறது.
இதயங்கள் இருக்கின்ற
இனியவர்கள்
சொல்லுகின்ற
புதிய அப்பாதையில்
நான்
புறப்பட்டுச்
செல்லுகின்றேன்!

இரத்தம் பெருகுகிறது
இன்னல் குவிகிறது
ஓங்கி வரும் ஓசையுடன்
ஓடிவரும் டாங்கிகள்
தாங்கி வரும் குண்டுகள்
தடைகளினை அதிகரிக்கும்
எங்களிடம் எதுவுமில்லை
எங்களிடம் இருப்பதுவோ
இறைசக்தி மாத்திரமே!

ஆயிரம் விமானங்கள்
அணுகுண்டு ஆயுதங்கள்
எங்கள் உயிர்களை
எடுத்துச் சென்றாலும்
அந்த உயிர்களின்
அழகான இதயங்கள்
எங்கள் இயக்கத்தில்
எழுச்சியையே
தோற்றுவிக்கும்
எங்கள் பாதையில்
இனித் தெளிவு
பிறந்து விடும்!

அந்தப் பாதையிலே
அணிசேர்ந்து
செல்லுகின்றேன்
என்பாதை இனி வேறு
நான்
புதிய பாதையொன்றில்
புறப்பட்டுச்
செல்லுகின்றேன்!

(தினகரன் 1975-10-16)

## ஆளுமைமிக்க ஒரு அரசியல்வாதிக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்கள்

அமுது
செப்டம்பர் 2000

**அமைச்சர் அஷ்ரஃப் முஸ்லிம்களின் தலைவராக இருந்து முஸ்லிம் மக்களினதும் சிறுபான்மையினரினதும் உரிமைகளுக்காக குரல் கொடுத்த அதேவேளை அதற்கும் மேலாக அதற்குள்ளேயே ஒடுங்கி விடாது தேசியரீதியிலும் முழு இலங்கை வாழ் மக்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஆற்றல் மிக்க தலைவராகவும் விளங்கினார்.**

- மாண்புமிகு ஜனாதிபதி
சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க

**இலங்கையின் தேசிய அரசியலில் முஸ்லிம்களின் தனித்துவத்தையும் இன அடையாளங்களையும் எவருமே புறக்கணிக்க முடியாத வகையிலே புதிய அரசியல் பரிமாணமாக உயர வைத்தவர் அமைச்சர் அஷ்ரஃப்.**


- முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்ஷித்

**மரணம் எப்பொழுது வரும் என்பதைச் சந்தோஷத்துடன் சதா எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது என்னைப் போன்ற மனிதனுக்கு மரணம் என்பது வாழ்வின் முடிவல்ல, வந்த இடத்திற்குச் சென்றடையும் பயணத்தின் பூர்த்தி அது! ஆகவே தான் மரண அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் எனது எழுத்துப் பணியும் ஏனைய பணிகளும் தொடர்கின்றன.**

- மறைந்த அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரஃப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் தூவிய மலர்கள்

## கண்ணீர்

காதல் விருட்சம்
ஓங்கி வளர
ஊற்றப்படும் நீர்ப்பாசனம்!

நம் தேசத்து மக்கள்
சிந்தும் தேசிய நீர்!

ஆனந்தம் கொண்டாடும்
விழிகளுக்கு பூமாலை!
சோதனையால் திண்டாடும்
இதயங்களுக்கு தீமாலை!

பெண்களின் ஆயுதம்

மன உளைச்சல்களின்
வடிகால்!

இறந்தோருக்கு
வழங்கப்படும்
இறுதி அஞ்சலி!

சாதனைகளின்
பன்னீர்!
வேதனைகளின்
வெந்நீர்!

குழந்தைகளின்
முதல் கண்ணீர்
வாழ்க்கை ஊர்வலத்திற்கு
வெள்ளோட்டம்.

காதலதும்
சாதலதும்
மொழி!

- இர்பானா பீர்முஹம்மட்,
ஓட்டமாவடி-01.

## கூண்டு

எலும்புகள் அற்ற உடலால்
நகர்கின்றோம்.
நமது குடிலை நாமே சுமந்து
நகர்ந்தவண்ணம் உள்ளோம்.
ஆபத்து வேளைகளில்
அடைக்கலம் தருவது
இந்த ஓடு மட்டுமே.

உண்கின்றோம் உறங்குகின்றோம்
உணர்வுகள் எமக்கு உண்டு.
தலையின் உணர்கொம்புகளே
அதற்குச் சான்று.

பாயவும்
தருணம் பார்த்துத் தப்பி ஓடவும்
எம்மால் முடியாது.
ஓட்டினுள் உடலைச் சுருட்டி
ஒளிந்து கொள்ளத்தான் முடியும்.

எமது குடில்கள்
எவ்வேளையும் நொறுக்கப்படலாம்
எமது உடல்கள்
எவ்வேளையிலும் நசுக்கப்படலாம்
ஆயினும்,
பாதங்களில் ஒட்டி இரத்தத்தை
உறிஞ்சிக் குடிக்கும்
அட்டையின் அகோரம்
எம்மிடம் இல்லை.
பட்டவுடன் சுணைக்கும்
நச்சு உரோமம்
எம்மில் வளர்வது இல்லை.

செத்தபின்னுங் கூட
சதையையும் குருதியையும்
காகங்களுக்குத் தீனியாக
விட்டுச் செல்கிறோம்.

- வை. சுந்தரேசன்

## சங்கீதம்

அவள் - அவன் கண்கள்
பலமுறை சந்தித்திருக்கின்றன.
அவையெல்லாம்
அர்த்தமற்ற கோலங்கள்.

இப்போது, இந்த சந்திப்பில்
ஒரு சங்கீதம் தெரிகிறது.
இரண்டு வேறு வேறு 'ஓடைகள்'
சங்கமமாகப் போகும் ஆனந்தத்தின்
மௌனமானசங்கீதம்...!

- வடலியூர் ராஜா

## காயங்கள்

உறிஞ்சி உறிஞ்சி
கனவுகளைக் குடித்தது
இரவுப் பெரும் நுளம்பு...!

கவலை இரத்தத்தைக்
குடித்த இவ்விரவு...
சாகுமினி!
காந்தத்தின் உள்ளேறி
உருக்கும் வலிமை மிகு
கண்ணீர் பட்டு
இம் மெல்லிய காற்றும்
பிழைக்காது...!

பரிவிழந்து சிணுங்கித் திரிகிற...
உணர்வுத் தேனீ
சிறு மலர்களிடம் இளைப்பாறிட
உதிர்ந்திடும் மென்மலர்கள்!

வர்ணங்களை அருந்திக்
கொண்டிருக்கிற ஓவியத்தின்
மனத் தாகம் என்னுள்!

இறகுகளால் நெய்த
உன் பஞ்சுக் கூட்டுக்குள்
இந்த நெருப்பை வரவேற்காதே!

பனித்துளிக் கோலம் போட
சூரியனால் முடியாது!

என் காயங்கள் உன் பசியாற்றாது
இது - ரணங்களுக்கு
முட்களால் மருந்திடும் உலகு!

வாழ்க்கையின் மருங்குகளில்
பூங்கன்றுகளை நட்டு வளர்த்தேன்
நறுமணத்தை நுகர விடாமல்
மூச்சை நிறுத்திவிட்டார்கள்!

நீ - கொத்திப் பறக்க
பழமல்ல இது - தணல்!!

நீ சூடிக்கொள்ள
பூக்களல்ல
இவை - காயங்கள்!!

- அனார்

## மரணிக்கும் மழலை வாழ்க்கை

மனித வாழ்க்கையின்
ஆரம்ப அத்தியாயம்
இன்று
மண்ணோடு மறைகின்றது
எதிர்காலத் தூண்களென்று
எண்ணிய - எம் மழலை
மயானமாய் கிடக்கிறது...

இருபத்தோராம் நூற்றாண்டின்
இணையற்ற வித்தைகளை
விருப்புடன் படிக்கவும்
காணவும் முடியாமல்
அதிக முகாம்களில்
அல்லல் அடையும்
ஆயிரமாயிரம்
பிஞ்சு இதயங்கள்
வெம்பி வெடிக்குமுன்பே
விடிவு வரவேண்டும்

துள்ளித்திரிந்து விளையாடும்
துடுப்பான எடுப்பான
எம் செல்வங்கள்
துளிர்விடும் போதினிலே
சருகாகும் சாபம் நீங்கி
சமத்துவம் பெற்று என்றும்
மகத்துவம் அடைவதற்கு
மலரவேண்டும் இங்கு
சமாதானப் பூவொன்று.

- மாணிக்கன் இளங்கோ,
முன்னம்போடிவெட்டை.

## ஒரு நிமிட நிஜம்!

யுத்த ஒலி நயத்தை
உள்வாங்கப் பழகிவிட்டது
மனசு!

சமாதியில்
சயனித்தபடி சமத்துவம்!

ரணங்களின் மீது
வாழ்க்கை இளைப்பாற...

வறுமை விழித்தெழப்
புது அத்தியாயம்
நடக்கிறது இங்கே...!

சாபங்களைச்
சுமந்து கொண்டு
சலனங்களோடு சமூகம்!

புவிவாழ்வை நிராகரித்தபடி
புது ஒக்ஸிஜன் நுகர
நினைக்கும் மனம் -

சமரச வெண்புறா
சுகவாழ்வு கொணர்ந்தால்
மட்டுமே பூமிக்கு மீள
விரும்புகிறது.

- நியாஸ் முஸாதிக்
கிண்ணியா-05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















பஞ்சமா பாதகங்களுடன் இலஞ்சத்திற்கும் கொஞ்சம் சம்பந்தம் உண்டு. ஆறாவது பாதகம் என்று கூடச் சொல்லலாம். பஞ்சமா பாதகங்களையும் விஞ்சி அங்கிங்கெனாது எல்லா இடங்களிலும் நெஞ்சை நிமிர்த்தி நிற்கிறது லஞ்சம்.

தமது காரியம் ஒன்றை சாதித்துக்கொள்வதற்கு முறையற்ற வழிகளில் வழங்கப்படும் கொடுப்பனவு என்று லஞ்சத்தை வரையறுக்கலாம்.

லஞ்சம் என்ற வார்த்தைக்கு இதுதான் அர்த்தம் என்கிற தெளிவுநிலை இப்போதில்லை. அது பல வடிவங்களை, பல பெயர்களை பெற்றுப் புதுப்புது அவதாரங்களை எடுத்தபடி இருக்கிறது.

அரசியல்வாதிகள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற தேர்தல்களின்போது பொதுமக்களுக்கு அள்ளி வீசும் வாக்குறுதிகளும் இன்று லஞ்சம் என்றே வர்ணிக்கப்படுகின்றது.

பாலியல் லஞ்சம் என்றும் ஒரு வகை உண்டு. திரைப்பட இயக்குநர்களிடம் 'சான்ஸ்' கேட்டு செல்லும் நடிகையாகும் விருப்பமுள்ள பெண்களிடமிருந்து வாடிவீடுகளில் வைத்து இது வாங்கப்படுவதாக திரையுலக வட்டாரங்களில் ஒரு பேச்சு உண்டு.

சில அரசியல்வாதிகள் தம்மிடம் வேலை கேட்டு வரும் கிராமத்து இளம் பெண்களிடம் பலாத்காரமாக கற்பை பறிக்கும் சம்பவங்களை வெறுமனே பாலியல் வல்லுறவு என்று சொல்வதில்லை. பாலியல் லஞ்சம் என்றே அடையாளப்படுத்துகின்றனர்.

லஞ்சம் என்பதை கைலஞ்சம், கையூட்டு, சந்தோஷம், அன்பளிப்பு என்றும் கூறுவர். பகா, ஜராவ என்ற சிங்கள சொற்கள் கூட தமிழிலும் சகஜமாக பாவிக்கப்பட்டு வருகின்றது.

புராண காலங்களில் கூட லஞ்சம் ஒரு ஜனரஞ்சகமான கொடுப்பனவாகவே புழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

அக்காலத்தில் கிராமத்துத் தலைமைக்காரரிடம் ஏதாவது காரியம் ஆக வேண்டுமானால் வேட்டை இறைச்சி, தேன், எள், குரக்கன் போன்ற பொருட்களை ஒரு தட்டில் வைத்து எடுத்துச் செல்வர். அதில் கூடவே பழைய கித்துள் கள்ளையும் ஒரு முட்டியிலிட்டு எடுத்துச் செல்ல மறப்பதில்லை.

**லஞ்சம் எடுப்பது மட்டுமல்ல குற்றவியல் சட்டத்தின்படி லஞ்சம் கொடுப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.**

தூரத்திலிருந்தே இதனைப் பார்க்கும் கிராமத் தலைமைக்காரர் குடியானவனின் தேவையை உடனடியாகவே நிறைவேற்றிக் கொடுத்து விடுவார்.

கடவுளிடம் தேவைகளைக் கூறி வரம் பெற்றுக்கொள்ள வருபவர்கள் கூட மலர்த்தட்டு, பழத்தட்டு என்பவற்றில் பணத்தையும் வைத்துக் கொண்டு வருவர். என்றாலும் முதலில் பூசாரிகளின் மனதை வெல்ல வேண்டும்.

பூசகர் எட்டிப் பார்ப்பார். தட்டில் மஞ்சள் தாள் மின்னினால் விஷயம் தாமதமாகும். பச்சைத் தாள் மின்னிவிட்டால் உடனே பச்சைக்கொடிதான். சிக்னல் விழுந்துவிடும். அவரின் கருணைக் கண்கள் திறந்துவிடும். பக்தனை உடனே வருமாறு அவர் அன்போடு அழைப்பார்.

இப்படி கடவுளிடமே காரியங்கள் நிறைவேற்றுவதற்கு கொடுக்கப்படும் காணிக்கை என்ற புனிதமான சொல், 'ஜராவ' என்ற இழிசொற்களால் அழைக்கப்படுவதன் காரணம் லஞ்சம் அரசியல்மயமானதே. நாட்டு மக்களுக்கு சேவை செய்வதற்காகவே பதவிக்கு வரும் அரசியல்வாதிகள் கொடுக்கும் போதே எடுத்துக் கொள்வதால் இதை வேறு எப்படி அழைக்க?

அமரர் பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் லஞ்சம் வாங்கி வசமாக மாட்டிக் கொண்டனர். மாட்டிக் கொண்டவர்கள் தமது கட்சிக்காரர்கள் என்றுகூட பாராமல் அமரர் பண்டாரநாயக்கா வோல்டர் தப்பொடபிட்டிய ஆணையாளரின் முன் அவர்களை நிறுத்தி, அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படவே அவர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

1977ல்தான் முதன் முதலாக லஞ்சம் தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டது. திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு லஞ்சமும் ஒரு சட்டம் போல சமுதாயத்தில் நடமாட ஆரம்பித்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











இளைஞர்களும் யுவதிகளும் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக லஞ்சம் கொடுக்க வேண்டிய கட்டாயத்திலிருந்தனர். அதைவிட சிலர் தமது கற்பையே அரசியல்வாதிகளிடம் காணிக்கையாகச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இவ்வாறானதொரு சுவாரஸ்யமான சம்பவம் பற்றி சில வருடங்களுக்கு முன் பேசப்பட்டது.

சம்பவம் இதுதான்.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதியிடம் தொழில் ஒன்றைப் பெற்றுத் தருமாறு ஒரு யுவதி கேட்டுள்ளார். உடனடியாக அதனை பெற்றுத் தருவதாகக் கூறிய அரசியல்வாதி மாலையில் குறிப்பிட்டதொரு வாடிவீட்டில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். அங்கு வருமாறு அழைத்துள்ளார்.

சம்பவ தினம் அந்த யுவதி குறிப்பிட்ட அந்த வாடிவீட்டை நோக்கிச் செல்லும்போது இச்செய்தியை கேள்வியுற்ற யுவதியின் கோபக்கார அண்ணன் தடியொன்றையும் எடுத்துக்கொண்டு வாடிவீட்டை அடைந்தார்.

குறிப்பிட்ட அறையை பலாத்காரமாக தள்ளித் திறந்து கொண்டு உள்ளே சென்றபோது அரசியல்வாதி நிர்வாண கோலத்தில் காட்சியளித்தாராம். சகோதரியும் ஒரு மூலையில் நின்று அழுது கொண்டிருந்தாராம்.



இவையெல்லாம் லஞ்சப்பேயின் அட்டகாசங்கள்தான். மேலும் வெளிநாடுகளிலிருந்து இங்கு பொருட்கள் கொண்டு வரும் போதும் டென்டர்களில் விற்கப்படும்போதும் பாரியளவில் லஞ்சங்கள் கைமாறுவதுண்டு.

இவ்வாறு பாரியளவில் கைமாறும் லஞ்சப் பணங்களை சுவிற்சர்லாந்திலுள்ள வங்கிகளில் ரகசியமான முறையில் வைப்பிடுவதும் உண்டு.

இப்படியான பல சம்பவங்கள் உலகளாவிய ரீதியில் கடந்த காலங்களில் பேசப்பட்டன. இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் பதவி இழந்தவர்கள் என்று நிக்சன் முதல் ஜெயலலிதா வரை பலப்பல தலைவர்கள் உண்டு.

இலங்கையில் அண்மைக் காலத்தில் செனல்-9, கிரடிட் கார்ட், தவக்கால், எயர்லங்கா போன்ற பெயர்கள் இவ்வாறு லஞ்சம் தொடர்பாக பிரபலமாகப் பேசப்பட்டன.

**லஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் பதவி இழந்தவர்கள் என்று நிக்சன் முதல் ஜெயலலிதா வரை பலப்பல தலைவர்கள் உண்டு**

அரசாங்க நிறுவனங்களைப் பொறுத்தளவில் சிறிய ஊழியர்கள் சந்தோஷம் என்ற பெயரில் லஞ்சம் வாங்கிக் கொண்டிருக்கும் போது பெரிய புள்ளிகள், அரசியல்வாதிகள் 'அன்பளிப்புக்களாக' அவற்றை ஏப்பம் விடுவார்கள். இதனை லஞ்சம் என்றழைக்க அவர்கள் விரும்புவதில்லை.

அரசினர் வைத்தியசாலைகளில் நீண்ட கியூக்களில் நின்று இலவசமாக மருந்து எடுக்கக் காத்திருக்கும் ஏழைக் குடிமகன் அல்லது கூலித் தொழிலாளி கியூவில் கொஞ்சம் முன்னே செல்வதிலிருந்து மருந்து எடுப்பது வரை லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. இதனை வெளிப்படையாகவே பெற்றுக்கொள்ள அந்த ஊழியர்களின் மனம் கூசுவதில்லை.

அதைவிட மரணமான தனது உடன்பிறப்பின் உறவினரின் சடலத்தை சவச்சாலையிலிருந்து வெளியே எடுப்பதற்கு கூட லஞ்சம் கட்டாயம். லஞ்சத்தை தள்ளிவிடத் தவறினால் சவச்சாலை நாற்றத்தை நாமும் அனுபவிக்க வேண்டியதுதான். செத்த பிணம் கூட நாறுமே தவிர ஒரு அங்குலமும் அசையாது.

காணி, பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் காரியாலயங்களில் அவசர தேவைக்காக ஏதாவது ஒரு சான்றிதழின் பிரதியை பெற்றுவிட முடியுமா?

அல்லது வாகன பதிவாளர் திணைக்களத்தில் சான்றிதழ் ஒன்றை அவசரமாக பெற்றுவிட முடியுமா?

முடியும். முயாமல் என்ன? ஆனால் ஒவ்வொரு மேசைக்கும், ஒரு மேசையிலிருந்து ஒரு அடிக்கு அப்பாலுள்ள அடுத்த மேசைக்கு எமது 'பைல்' போகவும் சுளை சுளையாகத் தள்ளினால்தான் முடியும்.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் என்றாலே லஞ்சம்தான் மனக்கண் முன் வரும். கடவுச் சீட்டுகளில் மோசடி, ஆள் மாறாட்டம் நடைபெறுகின்றது என்று குறுகிய காலத்திற்குள் எத்தனையோ வகையான மாற்றங்கள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டன. என்ன ஆயிற்று?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்ப்யூட்டர் வந்து விட்டது. இனி அசைக்க முடியாது என்று சொன்னார்கள். நாமும் நம்பினோம். ஆனால் அங்குதான் லஞ்சம் ஆட்சியே நடத்துகின்றது. தள்ள வேண்டியதை தள்ளினால் அங்கு செய்ய முடியாதது எதுவும் இல்லை.

இந்த லஞ்சம் ஒரு சர்வ தேச மதம், சர்வதேச இனம் என்று துணிந்து சொல்லலாம். ஏனென்றால் லஞ்சத்தில் மட்டும்தான் எவரும் சாதி, மதம், இனம், குலம் கோத்திரம் எதுவும் பார்ப்பதில்லை.

நாட்டில் இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்திருக்கின்ற இந்த நேரத்தில் கூட அந்த வழமையான விஷயங்கள் ஓஹோ ஓஹோ என்று நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

இப்பதான் ஒருவர் புது வீடு கட்டப் போகின்றார். வளர்ந்து ஆளாகிப் படித்து பட்டம் பெற்று தொழிலும் தேடி, திருமணமும் செய்து இருவரிடமும் உள்ள பணத்தையெல்லாம் வழித்து வாரி எடுத்து, போதாக் குறைக்கு வங்கியில் கடன் எடுத்து வீடு கட்டலாம் என்று நினைக்கிறான் ஒரு இளைஞன்.

சகல ஆவணங்களையும் சாட்சிக்குக் கையெழுத்திடுபவர்கள் உட்பட அதிகாரியின் முன் நிறுத்தினாலும் அதில் சூத்தை, இதில் சொட்டை என்று குறைகளை பூதக்கண்ணாடி கொண்டு தேடிக் கண்டுபிடித்து அலைக் கழிப்பார்கள்.

முன்கூட்டியே நாம் கொடுக்கப் போகும் லஞ்சம் என்ன என்பதை மனம் திறந்து சொல்லி விட்டால் மனமளவென்று நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடி நடக்கும். ஆவணங்களில் ஏதும் ஓட்டைகள், குளறுபடிகள் இருந்தால் அவையெல்லாம் பூசி மெழுகப்பட்டு 'லோன்' கைக்கு வந்து சேர்ந்துவிடும்.



## பொய்முகங்கள்

பம்பரம்
ஆடி முடிந்த பின்னே
தலை சுற்றி விழுந்தது!

மலர் பூத்து
மணம் பரப்பிய பின்னே
சருகாகி உதிர்ந்தது!

பழம்
திரண்டு கனிந்த பின்னே
அழுகிப் போயிற்று!

இந்த வாழ்க்கை மட்டும்
வட்டத்தைச் சுற்றி வருமுன்
வழுக்கி விழுவதேன்?

– என். ஆர். தாசன்

**இந்த லஞ்சம் ஒரு சர்வதேச மதம், சர்வதேச இனம் என்று துணிந்து சொல்லலாம். ஏனென்றால் லஞ்சத்தில் மட்டும்தான் எவரும் சாதி, மதம், இனம், குலம் கோத்திரம் எதுவும் பார்ப்பதில்லை.**

பாடசாலையில் இடம் கிடைப்பதற்கு... டெலிபோன், மின்சார இணைப்பு எடுப்பதற்கு... இப்படி எதைச் செய்வதற்கும் லஞ்சம் தேவை.

உலகளாவிய ரீதியில் லஞ்சத்திற்கு மிக முக்கிய இடம் உண்டு. இந்தியாவில் 'மிஸ்டர் க்ளீன்' என்று கருதப்பட்ட ராஜீவ் காந்தியே பின்னாளில் 'போபர்ஸ்' லஞ்ச ஊழலில் சம்பந்தப்பட்டிருந்ததாக ஆதார பூர்வமான குற்றச்சாட்டுக்களும் அதற்கான மறுப்புக்களுமாக இந்திய அரசியல் அல்லாடியதை உலகம் பார்த்தது.

வடக்கு, கிழக்கு யுத்தத்தில் கூட அரசியல்வாதிகளும் முப்படைத் தளபதிகளும் உயர் அதிகாரிகளும் லஞ்ச வலையில் சிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இவை எல்லாவற்றையும் விட இளைஞர் முதியோர் அனைவரின் உள்ளங்களையும் உடைத்து சுக்குநூறாக்கிப் போட்ட நிகழ்ச்சி, பலர் விரும்பும் கிரிக்கெட் விளையாட்டில் கூட லஞ்சம் நுழைந்ததுதான்.


முன்னாள் தென் ஆபிரிக்க அணித் தலைவர் ஹன்சி குரெஞ்ஞே இந்த சூதாட்டத்தில் சிக்கிக் கொண்டதன் மூலம் வெளியுலகம் அறிய ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தானிலும் உள்ள பல முன்னணித் தலைவர்களும் கூட மாட்டிக்கொண்டு முழிக்கிறார்கள்.

ஷங்கரின் 'இந்தியன் தாத்தாக்கள்' அங்கங்கே முளைத்தால் நல்லது என்று எதிர்பார்க்கும் அளவுக்கு லஞ்சக் கொடுமை மக்களை வாட்டுகிறது.

லஞ்சம் எடுப்பது மட்டுமல்ல குற்றவியல் சட்டத்தின்படி லஞ்சம் கொடுப்பதும் தண்டனைக்கு உரிய குற்றமாகும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

**- எம். எச். எம். பதி - உஸ்ஸமான்**



மனோஜ் பிரபாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக்கதை

# என் மனைவி நீதான்

கோட்டை ரயில் நிலையம் பரபரப்பாக இருந்தது. வவுனியா ரயிலை பிளாட்ஃபோர்மில் கொண்டு வந்து அடித்துவிட்டார்கள். கடைசி நேரப் பயணிகள் தலைதெறிக்க விரைந்து வந்து கொண்டிருந்தார்கள்.

ராஜன் நேரத்தைப் பார்த்தான். 9 மணி. இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. ரயில் புறப்பட.

வெளியே மக்களின் அவசர அசைவுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். உள்ளேயும் ஒவ்வொருவராக ஏறி வந்து இருக்கைகளைத் தேட ஆரம்பித்தார்கள்.

இப்படி முன் பின் தெரியாத பல்வேறு முகங்களின் உணர்ச்சிப் பிரவாகங்களைப் பார்க்கலாம் என்பதற்காகவே ரயில் பயணத்தை அதிகம் விரும்பினான் ராஜன். பிரிவுக்கு ஏங்கும் முகங்கள், பிறந்தஇடம் போகும் குதூகல முகங்கள், பயணத்தின் உல்லாசத்தை அனுபவிக்கும் குழந்தை முகங்கள், தொடர்ந்து பார்த்துக்கொண்டேயிருப்பதற்கு வாய்த்துவிடும் அழகான முகங்கள்....

ராஜனுக்குப் பிடித்த ரோஸ் கலரின் அசைவு தெரிந்து வெளியே தாவிய அவன் கண்கள் நிலைகுத்தி நின்றன. மின்சாரப் பாய்ச்சலில் தேன் தடவ முடியுமா என்ன? அவன் உள்ளமும் உடலும் ஒரு முறை இன்பமாய் அதிர்ந்தது. அங்கே....

ரோஸ் கலர் சேலை கட்டி ஒரு கையில் சூட்கேசும் மறு கையில் வயதான ஒரு ஆச்சியையும் பிடித்தபடி வந்து கொண்டிருந்தது அந்த தேவதை. பல இளைஞர்கள் தங்கள் கருமங்களை சில நிமிட நேரங்களுக்கு மறந்து நின்றது அந்தச் சூழலை திடீர் ஸ்தம்பிதமடைந்த தாய்க் காட்டியது.

இடையே ஒரு வயதானவரிடம் ஏதோ விசாரித்துவிட்டு, ராஜன் இருந்த பெட்டியை நோக்கி கிழவியோடு அந்த இளம் தேவதை வந்து கொண்டிருந்தது.

"எக்ஸ்கியூஸ் மீ... இது வவுனியா கொம்பார்ட்மென்ட்தானே?"

ராஜனுக்கு தன் கண்களையே நம்பமுடியவில்லை. தேவதை அவனிடம்தான் கேட்கிறது. "யெஸ்... யெஸ்..." என்றான் தன் படபடப்பை அடக்கிக்கொள்ள முடியாமல்.

உயிரைக் கரைத்துவிட்ட ஓர் இனிய புன்னகையைப் பதிலாக வழங்கிவிட்டு ஆச்சியின் கையைப் பிடித்துப் படியில் ஏற்றியவாறு உள்ளே வந்தாள்.

சூட்கேசை ராஜனின் தலைக்கு மேலே தட்டினுள் தள்ளிவிட்டு, அவனிடம் திரும்பி, "நீங்கள் வவுனியாவுக்குத்தானே போறீங்கள்?" என்றாள். அடடா என்ன மென்மை! குயிலின் சாரமெல்லாவற்றையும் உறிஞ்சிய குரலின் குழைவு.



தேன் மின்சாரத் தாக்கத்திலிருந்து மீளாத ராஜன் ஆமென்பதாய்த் தலையாட்ட, அவள் தன் ஆச்சியிடம் திரும்பி, "என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் ஆச்சி! நாளைக்குக் காலைமை நான் ஃபோன் பண்ணுவேன். இவரும் வவுனியா தான் போறாராம்..." என்று சொல்லிவிட்டு ராஜனிடம் திரும்பினாள்.

"அப்பா, அம்மா வவுனியாவிலதான் இருக்கினம். ஆச்சிக்கு என்னைத் தனியா விடப் பயம். எல்லாம் பழகிக்கொள்ளத் தானே வேணும்... இல்லையா... நீங்கள்...?" என்று தயங்கியவள் "என் பெயர் திவ்யா" என்று சொல்லி நிறுத்தினாள்.

ராஜன் உடலெங்கும் பாய்ந்த தேன் மின்சாரத்தின் வசீகர அதிர்ச்சியிலிருந்து மீளாமலிருந்தான். சுதாரித்துக்கொண்டு "நான் ராஜன்" என்று சிரிப்பை வழியவிட்டபடி "திவ்யா - ராஜன்" என்று மனதுக்குள் சொல்லிப் பார்த்தான்.

இனித்தது.

'என்னுடன் தானே வவுனியா வரப்போகிறாள். விடிவதற்குள் இவள் மனதில் இடம்பிடித்து விடலாம். கொழும்பில் என் உத்தியோகம், அந்தஸ்து பற்றிச் சொல்லி பிறகு சில ஜோக்குகள், கவிதைகள்... எப்படியும் மடக்கிவிடலாம்.' என்று நினைத்துக் கொண்டான். 'இவள் மட்டும் எனக்கு மனைவியாக வாய்த்தால்... ம்... நண்பர்கள் வட்டாரத்தில் நான்தான் ஹீரோ. எல்லாத் தடியன்களும் பொறாமையில் எரிந்து போவான்கள். இவ்வளவு சகஜமாகப் பேசுகின்ற இவளோடு ஒரு இரவு முழுவதும் பயணம் செய்வதற்கு வாய்ப்பைத் தந்த கடவுளுக்கு நன்றி சொல்லியே தீர வேண்டும். இந்த இனிய வாய்ப்பை நம் முழுத் திறமையையும் காட்டிச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்...'

திவ்யா மீண்டும் அவனிடம் தன் வீணை நரம்புகளை மீட்டினாள். அதாவது கொஞ்சலாகப் பேசினாள். "தனிச்ச பயணம் எண்டு ஆச்சி வழிக்கு வழி பயந்து கொண்டே வந்தா... எனக்கும் ஒரே யோசனை. உங்களைப் பாத்த பிறகு இப்ப நிம்மதி எனக்கு"

புகைவண்டி புறப்படத் தயாராகிக் குரலெழுப்பியது. ராஜன் அவளிடம் "பயப்படாதையுங்கோ, நான்தான் இருக்கிறேனே..." என்று சிரித்தான்.

"அப்பாடா! உங்களைப் பார்த்த உடனேயே எனக்கு அந்த நம்பிக்கை வந்திட்டுது.." என்றவள், தன் ஆச்சியிடம் திரும்பி,

"அப்ப பயப்பட வேண்டாம் ஆச்சி! இவர்தான் இருக்கிறாரே, பத்திரமாய்க் கொண்டுபோய் விட்டிடுவார். நீங்கள் பயப்படாமல் போட்டு வாங்கோ ஆச்சி. நான் வீட்டில தனியா இருப்பேன். எனக்கொண்டும் பயமில்லை.." என்று சொல்லியபடியே இறங்கி, ஆச்சிக்கும் அவனுக்கும் கையை அசைத்து டாட்டா காண்பிக்க, வண்டி நகரத் தொடங்கியது.

ராஜன் இப்பொழுதும் அதிர்ச்சியிலிருந்து மீளாதவனாக ஏமாற்றமும் அசடும் முகத்தில் வழிய அமர்ந்திருந்தான். எதிரே ஆச்சி தன் பொக்கை வாயைத் திறந்து அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவனால் சிரிக்க முடியவில்லை.

**- துன்னையூர் பரமேஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிக்கு இல்லை வேலி

எம். எஸ். எம். ஹிஷாம்

ம்... "என்ன வாழ்க்கை இது? வெறும் போலி வாழ்க்கை" என்று நம்மில் பலர் அலுத்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம். கிடைத்தற்கரிய வாழ்க்கையே போலியாகிவிட்டால் அதனை எப்படி வாழ்ந்து கழிப்பது?

*போலி -*

இன்று நம் எல்லாத்துறைகளிலும் புகுந்துவிட்ட ஒரு வில்லன். எதற்கெடுத்தாலும் போலி. நகலைக் காண்பதே போலியாகத்தான். இது செல்வாக்குச் செலுத்தாத துறையே இன்று காண்பதரிது.

தரமான ஒரு பொருளை ஒத்த தரமற்ற பொருளைத்தான் நாம் போலி என்று அடையாளம் கண்டிருக்கிறோம். அசலும், நகலும், நிஜமும், நிழலும் என்று போலிகளுக்கு பல பெயர்களை வைத்துக் கொண்டுமிருக்கிறோம்.

போலி என்றவுடன் நம் பெண்கள் உடனே நினைப்பது ஆபரணங்களைத்தான். 22 கரட் தங்கத்துள் 18 கரட் வரை தரத்தைக் குறைப்பது போலியாக இருந்தாலும் இவைகளை விற்கும் நிறுவனங்களின் பெயர்களையும் சிலர் போலியாகப் பயன்படுத்தி விற்கின்றனனர். இது ஒரு ரகப் போலி.

அசலான நகைகளுக்குள் போலி நுழைவது போலவே போலியான இமிட்டேசன் நகைகளும் எம்மை ஏமாற்றச் செய்யும் ஒரு கலைதான். தங்க முலாம் பூசிய நகை. இது நாம் அன்றாடம் காணும் இன்னொரு வகைப் போலி.

2ம் உலக யுத்தத்திற்கு முன்னும் பின்னும் காலத்திலும், *Made in England, Made in German* என்று இருந்தால் மாத்திரமே சிற்றுண்டி தொடக்கம் கனகர வாகனங்கள் வரை மக்கள் வாங்கினர். இந்த நாட்டுப் பொருள்களுக்கே அக்காலத்தில் மவுசு இருந்தது. இதற்குள்ளும் நுழைந்தது போலி.

இங்கிலாந்து, ஜேர்மனியின் தரத்தை பின்னர் ஜப்பான் பிடித்துக் கொள்ளவே ஐரோப்பிய நாடுகளைத் தவிர்த்து கீழைத்தேய நாடுகள் ஜப்பான் சாமான்களின் மீது மோகம் கொண்டனர். ஜப்பான் என்றால் எதையும் வாங்குவார்கள்.

**நெஷனல், சோனி, பெனசோனிக் போன்றவற்றின் உற்பத்திப் பொருட்களை நாம் வாங்க முற்படும்போது Made in Japan இருக்கிறதா என்று உறுதிப்படுத்திய பின்பே வாங்குவோம். இவை சர்வதேச நிறுவனங்கள் என்பதால் சிங்கப்பூர், மலேசியா, தாய்வான், பாங்கொக் போன்ற இடங்களில் இதே போன்ற உற்பத்திப் பொருட்களைச் செய்தார்கள். இதுவும் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு வகைப் போலிதான். Made in Japan இற்குப் பதிலாக இவர்கள் பாவித்த பெயர் Osaka Japan, Tokyo Japan போன்ற பெயர்களாகும்.**

நெஷனல், சோனி, பெனசோனிக் போன்றவற்றின் உற்பத்திப் பொருட்களை நாம் வாங்க முற்படும்போது *Made in Japan* இருக்கிறதா என்று உறுதிப்படுத்திய பின்பே வாங்குவோம். இவை சர்வதேச நிறுவனங்கள் என்பதால் சிங்கப்பூர், மலேசியா, தாய்வான், பாங்கொக் போன்ற இடங்களில் இதேபோன்ற உற்பத்திப் பொருட்களைச் செய்தார்கள். இதுவும் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு வகைப் போலிதான். *Made in Japan* க்குப் பதிலாக இவர்கள் பாவித்த பெயர் *Osaka Japan, Tokyo Japan* போன்ற பெயர்களாகும்.

நாம் உடுக்கும் துணிகள் கூட போலியான பெயரில் உருவாக்கப்பட்டதாகவே இருக்கலாம். பெயர் பெற்ற ஆடைத் தயாரிப்பு நிறுவனங்களின் பெயர்களில் போலியான ஆடைகளும் தயாரிக்கப்படவே செய்கின்றன.

எதையும் நுணுகிப் பார்த்து அறிந்துகொள்ளும் அறிவாளிகளும் கூட போலிகளைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நகலாகச் செய்யப்பட்டு வரும் பல்வேறு பொருட்களைத் தினம் தினம் கொள்வனவு செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

மருந்துப் பொருட்களிலும் கூட போலிகள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்றால் இதென்ன கொடுமை என்றுதானே கேட்கத் தோன்றும்? போலி உற்பத்தியாளர்களுக்கு அதெல்லாம் எந்தப் பொருட்டுமில்லை. வயாக்ராவுக்குப் பதிலாகக் கூட போலி வயாக்ரா உற்பத்தியாகி விற்பனையில் இருப்பதை நீங்கள் அறிவீர்களா?

அதிலும் மேலதிகமான ஒரு தகவல் என்னவென்றால், பாலியல் தொடர்பான பலவீனங்களுக்கு விற்கப்படும் மருந்துகளே அதிகமாக போலியாகச் செய்யப்படுகிறதாம்.

பழைய வாகனங்களை புதிய இலக்கத் தகடு பொருத்தி புதியது போல் போலியாக விற்பதும் நடக்கிறது. கடந்த காலங்களில் போலி இலக்கத் தகடுகளுடன் நடமாடிய பல வாகனங்களை பொலீசார் கண்டுபிடித்தனர்.


அண்மையில் பொன்னாங்காணிக் கீரை என்று ஒரு வகை போலியான கீரை விற்கப்படுவது பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்பு பற்றியும் பத்திரிகைகளில் படித்திருப்போம்.

நாட்டுக்கோழி முட்டைக்குப் பதிலாக பண்ணைக் கோழி முட்டைகள் உருவாக்கப்பட்டதும், புதிய கோழி வகைகள் உருவாக்கப்பட்டதும் கூட ஒருவகைப் போலிதான். இதுகூட மக்கள் மத்தியில் ஓகோவென விற்பனையாகியதுதானே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





போலிகள் பொதுவாக விலை கூடிய பெறுமதியான பொருட்களிலேயே கைவரிசையைக் காட்டுகின்றன. சர்வதேச மட்டத்தில் போலி மாணிக்கக் கற்கள், வைரக் கற்களின் பரிமாற்றம் உலகை உலுக்கியுள்ளது.

இவை மட்டுமன்றி, வெளிநாடுகளிலிருந்து தடை செய்யப்பட்ட பொருட்களை மட்டுமல்லாது அனுமதிக்கப்பட்ட பொருட்களையும் போலி ஆவணங்களைக் காட்டி துறைமுகத்திலிருந்து வெளியே கொண்டுவரும் வித்தையும் காலம் காலமாக நடைபெற்று வருகிறது.

ஜாம், கோடியல், குளிர்பானங்கள் விற்பனையாகும் பைக்கற்றுகள், போத்தல்களில் உலா வரும் போலிகளைப் பற்றி நிறையவே நாம் அறிந்திருக்கிறோம்.

போலி வகைகளில் நாம் கையில் கட்டும் கடிகாரங்கள் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த கைக்கடிகாரத்தின் பெயரில் போலி செய்யப்பட்டு நூறு ரூபாவுக்கு விற்கப்படுவதை நாம் காண்கிறோம்.

இவை பொருட்களில் போலியாக இருக்க...

சிலர் -

வருமான வரி அதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் போன்று போலி வேடமிட்டுச் சென்று கொள்ளையடிப்பதையும் நாம் கேள்விப்படுகிறோம்.

போலி வங்கிகள், நிதி நிறுவனங்கள் என்பன திடீரென்று முளைத்து கொள்ளை முடிந்ததும் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி நிறுவனங்களை மூடிவிடுகின்றனர். இப்படியான போலி நிறுவனங்கள் அரசாங்கங்களுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்த வண்ணமே உள்ளன.

சில மேலைத்தேய நாடுகளில் திருமணம் நடந்து முதலிரவு நடக்காமலேயே உறவு முறிந்துவிடும். திருமண தஸ்தாவேஜுகளைப்பெற்று அந்நாட்டு வதிவிட விசா பெற இப்படியொரு போலித் திருமணம்.

இந்தியாவில் பணம் கொடுத்தால் ஒரே நாளில் சகல பட்டம் பதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம் என்றளவுக்குப் போலி முகவர்கள் நிறையவே இருக்கிறார்கள்.

வெளிநாடு அனுப்புவதாகக் கூறி பணம் வாங்கி எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு தலைமறைவாகும் எத்தனையோ போலி முகவர் நிலையங்கள் அண்மையில் இனங்காணப்பட்டன.

அமெரிக்காவை ஒரு குலுக்குக் குலுக்கிய சதாம் ஹுசைன் கூட தன் விமானத் தளத்தைப் போலியாகவே செய்து வைத்திருந்தான். அதுமட்டுமல்ல தன்னையொத்த நால்வரை அவர் போலியாக வைத்திருக்கிறார் என்றும் செய்தியுண்டு. இது அவரை எதிரிகள் அடையாளம் கண்டு கொள்ளாமலிருக்க.




நமது நாட்டு ஜனாதிபதி கூட ஒன்றையொத்த இன்னொரு போலிக்காரையும் உபயோகித்தே பயணம் செய்கிறார். இது அவர்களின் தற்காப்புக்காகச் செய்யும் போலிகள்.

போலிக் கடவுச் சீட்டுப் பாவித்து நாட்டை விட்டு ஓடுவோர், போலிக் காசோலை வைத்து ஏமாற்றுவோர், ஏன் போலிச் சாமியார், போலி இயக்கங்கள், இப்படி... எதை எடுத்தாலும் போலி... போலிதான்.

**இப்படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாம் விட்டு விலக முடியாதளவுக்கு நமக்குள் ஒரு வேலி போலாகிவிட்ட இந்தப் போலி நமது அந்தரங்க வாழ்க்கைக்குள்ளும் நுழைந்துவிட்டது ஒன்றும் புதுமையான விடயமல்ல.**


செம்மறி ஆட்டிலிருந்து குளோனிங் செய்யப்பட்டு பெறப்பட்ட ஆடும் ஒருவகைப் போலிதான்.




தலைப் பிரசவம் நடக்கவிருக்கும் பெண்ணுக்கு ஒரு போலிப் பிரசவ வேதனையே ஏற்படுவதாக நம் மூதாதையர் கூறுவர்.

திடீரென நம் பல் விழுந்துவிட்டால் நாம் போலிப் பற்களைத்தானே மாட்டுகிறோம். இது போலவே சில மேலைத்தேய நாடுகளில் ஆண் பெண் உறுப்புக்களும் போலியாகச் செய்து விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

நாம் சமூகத்தில் பல குற்றச் செயல்களைப் புரிந்த பலர் அவர்களின் பெயர்களையே மாற்றிக் கொண்டு போலிப் பெயர்களில் நடமாடுகின்றனர். மறைந்த ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜேவீர தன் பெயரை அத்தநாயக்க என்று போலியாக வைத்திருந்தது ஞாபகத்துக்கு வருகிறது.



இப்படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாம் விட்டு விலக முடியாதளவுக்கு நமக்குள் ஒரு வேலி போலாகிவிட்ட இந்தப் போலி நமது அந்தரங்க வாழ்க்கைக்குள்ளும் நுழைந்துவிட்டது ஒன்றும் புதுமையான விடயமல்ல.

எது போலி எது அசல் என்று எமக்குப் புரிந்தாலும் எம்மை விட்டுப் பிரிக்க முடியாதளவுக்கு இது ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டது. இவை எல்லாமே மனிதனின் கைங்கரியங்கள்தான். போலி மனிதனும் உருவாக்கப்பட்டால் அதனை நாம் எப்படி அழைப்போம்? •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதுக்கு வந்தவன்

மலர்மணாளன்

அதிகாலை ஐந்து மணி இருக்கும். எங்கோ தூரத்தில் ஒற்றைச் சேவல் ஒன்று கூவியது. உடல் அசதியால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த வள்ளி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். அவள் வீட்டில் நேரம் பார்ப்பதற்கு சுவர்க்கடிகாரமோ, கைக் கடிகாரமோ கிடையாது.

ஒரு அனுமானமாகத்தான் எல்லா நேரத்தையும் கணக்கிட்டுக் கொள்வாள். அவளுடைய புருஷன் வாசு என்ற வாசுதேவன் எவ்வித சலனமும் இல்லாமல் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

வள்ளி அவசர அவசரமாக அடுப்பைப் பற்றவைத்தாள். தண்ணீரைச் சுடவைத்துவிட்டு தனது பத்து வயது மகள் தேவியை எழுப்பினாள்.

''மக... எந்திரி. ஸ்கோலுக்கு போகணும். இப்ப எந்திரிச்சாத்தான் நேரம் சரியா இருக்கும்'' என்றாள்.



தேவி சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்து தன் காலைக் கடன்களை முடிக்கச் சென்றாள். வள்ளி தேநீர் தயாரித்து வைத்துவிட்டு காலை ஆகாரத்திற்கு ரொட்டி சுடுவதற்காக மாவு பிசையத் தொடங்கினாள்.

சிறிது நேரத்தில் தேவி முகம் கழுவிக்கொண்டு வந்தாள்.

''வா புள்ள... வந்து தேத்தண்ணியக் குடிச்சிட்டு ஸ்கூல் உடுப்ப உடுத்து. நா ரொட்டிய சுருக்கா சுட்டுத் தாரன். பெரட்டுக்கு நேரமாச்சி''

அவசரஅவசரமாக காரியத்தில் இறங்கினாள் வள்ளி. சிறிது நேரத்தில் பாடசாலைச் சீருடையுடன் வந்த தேவியிடம் ''இந்தா அடுப்படியில ரொட்டியும் சம்பலும் வச்சிருக்கேன். சாப்பிட்டு மணி அடிக்கிறதுக்கு முன்னாடி ஸ்கூலுக்குப் போ. நா மலைக்குப் பொறப்படணும்'' என்று சொன்னவள் தன் காலைக் கடன்களை முடிக்கச் சென்றாள்.

சிறிது நேரத்தில் வள்ளியும் மலைக்குக் கொழுந்து பறிக்கச் செல்லத் தயாராகிவிட்டாள். புருஷன் வாசுவை எட்டிப் பார்த்தாள். அவனோ ஏதோ ஆனந்தக் கனவு கண்டு தூக்கத்தில் சிரித்துவிட்டு புரண்டு படுத்தான்.

அவனை எழுப்புவதில் எந்த விதப் பிரயோசனமும் இல்லை. ஆறுதலாக எழுந்து உள்ளதைச் சாப்பிட்டுவிட்டு கோயில் மரத்தடியில் அரட்டையடிப்பவர்களிடம் கதை கேட்கச் சென்றுவிடுவான்.

மலைக்கு வேலைக்குச் சென்ற வள்ளி தனக்கு ஒதுக்கப்பட்ட தேயிலை நிரையில் கொழுந்து பறிக்கத் தொடங்கினாள். அவளுடைய இரு க்கைகளும் இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தன. அவளுடைய மனம் கணவன் வாசுவைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

00 00 00

வாசு இப்படி மாறிப் போவான் என்று வள்ளி கனவிலும் நினைத்திருக்கவில்லை. வள்ளியைக் கல்யாணம் செய்யும் போது வாசு டவுனில் கடையொன்றில் வேலை செய்து கொண்டிருந்தான். வாசுவின் பெற்றோர்கள் பக்கத்துத் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள். பேசி முடிக்கப்பட்ட கல்யாணம்தான். வாசு எந்தவித கெட்ட பழக்கங்களும் இல்லாதவன். வாரத்தில் ஒரு முறைதான் வீட்டிற்கு வருவான்.

வீட்டுக்குத் தேவையான எல்லா சாமான்களையும் வாங்கி வருவான். அந்த ஒரு நாளில் வள்ளி மிகவும் மகிழ்ச்சியாக இருப்பாள். உண்டு, களித்து சந்தோஷமாக இருந்துவிட்டு மறுநாள் காலையில் கடமையே கண்ணென வாசு கடைக்குச் சென்றுவிடுவான். மிகவும் ஆனந்தமாகக் கழித்த நாட்கள் அவை. அதன் பிரதிபலனாகவே தேவி பிறந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் நடந்து முடிந்து பத்து வருடங்களாகிவிட்டன. இரண்டு வருடங்களுக்கு முன் ஒருநாள் வாசு இடைநடுவில் வீட்டிற்கு வந்தான். மிகவும் சாந்த குணமுடைய அவன் யாரிடமும் அதிகம் கதைக்க மாட்டான். அது போலவே அன்றும் ஏதும் வள்ளியிடம் சொல்லவில்லை. திண்ணையில் அமர்ந்து முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் சுபாவம் அறிந்த வள்ளி அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அடுத்த நாளும் அதே நிலையில் இருந்தபோதுதான் வள்ளிக்கு விபரீதம் உறைத்தது. என்னவென்று கேட்டபோது கடையில் முதலாளியுடன் பிரச்சினை, அதுதான் வேலைக்குப் போகவில்லை என்றான்.

கொஞ்ச நாளில் சமாதானமாகி வேலைக்குச் சென்றுவிடுவான் என்றுதான் வள்ளி நினைத்தாள். ஆனால் அதுதான் நடக்கவில்லை. அவன் நிரந்தர சோம்பேறியாகிப் போனான்.

**கொஞ்ச நாளில் சமாதானமாகி வேலைக்குச் சென்றுவிடுவான் என்றுதான் வள்ளி நினைத்தாள். ஆனால் அதுதான் நடக்கவில்லை. அவன் நிரந்தர சோம்பேறியாகிப் போனான்.**

வள்ளி எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்த்தாள். அவன் அசைந்து கொடுப்பதாக இல்லை. சிரித்து மழுப்பிவிடுவான். இது வேண்டும், அது வேண்டும் என்று எதுவும் கேட்பதில்லை. சாப்பாடு விஷயத்தில் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. உள்ளதைச் சாப்பிட்டுவிட்டு இருந்துவிடுவான்.

இப்படியே இரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டன. இந்த இரண்டு வருடங்களிலும் வள்ளியின் உழைப்பில்தான் குடும்ப வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது.

“ஏ புள்ள வள்ளி.. என்னா ஒரே எடத்துல எவ்வளவு நேரம் பறிப்ப.... என்னா யோசன... மகளுக்கு சொகமில்லயாம்.. ஆளு வந்திருக்கு வீட்டுக்குப் போ....” என்றார் கங்காணி.

திடுக்கிட்டு நிமிர்ந்த அவளுக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. கூடையைக் கூட எடுக்காமல் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்தாள். பக்கத்து வீட்டு காமாச்சிப் பாட்டி வீட்டு வாசலில் நின்றிருந்தாள்.

“வள்ளி ஒன் மக பெரிய மனுஷியாகிட்டா... உள்ள குந்த வைச்சிருக்கேன். போய் மறைப்பைக் கட்டு...” என்றாள்.

வள்ளிக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. ஒரு புறம் சந்தோஷமாகவும் மறுபுறம் புருஷனை நினைத்து கவலையாகவும் இருந்தது. தன் தலைவிதியை நினைத்து நொந்து கொண்டு ஆக வேண்டியவற்றைக் கவனிப்பதற்காக உள்ளே சென்றாள்.

மாலையில் வாசு வீட்டிற்கு வந்தான். வழமைக்கு மாறாக வள்ளி வீட்டிலிருப்பதைக் கண்டதும் முகத்தில் சற்று வியப்பு தெரிந்தது. உள்ளே நுழைந்தவன் கண்ணில் மேலும் வியப்பு. மறைப்பு கட்டப்பட்டிருந்தது. வள்ளி சொல்லாமலேயே வாசுவுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

வெளியே வந்தவன் திண்ணையில் மீண்டும் அமர்ந்து அதே முகட்டைப் பார்த்து வெறிக்கத் தொடங்கினான்.

வள்ளியும் பலவித சிந்தனைகளுடன் அன்றைய இரவுச் சாப்பாட்டைத் தயாரித்துக் கொடுத்தாள். சாப்பிட்டுவிட்டு ஓரமாக பாயைப் போட்டுப் படுத்துக் கொண்டான்.

வழமைபோல் காலை விடிந்தது. வழமைபோல் வள்ளியும் அதிகாலையில் எழுந்தாள்.

ஆனால் வழமைக்கு மாறாக வாசுவைப் படுக்கையில் காணவில்லை.

சந்தேகத்துடன் எழுந்து விறாந்தைக்கு வந்தவள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

அங்கே-

வாசு குளித்து நன்றாக உடுத்திக்கொண்டு எங்கோ புறப்பட தயாராகிக் கொண்டிருந்தான்.

புறப்பட்டுக் கொண்டிருந்தவனிடம் “எங்கே போறீங்க?” என்று கேட்டால் அபசகுனமாகிவிடுமோ எனப் பயந்து அப்படியே அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

வள்ளியைப் பார்த்து, “வள்ளி கொஞ்சம் தேத்தண்ணி ஊத்தித் தா. டவுண் கடையில வேலைக்குப் போகப் போறன்” என்றான்.

வள்ளிக்கு தன் கண்களையோ, காதுகளையோ நம்பமுடியவில்லை. தன்னையே ஒரு முறை கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். கிள்ளியது வலிக்கத்தான் செய்தது.

ஒருவாறு தன்னிலைக்கு வந்தவள் மகிழச்சியால் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் ஓடிச் சென்று வாசுவின் கால்களில் விழுந்தாள். அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. அவளை மெதுவாக தூக்கியெடுத்தான் வாசு. அவன் கண்களும் இலேசாக கலங்கியிருந்தன.

“தேத்தண்ணியத் தா வள்ளி... நான் நேரத்தோட போகணும்” என்றான் வாசு.

மகள் வயசுக்கு வந்ததால் தன் கணவனுக்கு பொறுப்பு வந்ததையிட்டு வள்ளியின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

“ஆண்டவனே இந்த நிலை எப்போதும் மாறாமல் இப்படியே இருக்க வேண்டும்” என்று மானசீகமாக கடவுளை வேண்டிக் கொண்டாள் வள்ளி. •



## பொய் முகங்கள்

**திண்ணை இருட்டில்**
**எவரோ கேட்டார்**
**தலையை எங்கே**
**வைப்பதாம் என்று**
**எவனோ ஒருவன்**
**சொன்னான்**
**களவு போகாமல்**
**கையருகே வை.**
**- ஞானக்கூத்தன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத் தலைவனாகும் கடத்தல்காரன்

## சத்திய மங்கலம் காடு சரித்திரம் படைக்குமா? வீரப்பனின் கணக்கு பார்க்கப்படுமா?



சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் "ONE MILLION YEARS B. C." (கிறிஸ்துவுக்கு 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்) என்றொரு ஆங்கிலப் படம் எமது உள்ளூர் திரையரங்குகளில் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடியது.

சூரியனில் இருந்து பூமி பிரிந்து தோன்றுவதும், அதன் பின் பூமியின் இயற்கை வளங்கள் - கடல், மலை, ஆறு, மரங்கள், புற்கள், பாலைவனம், மனிதன், மிருகங்கள், பறவைகள் போன்றவை தோன்றுவதும் கனகச்சிதமாக அப்படத்தில் சித்திரிக்கப்படுகின்றன.

தவிர மனித இனத்தின் ஆரம்பகால நாடோடி வாழ்க்கை முறையும் - வேட்டையாடுதல், மீன் பிடித்தல், விவசாயம் செய்தல், உடைகள், ஆபரணங்கள் அணியத் தொடங்குதல் என்பனவற்றுடன் மனிதர்களுக்கு மத்தியில் போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவு, புகழ், அதிகார ஆசை தோன்றுவதையும் நெறியாளர் தனித்துவமான முறையில் படமாக்கியுள்ளார்.

உச்சக்கட்ட காட்சியாக, ஒரு மக்கள் கூட்டம் வேட்டையில் ஈடுபட்டிருக்கும் போது அக்கூட்டத்தின் தலைவனுக்கு எதிர்பாராது ஏற்படும் ஒரு பாதகமான பலவீனமான நிலையைப் பாவித்து, அவனை அழித்தொழித்து இரண்டாம் நிலையிலுள்ள இளைஞன் ஒருவன் எவ்வாறு தன்னைத் தலைவனாக்கிக் கொள்கிறான் என்ற காட்சி அமைந்துள்ளது.


இந்தக் காட்சியை இப்பொழுது திரும்பப் பார்க்கும் போது எமது தமிழ் இளைஞர்களின் விடுதலை இயக்கங்களின் வரலாறு தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

தமிழ் இளைஞர் இயக்கங்களின் ஆரம்பகால ஆயுத நடவடிக்கைகளுக்குப் பின்புலமாக விளங்கியது இந்தியத் தமிழ்நாடு.

இயல்பாகவே தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளுடன் பூர்வீகத் தொடர்பும், கடல் அனுபவமும், கடத்தல் அனுபவமும், சண்டித்தனத்தில் பேரும் பெற்றிருந்த வல்வெட்டித்துறை இன்றைய தமிழ்த் தேசியத் தலைமையாக, தன்னை எதிர்ப்பவர்களையெல்லாம் அழித்து காட்டுக்குள்ளிருந்து ககனத்திற்குச் சவால்விடும் வலிமை மிக்கவர்களாக மாறியிருப்பதை இந்தப் பின்னணியில்தான் விளங்கிக் கொள்ள வேண்டும்.

"கூத்தாடிக்கு என்ன அரசியல்?" என்பது போய் எம். ஜி. ஆர். புரட்சித் தலைவரானது போல.

"கள்ளக் கடத்தல்காரனுக்கு என்ன அரசியல்?" என்பது போய் இன்று விடுதலை இயக்கத் தலைவராக பிரபாகரன் மிளிர்கிறார்.



**"சீப் மினிஸ்டரா வந்தா ஒரு மாநிலத்துக்கு மட்டும்தான் ஏதாவது செய்ய முடியும். நான் வந்தா பிரைம் மினிஸ்டரா வரவேணும்.**

**அப்பதான் இந்தியா கஷ்டங்களை நீக்க முடியும். சத்தியமா இது நடக்கும். என் மாதிரி ஒரு பிள்ளை இனி பிறக்கவே பிறக்காது. இந்த இந்தியாவுக்குள்ள என் மாதிரி ஒரு பிள்ளை இல்லவே இல்லை. இனி பிறக்கவும் பிறக்காது.**

**எனக்கு கடைசி ஆசை ஒண்ணு இருக்குது. மக்களுக்கு சுதந்திரமான ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுத்திட்டு போயிடணும்னுதான்... என் உயிர் மீது சத்தியம். நான் வருந்துற தேவர் மீது ஆணையாக, இதுதான் என் கடைசி ஆசை. வேற ஒண்ணும் கிடையாது.**

**இப்ப நான் வனவாசம்தான் செய்தாகணும். இருக்கிறேன். அழியமாட்டேன். என்னை யாரும் அழிக்க முடியாது. ஆண்டவன் என் பின்னால் நிக்கிறாரு. உங்களுக்குத் தெரியாது."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகம் முழுவதும் இதுவே போக்காக இருப்பதால் நமது அண்டை மண்டலத்தில் தமிழ்நாட்டில் சத்தியமங்கலம் காட்டுப் பகுதியிலும் ஒரு "விடுதலை வீரன்" உருவாகத் தொடங்கியுள்ளான். இல்லை... இல்லை... உருவாக்கப்படுகின்றான்.

பிரபல கொள்ளைக்காரி பூலான் தேவியை இந்திய நாடாளுமன்றத்தில் தங்கள் பிரதிநிதியாக்கிப் பார்த்த பாரத மாதாவின் புதல்வர்கள். அவளை விட எத்தனையோ மடங்கு கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், சொத்தழிவு செய்த ஒருவனுக்கு உரிய மரியாதை வழங்குவதில் ஆச்சரியம் என்ன என்று வாதிடலாம்.

இன்னும் சிலர், பெரும் பதவிகளில் உள்ள அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் சட்டங்களைத் தமக்கு சாதகமாக வளைத்து கோடிக்கணக்கான சொத்துக்கள் சேர்க்கவும், சட்ட விரோத செயல்களிலும் ஈடுபட முடியுமானால், வீரப்பன் போன்றவர்களின் செயலில் என்ன தவறு என்று கேட்கலாம்.

இன்று வீரப்பனின் பெயர் புதிய பரிணாமத்தை எடுத்துள்ளது. பிரபல கன்னட நடிகர் ராஜ்குமாரின் கடத்தலுடன் ஆரம்பமான, இந்த மாற்றம் கர்நாடக, தமிழ்நாடு அரசுகளை மட்டுமன்றி பலரின் மூளைகளைக் குடைய வைத்துள்ளது.

அவன் வைத்துள்ள கடத்தல் கோரிக்கைகள் - சிறையிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகளை விடுவிக்கக் கோரியது... காவிரி நீர் தகராறுக்கான தீர்வு - எல்லாமே அவனது பிரதிபிம்பத்தை ஒரு தமிழ்த் தீவிரவாதத் தலைவரின் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.


இவ்வளவு காலமும் 'விடுதலைப் புலிகள் ஆதரவு' என்ற தீவிரவாதப் போர்வையணிந்து தமிழக மக்களின் ஆதரவுக்கு நயமாய் அலைந்த வை. கோபால்சாமி, டாக்டர் ராமதாஸ், பழ. நெடுமாறன், கி. வீமணி, கருணாநிதி போன்ற அரசியல்வாதிகளையெல்லாம் ராஜ்குமாரின் கடத்தலின் மூலம் வெறும் அமிர்தலிங்கங்கள் ஆக்கிய வீரப்பன் ஒரே இரவில் தன்னை ஒரு பிரபாகரனாக மாற்றியுள்ளான்.

இந்த நிலை நீடிக்குமானால் இன்னும் பெரும் பெரும் புள்ளிகளைக் கடத்தவும், கூடுதலான கோரிக்கைகளை முன்வைக்கவும் வீரப்பன் தயங்கப் போவதில்லை. அவனுக்கு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள தொடர்புகள் பற்றி இப்பொழுது வரும் தகவல்களை நோக்குகையில், அவன் இந்தியத் தமிழர்களின் தலைவனாக மட்டுமன்றி உலகத் தமிழர்களின் தலைவனாகவும் வரும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்ற பயம் எங்கள் அரசியலை அறிந்த எல்லோருக்கும் வரும்.

ஆனால் ஏற்கனவே உள்நாட்டில் மட்டுமின்றி கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், சொத்தழிப்பு, வரி, வட்டி, திறை என சூரியனின் ஆளுகைக்குட்பட்ட எல்லா இடங்களிலும் தனது கரங்களை அகலப்படுத்தியுள்ள நமது "சூரிய தேவன்", வீரப்பனின் இந்த விசுவரூபத்தைச் சகித்துக் கொள்வாரா?

அல்லது சித்திரகுப்தனை அழைத்து வீரப்பனின் கணக்கைப் பார்ப்பாரா?





**தமிழக, கர்நாடக அரசுகளின் தூதுவராக வீரப்பனிடம் மறுபடியும் சென்ற 'நக்கீரன்' பத்திரிகை ஆசிரியர் கோபால், அந்த சந்திப்பு பற்றி எழுதியதில் ஒரு பகுதி:**

**... அரசு அளித்த பதில்களுக்கெல்லாம் தனது விளக்கங்களை சொல்லி முடித்த வீரப்பன் "இன்னும் சில கோரிக்கைகள் இருக்கு" என்று சொல்லி புதிய குண்டுகளை வீச ஆரம்பித்தான்.**

**"10 கோரிக்கைகளையும் முழுமையா பரிசீலிப்பதா அரசாங்கம் சொல்லியிருக்கு. இப்ப எதுக்குங்க உங்களுக்கு பேராசை? மறுபடியும் மறுபடியும் கோரிக்கை வச்சீங்கன்னா, வீரப்பன் வேதாளம் மாதிரி ஏறிக்கிறான்னு நினைக்க மாட்டாங்களா? கொஞ்சம் யோசிங்க"**

**"நீ தூதுவனாத்தானே வந்திருக்கே! நான் சொல்றதைக் கொண்டு போய் அரசாங்கத்துக்கிட்டே கொடுக்கிறதுதான் உன்னோட வேலை" எச்சரித்துவிட்டு புதிய கோரிக்கைகளை அடுக்கத் தொடங்கினான்.**

**10ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி என்ற கோரிக்கையை வீரப்பன் வைத்ததும் நான் குறுக்கிட்டேன். "ஏங்க 5ம் வகுப்பு வரை தமிழ் வழியில் சொல்லிக் கொடுப்பதற்கே தமிழக முதல்வர் தலைகீழா நின்னுகிட்டிருக்காரு. இப்ப போய் நீங்க 10ஆம் வகுப்புன்னு சொன்னீங்கன்னா அவ்வளவுதாங்க... வெகுஜன விரோதி ஆயிடுவீங்க. மக்கள் எல்லோருமே ஆங்கிலவழிக் கல்வி மாயையில இருக்கிறாங்க. இப்ப நீங்க இப்படி பண்ணுறது நல்லா இல்லீங்க" என எடுத்துச் சொன்னேன். வீரப்பன் கேட்பதாக இல்லை. அவனது புதிய தோழர்களும் பிடிவாதமாகவே இருந்தனர். மற்ற இரு கோரிக்கைகளையும் தெரிவித்துவிட்டு "ஆஃப் பண்ணு" என்றான்.**

**"இருங்க.. நான் உங்ககிட்ட சில கேள்விகளை கேட்கணும். பதில் சொல்லுங்க. என்னாச்சுங்க உங்களுக்கு? வீரப்பன்னாலே பொது மன்னிப்பு, சரண்டர் அப்படிங்கிற மாதிரி கோரிக்கைகள்தானே இருக்கும். பழைய வீரப்பனைக் காணலையே... எங்கேன்னு தேடிக்கிட்டிருக்கேன்?"**

**"நான் இப்ப மாறிட்டேன். நான் தமிழுக்காக தமிழ் மக்களுக்காக போராடப் போறேன்"**

**"இந்த 6000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு காட்டுப்பகுதியில் இருக்கும் 6 லட்சம் மக்களுக்காகப் போராடிகிட்டிருப்பதாகத்தானே முன்னே சொன்னீங்க?"**

**6 லட்சம் மக்களா? அதெல்லாம் கிடையாது. 6 கோடி மக்களுக்காக நான் போராடுகிறேன். உலகத்தில் உள்ள 13 கோடி தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ள 6 கோடி மக்களுக்கும் சேர்த்து இந்த வீரப்பன் போராடுகிறான். அதன் ஆரம்பம்தான் இது."**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீழ்வோமாயினும்... வெல்க போர்!

தமிழ் நாட்டிலுள்ள ஆறு கோடித் தமிழர்களின் தலைவர் மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமுள்ள சுமார் 13 கோடித் தமிழர்களுக்கும் தலைவர் கலைஞர்தான் என்பது தி.மு.க. மேடைகளில் கேட்டுவந்த முழக்கம்.

அதன் பின் வீரமணி பழ. நெடுமாறன், வை. கோபால்சாமி, ராமதாஸ் போன்றோர் தமிழ் நாட்டிலும் ஏன் உலகத் தமிழர்களுக்கும் தலைமை தாங்கக்கூடிய வீரம் பிரபாகரனிடம்தான் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார்கள். வெளிப்படையாகவே அதைப் பேசவும் ஆரம்பித்தார்கள்.

கருணாநிதி மனம் புண்ணுக்குற்றது. உலகத் தமிழர்களின் தலைவர் என்ற தனது பீடத்தை அசைத்திருப்பது கேவலம் தன்னால் தண்டிக்கப்பட்ட பின்னர் விடுவித்து அனுப்பிய பாண்டிபஜார் தெருச் சண்டியன் என்பது அவருக்கு தாங்கிக் கொள்ள முடியாமல் போனது. அதனாலேயே முடிந்த சமயங்களிலெல்லாம் விடுதலைப் புலிகளின் தலைவரைக் கண்டித்தும் அலட்சியப் படுத்தியும் பேசுவதை அவர் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்.

சென்னை கோட்டையிலிருந்து தமிழகத்தை ஆளும் திருவாரூர்த் திருமகனா அல்லது முல்லைத் தீவுக் காட்டுக்குள்ளிருந்து கொலைகளால் உலகைத் திணறவைத்துக் கொண்டிருக்கும் வல்வெட்டித்துறைக் கோமகனா உலகத் தமிழர்களுக்குத் தலைவர் என்ற குடுமிப்பிடிச்சண்டையின் நடுவே...

சத்தியமங்கலக் காட்டுக்குள்ளிருந்து இந்தியப் படைகளுக்குத் தண்ணிகாட்டிக் கொண்டிருக்கும் மற்றொரு 'மாவீர'ரின் குரல் கேட்கிறது. 'வெறும் தமிழகத்தின் ஆறு கோடித் தமிழர்களின் விடுதலைக்காக மட்டுமல்ல உலகம் முழுவதிலுமுள்ள தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் போராடப் போறேன்' என்று முழங்கியிருக்கிறான் சத்தியமங்கலக் காட்டுக்குள்ளிருக்கும் சந்தனக் கடத்தல் வீரப்பன்.



மாறன்

பொலீசுக்கோ ஆயுதப் படையினருக்கோ பிடிபடாமல் காட்டுக்குள் மறைந்து வாழும் தந்திரோபாயங்களில் வீரப்பனும் வல்லவன். இலக்குத் தவறாமல் துப்பாக்கி சுடவும் தெரிந்தவன். கட்டுக்கோப்பான தற்கொலைக்கும் தயாரான வீரர்கள் அவனிடமும் உண்டு.

தனது சந்தனமரக் கடத்தலுக்குத் தடங்கலாக வந்த தமிழ்நாடு - கர்நாடகப் பொலீஸ்காரர்களையெல்லாம் திட்டமிட்டு மறைந்திருந்து தாக்கிக் கொலை செய்தான்.

இதன்பின் இரு மாநிலப் பொலீஸாரும் இணைந்து அவனைப் பிடிப்பதற்கு வலை விரித்தார்கள். மிகத் திறமையாக ஆயுதப் படையினருக்கு டிமிக்கி கொடுத்து, அவ்வப்போது மிகுந்த சாகசம் நிரம்பிய தாக்குதல்களால் அவர்களை அழித்துப் பயமுறுத்தி வந்தாலும் தனது தொடர்ந்த பாதுகாப்புக்கு அந்தக் காட்டின் ஓரப் பகுதிகளில் வாழும் சுமார் ஆறு லட்சம் மக்களின் ஆதரவும் வேண்டும் என்பதை உணர்ந்தான் வீரப்பன்.

வீரப்பனைப் பிடிப்பதற்காகச் சென்றிருந்த பொலீசார் அந்த மக்களை மிரட்டியதும் அவர்களிற் சிலரின் கட்டுமீறிய அடாவடித்தனமும் வீரப்பனுக்குப் பெரும் உதவியாக அமைந்தது. பொலீசாரின் மேல் மக்களுக்கு இருந்த வெறுப்பைப் பயன்படுத்திக் கொண்டு காட்டின் அருகே வசிக்கும் கிராம மக்களைத் துன்புறுத்தும் பொலீசாரை பழி வாங்குவதே தனது தாக்குதல்களின் நோக்கம் என்று பேசத் தொடங்கினான்.

தனது பணத்தேவைக்கு அவ்வப்போது சில பிரமுகர்களைக் கடத்திச் சென்று கப்பம் பறித்துக் கொண்டான். காட்டுப் பகுதியை அண்டிய கிராமங்களுக்கு வரும் பொலீசாரை சுட்டுக் கொலை செய்து பயமுறுத்தாவிட்டால் தனது வாழ்க்கை அழிந்துவிடும் என்ற நிலையில் வீரப்பன் அந்தப் பகுதி மக்களுக்காகவே பொலீசாரைச் சுட்டுப் பழிவாங்குவதாக வீரவசனங்களைப் பேசலானான். பொலீசாருக்கு தன் நடமாட்டத்தைக் காட்டிக் கொடுக்க முனைந்த கிராமவாசிகளை உடனுக்குடன் வெட்டியும் சுட்டும் கொன்று அவர்களைத் தனது பயமுறுத்தலின் கீழ் வைத்துக் கொண்டான்.



ராஜ்குமார் மனைவியுடன் கருணாநிதி



ராஜ்குமார்

இவ்வாறு தமிழ்நாடு-கர்நாடகா எல்லையிலிருந்த அந்தக் காட்டுப் பகுதிக் கிராமவாசிகளுக்குத் தலைவனான் நம் வீரப்பன்.

கன்னட நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியதோடு வீரப்பனின் போராட்டம்(?) வேறு பரிமாணத்தை அடைந்தது. கர்நாடகாவிலுள்ள தமிழர்களை விரட்டிவிட வேண்டும் என்று இயக்கம் நடத்தி, அங்கே நிகழ்ந்த கலவரங்களுக்குக் காரணமாக இருந்தவர் நடிகர் ராஜ்குமார்.

அவரைக் கடத்தவும் பணயக் கைதியாக வைத்திருந்து - சிறைகளிலுள்ள தீவிரவாதிகளின் விடுதலை, பெங்களூரில் வள்ளுவர் சிலை வைத்தல், காவிரி நீர் திறந்து விடல் போன்ற அரசியல் கோரிக்கைகளை வீரப்பன் முன்வைப்பதற்குக் காரணமாயிருந்தவர்கள் தனித்தமிழ்நாடு கேட்டுப் போராடும் 'தமிழ்நாடு விடுதலைப் படை'யினர் என்று சொல்லப்படுகிறது.

தற்போது மாறன் என்பவர் தலைமையில் இயங்கும் இந்தச் சிறு போராளிக் குழுவினர் வீரப்பனோடு காட்டில் இணைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இதன் பிறகுதான் வீரப்பன் தமிழ்நாட்டு மக்களின் விடுதலை, உலக மக்களின் விடுதலை என்றெல்லாம் பேசத் தொடங்கியிருக்கிறான்.

இனியென்ன? இந்திய இராணுவத்தினர் போய் அந்தப் பகுதியில் வீரப்பனைத் தேடுவதாக விமானக் குண்டுகளைப் போடத் தொடங்குவதுதான் பாக்கி. உலகின் நான்காவது பெரிய ராணுவத்திற்கெதிராக வீரப்பன் வீறு கொண்டு பொங்கியெழுவான். ஒன்றிரண்டு விமானங்களையும் வீழ்த்துவான். தமிழ் கவிஞர் பெருமக்கள் **'புறநானூற்று வீரம் வந்து புகுந்து விட்டது நம் தமிழ் உடம்பில்... இனி வானமும் எங்கள் வசம்..!'** என்று போர்ப் பரணி பாடுவார்கள். அங்கும் தமிழ் மக்கள் அடிமைகளாய் மௌனிகளாய்ச் செத்துக் கொண்டிருப்பார்கள். கடைசித் தமிழன் உயிரோடிருக்கும் வரை விடாமல் தொடரும் போர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதக்க வேட்டையில் பத்தொன்பது பேர்

புத்தாயிரமாம் ஆண்டில் முதல் ஒலிம்பிக் களை கட்டியிருக்கிறது. அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரின் ஹோம் புஷ் அரங்கு குதூகலத்தாலும் விளையாட்டுப் பிரியர்களாலும் நிரம்பி வழிகின்றது.



உலகத்தின் கண்களெல்லாம் இப்போது சிட்னியில் விருந்துண்கின்றன. 350 கோடி மக்கள் இந்நிகழ்ச்சிகளை கண் இமைக்காமல் - கண் குளிரக் கண்டு கொண்டிருக்கின்றன.

ஒலிம்பிக் ஒத்திகையின் போது மட்டும் 93000 பேர் கலந்து - களித்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஒலிம்பிக் தீப்பந்தத்தை அவுஸ்திரேலியாவின் நீச்சல் வீரர் மெடிடன் பௌட்கில்ஸ்பார்க் அரங்குக்கு கொண்டுவந்தபோது மட்டும் 50,000 பேர் அங்கே மொய்த்திருக்கிறார்கள்.

சிட்னி நகரின் 5 லட்சம் தொழிலாளர்கள் ஒலிம்பிக்கின் வெற்றிக்காக கங்கணம் கட்டிக்கொண்டு பணியிலிடப்பட்டுள்ளனர். இன்னும் 3 லட்சம் பேர் அதனுடன் சேர்ந்து கொள்கின்றனர்.

1896 மார்ச் 25ம் திகதி மாலை 3.00 மணி ஏதென்ஸ் நகரில் முதல் ஒலிம்பிக் நடைபெற்றது. அப்போதைய கிரேக்க மன்னர் ஜோர்ஜ் இதற்கு தலைமை தாங்கினார்.

இதுவரை 25 ஒலிம்பிக் போட்டிகளை உலகம் கண்டுவிட்டது. கடைசியாக 1996ல் அமெரிக்காவின் அட்லாண்டாவில் நடைபெற்றது.

இம்முறை விளையாட்டு வீரர்கள், பிரபுக்கள், பிரமுகர்கள் என 1 லட்சம் பேர் பார்வையாளர்களாகும் பாக்கியம் பெற்றுள்ளனர்.

இம்முறை முறை போட்டிகளில் கலந்துகொள்ளும் சகல வீரர்களும் கண்டிப்பாக இரத்த பரிசோதனையை மேற்கொண்டிருக்க வேண்டும். உலக போதை ஒழிப்பு இயக்கம் (WADA) இந்த நல்ல காரியத்தை நடத்தி வைக்கின்றது. 200 நாடுகளிலிருந்து 10,000 வீரர்களும் 5000 வீராங்கனைகளும் போட்டிகளில் தூள் கிளப்பப் போகிறார்கள்.


சார்க் வலய நாடுகள் என்ற வகையில் இம்முறை இந்தியாவிலிருந்தே அதிக வீரர்கள் கலந்து கொள்கிறார்கள் - 69 பேர். பாகிஸ்தானிலிருந்து 26 பேர். இலங்கையிலிருந்து 19 பேர். நேபாளம், பூட்டான், பங்களாதேஷிலிருந்து 5 பேர். மாலத்தீவிலிருந்து 3 பேர் கலந்து கொள்கின்றனர்.

உத்தியோகபூர்வமாக ஒலிம்பிக் போட்டிகள் 15ம் திகதியே ஆரம்பமானாலும் உண்மையில் அதற்கு இரு தினங்களுக்கு முன்னரேயே ஒலிம்பிக் ஆரம்பமாகிவிட்டது. முதல் நாளன்று 6 உதைபந்தாட்டப் போட்டிகளும் இரண்டாம் நாள் 6 உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெற்றன.




இலங்கையிலிருந்து இம்முறை 19 வீரர்கள் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர். இலங்கையின் சார்பில் முதலில் களத்தில் குதிப்பவர் மாலினி விக்கிரமசிங்க. இவர் 10 மீட்டர் ரை.:பிள் போட்டியில் கலந்து கொண்டார். உலகின் பிரபலமான 55 வீராங்கனைகளுடன் இவர் மோதுகிறார். சா.:ப் பதக்க வீராங்கனையான இந்தியாவின் அஞ்சலி ராமகாந்துடனும் மோதுவார்.

4X400 அஞ்சலோட்டப் போட்டியில் மனுரலங்கா, ரொஹான் பிரதீப்குமார, ரங்க விமலவங்ச, சுகத் திலகரத்ன ஆகியோர்



சாதிப்பார்கள் என எதிர்பார்ப்பு.

பெண்களுக்கான 4X400 அஞ்சலோட்டப் போட்டியில் சுசந்திகா ஜயசிங்க, பிரதீபா ஹேரத், நிம்மி சொய்சா, தமயந்தி தர்ஷா ஆகியோர் தூள் கிளப்பவுள்ளனர்.

மெய்வல்லுநர் போட்டிகள் 22ம் திகதி ஆரம்பமாகும்.

52 வருடங்களுக்கு முன் முதன்முதல் வெள்ளிப்பதக்கம் ஒன்று இலங்கைக்குக் கிடைத்தது. அதன் பின்னர் இம்முறை பல பதக்கங்களை நம் நாட்டு நங்கைகள் கொண்டு வருவார்கள் என்று எல்லோருமே நம்புகிறோம்.

**- விசித்ரா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# என் கடன் பணி செய்து கிடப்பதே!

— ராஜிக்கி —



இண்டைக்குச் சம்பளம் எடுத்தவுடனை சுந்தரம் அண்ணன்ரை கடனைக் கொடுத்திடோணும். ஒரு மாசத்திற்கு மேலாயிற்று. இனிமேல் கடன் வாங்கக் கூடாது. சுதன் நினைத்துக் கொண்டான். அவனுக்குத் தேவை ஏற்படும்போதெல்லாம் சுந்தரம் அண்ணைதான் உதவி செய்யிறார்.

சுதன் லண்டனுக்கு வந்த ஆரம்பத்திலை சுந்தரம் அண்ணனோடைதான் இருந்தான். போன மாசம் ஒரு Off licence கடையிலை (பிரதானமாக மது வகைகளையும் ஏனையவைகளையும் விற்கும் கடை) சுதனுக்கு வேலை கிடைச்சதுக்கும் அவர்தான் காரணம்.

கணக்கு முடிச்சுக் கடையை மூடி வெளியே வர இரவு 11.30 க்கு மேலாயிற்று.

சுதன் வேலை செய்யிற இடத்திலை இருந்து.சுந்தரம் அண்ணையிட்டைப் போய்ச் சேர அரை மணித்தியாலத்துக்கு மேலை வேணும். அவசர அவசரமாக நடந்தான் டாக்சி ஸ்ரேசனுக்கு.

00 00 00

நல்ல வேளை சுந்தரம் அண்ணன் இருந்தார்.

"யாரது? அட சுதனா! என்ன இந்த நேரம்? நேரம் காலம் தெரியவில்லையே உனக்கு" கரிசனையுடன் கேட்டார் சுந்தரமண்ணை.

"நேரம் காலம் பார்த்தா ஒன்றும் சரிவராதண்ணை. இண்டைக்குச் சம்பளம் எடுத்தனான். அதுதான் உங்களிட்டை வாங்கின கடனைத் தருவம் எண்டு வந்தனான்."

தங்கச்சியின்ர சாமத்தியச் சடங்கு செய்ய ஒரு இலட்சம் தேவை எண்டு அம்மா சொன்னபோது சுதனின் கையில் காசிருக்கவில்லை. சுந்தரம் அண்ணனிட்டை கடன் வேண்டித்தான் அனுப்பினான்.

"என்ன இப்ப அவசரம். ஆறுதலாத் தரலாம்தானே."

"இல்லண்ண சொன்ன நேரத்துக்குத் தந்தால்தானே இன்னுமொரு தடவை கேக்கக்க மனம் கூசாமல் கேட்கலாம்"

"நல்லாக் கதைக்கப் பழகிட்டா நீ இண்டைக்கு இஞ்சை நில்லன்"

சுந்தரம் அண்ணன் அன்பாய்க் கேட்டார்.

"இல்லண்ண ரூமிலை கண்ணனுக்குக் காய்ச்சல் தனியப் படுத்துக் கிடப்பான். நான் போக வேணும்."

சுந்தரம் அண்ணனின் பதிலுக்குக் காத்திராமல் நடந்தான் சுதன்.

00 00 00

சுதன் ரூம் வந்து சேர நடு இரவு 1.30க்கு மேலாகி இருந்தது. கண்ணன் படுத்திருந்தான். இன்னும் காய்ச்சல் சரி வரேல்லைப் போலை. அவனை எழுப்பக்கூடாது பாவம் காய்ச்சல்காரன். என்ன சாப்பிட்டானோ தெரியல்லை.

கண்ணனின் நெஞ்சில் கையை வைத்துப் பார்த்தான். காய்ச்சல் குறைந்திருந்தது.

"என்ன கண்ணன் காய்ச்சல் குறைஞ்சிருக்குப் போலை"

"பரவாயில்லை. ஆ... உன்ரை அம்மா Call எடுத்தவ. உன்னை வேலை விட்டு வந்தவுடன Call எடுக்கட்டாம். ஏதோ அவசரமாய்க் கதைக்க வேணுமாம்."

"அவசரமோ? எத்தனை மணிக்கு எடுத்தவ"

"ஏழு மணி இருக்கும். கருணா மாமிற்ரை எடுத்துச் சொன்னா வருவாவாம்".

00 00 00

கருணா மாமியின் தூக்கத்தைக் கலைத்தது ரெலிபோன் சத்தம்.

"ஹலோ... ஹலோ..."

"ஹலோ... கருணா மாமியோ?"

"ஓம்! நீங்க..."

"நான் சுதன் மாமி! லண்டனில இருந்து..."

"ஆ! சுதன் எப்படி சுக பலன்?"

"நான் நல்லா இருக்கிறன் மாமி. அம்மா எடுக்கச் சொன்னவாம். அதுதான் எடுத்தனான்."

"லைன்லை நிக்கிறீங்களோ"

"இப்ப வேணாம் மாமி. இப்பதான் வேலையாலை வந்தனான். இன்னும் இரண்டு மணித்தியாலத்திலை எடுக்கிறன். வந்து நிக்கச் சொல்லுங்கோ"

"எப்படித் தம்பி வேலையெல்லாம்? சமைச்சுத்தான் சாப்பிடுறீங்களோ?"

"எல்லாம் சரியான கஷ்டம் மாமி. ஒழுங்கான சாப்பாடு சாப்பிட்டு எவ்வளவோ நாளாச்சு."

"எண்டாலும் நீ கெட்டிக்காரன் தம்பி. இந்தச் சின்ன வயசிலை கண்ணுக்குத் தெரியாத ராச்சியம் போய் உழைக்கிறாய். உன்ரை அம்மாவுக்குக் கூட ஒரே உன்ரை கதைதான். நேற்றும் கோயிலுக்குப் போய் உன்ரை பேருக்கு அர்ச்சனை போட்டவவாம்."

"சரி மாமி வைக்கிறன். எனக்கு நித்திரை வருகுது"

00 00 00

அரை மணித்தியாலத்துக்கு முன்னமே வந்தா சுதன்ரை அம்மா. சுதன்ரை தங்கச்சியையும் அழைத்துக் கொண்டு.

"கருணா! எங்கை கண்ணன்?"

"இந்தா ரீவி கேம் விளையாடுறான். சுதனும் இருந்தானெண்டா இப்படித்தான் இருந்திருப்பான்"

"பாவம் பிள்ளை. பயத்திலை தானே அனுப்பினனான்."

'அவனை அனுப்பினதாலை நீ நல்லாத்தானே இருக்கா"

"நான் நல்லா இருக்க அவனை அனுப்பல்ல கருணா. எல்லாம் அவன்ரை நல்லதுக்குத்தான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ... ரெலிபோன் அடிக்குது. உங்களுக்குத்தான் இருக்கும். எடுத்துக் கதையுங்கோ"

"ஹலோ... ஹலோ... ஹலோ... யார் சுதனோ?"

"ஹலோ அம்மாவோ? நான் சுதன்தான் அம்மா"

"எப்படித் தம்பி நல்லா இருக்கயா? நல்லா சாப்பிட்டனியா? நல்லாச் சாப்பிடோணும். உன்னை நினைச்சுத்தான் எனக்குக் கவலை"

"ஏனம்மா இப்ப அழுறீங்கள். லண்டனிலை இல்லாத சாப்பாடா! நீங்க கவலைப்படாதேங்கோ. ஆ.. எப்படியம்மா தங்கச்சியின்ரை சாமத்தியச் சடங்கு?"

"நல்லா வடிவாச் செய்தனான் தம்பி. நீ அனுப்பின காசிலை நகை மட்டும் ஐம்பதுக்கு வாங்கினனான். சாறி மூணும் 27000 ஆயிரம் பிடிச்சுச்சு. சாப்பாட்டுக்குக் காசு காணாம பவானி அன்ரிஈர ஒரு ஐம்பது வாங்கினனான். நீ அனுப்பின உடனே தருவன் என்று."

**எடுத்த சம்பளத்தைப் போன தடவை வாங்கின கடனைக் கொடுத்து முடிக்க திரும்பவும் காசு தேவையெண்டால் எங்கு போறது.**

"எப்ப கொடுக்கோணும்"

"அவவும் ஏதோ தேவைக்கு வச்சிருந்தவையாம். இரண்டு கிழமையில தரச்சொல்லித்தான் தந்தவ."

**இடி விழுந்தது போலிருந்தது சுதனுக்கு.**

"அம்மா உடன அனுப்புறதெண்டால் யாரிட்டையும் கடன் வாங்கித்தான் அனுப்போணும். கொஞ்சம் பொறுக்கச் சொல்லுங்கோ. வாற மாசம் சம்பளத்திலை அனுப்பலாம்"

"நீ உடன அனுப்புவாய் எண்ட நம்பிக்கையிலைதான் தந்தவ. இப்ப பொறுக்கச் சொன்னா?"

"சரி பார்ப்பம்"

"தம்பி காசு அனுப்போணும் எண்டு ஓவர்ரைம் அது இதெண்டு செய்து உடம்பைக் கெடுத்திடாத"

**சிரிப்புத்தான் வந்தது சுதனுக்கு. அவன் லண்டனுக்கு வந்ததிலையிருந்து 'நல்லாச் சாப்பிடு, நல்லாத் தூங்கு, ஓவர் ரைம் செய்து உடம்பைக் கெடுக்காத' அம்மா சொல்லி அவன் கேட்டுப் புளிச்சுப் போயிற்று.**

"அம்மா! தங்கச்சியின்ரை சாமத்தியச் சடங்கை வீடியோ எடுத்தனீங்களோ?"

"ஓம் தம்பி! உனக்கு அனுப்போணும் எண்டுதான் எடுத்தனான். ஊருக்கை இது மாதிரி ஒருத்தரும் சிறப்பாச் செய்யேல்லை எண்டு வந்த ஆக்கள் கதைச்சாங்க. நீ இல்லை எண்டுதான் எனக்குக் கவலை"

**நானும் அங்கை நிண்டிருந்தா நீங்களோ அல்லது அப்பாவோ ஊருக்குள்ள சிறப்பா எங்கை செய்திருக்கப் போறியள்?**

அம்மாவிடம் கேட்கவேணும் போலை இருந்தது சுதனுக்கு.

"சரி அம்மா! தங்கச்சி வந்தவளா?"

"இந்தா நிக்கிறாள். கதை"

"அண்ணா! எப்படி இருக்கிறா? தெளிஞ்சு இருக்கையோ? வடிவாய் இருக்கயோ? சாப்பாடு எல்லாம் எப்பிடி அண்ணா? நல்லா சாப்பிடுங்கோ. அம்மாவுக்கு உங்களைப் பத்தின ஒரே கவலை."

"தம்பி எங்க? அவன் வரேல்லையா?"

"அவன் வரேல்ல விளையாடுறான். தனக்கு ஒரு புதுச் சைக்கிள் வாங்க காசனுப்பட்டாம். எனக்கும் ஒது புதுச் சைக்கிள் வாங்கோணும் அண்ணா"

"இரண்டு சைக்கிளுக்கும் எவ்வளவு வரும்?"

"இரண்டுக்கும் பதினையாயிரம் வேணும் போல. கட்டாயம் அனுப்போணும். அம்மாட்டைக் கொடுக்கிறன், கதையுங்கோ அண்ணா"

"தம்பி! அப்பா உன்னோடை கதைக்கேலாதாம் எண்டு மனவருத்தப்பட்டுக் கொண்டு இருக்கார். சின்னப் புள்ள உழைச்சனுப்புற காசிலை சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறனெண்டு சொல்லிச் சொல்லி ஒரே கவலைப்படுவார்"

**அவர் கவலைப்படுறவரா இருந்தா நான் வந்த இவ்வளவு காலத்துக்கு ரெலிபோனிலை கதையாட்டியும் ஒரு கடிதமாவது எழுதி இருப்பார். ஒரு *birthday card,* ஒரு *newyear card?* சீ! எல்லாம் பொய்.**

மீண்டும் மனசு உளைச்சல் எடுத்தது சுதனுக்கு.

"அம்மா! அவரைக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லுங்கோ"

"ஆ! தம்பி, சொல்ல வந்ததை மறந்து போனன். நம்மட புஸ்பம் அன்ரி மெயின் றோட்டிலை இருக்கிற வளவு விக்கப் போறாவாம். நாலு லட்சம் கேக்கிறா. ரெண்டு தடவையில தரட்டாம். நீ இருக்கிற நம்பிக்கையில ஓம் எண்டு சொல்லிற்றன்."

"அம்மா...!"

அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் கத்தினான் சுதன்.

"என்ன தம்பி. விருப்பமில்லாட்டி விடு. ஒரு காலம் நீ இங்கை வந்தா ஒரு கடையைக் கட்டலாம் எண்டு நினைச்சுத்தான் ஓம் எண்டனான்"

**நான் எப்படி அம்மா அங்கை வரேலும். தங்கச்சியின்ரை சாமத்தியச் சடங்கிற்கே இவ்வளவு செலவு. இனி அவளிட கலியாணம், தம்பியின்ரை படிப்பு எல்லாத்துக்கும் நான் தானே. சின்னப் பெடியன்ர உழைப்பில இதெல்லாம் செய்ய அப்பா கவலைப்பட்டாலும் நான்தானே செய்யவேணும்.**

வேதனை தொண்டையை அடைத்தது சுதனுக்கு. யாரிடம் சொல்வது?

"இல்லம்மா நான் . எப்பிடி எண்டாலும் அனுப்புவன்"

"தம்பி ஒண்டாய் அனுப்புறது கஷ்டம் என்றால் கொஞ்சம் கொஞ்சமாய் அனுப்பு. இப்ப ஒரு இரண்டரை அனுப்பினா வளவுக்குக் குடுத்துப்போட்டு பவானி அன்ரியின்ரை கடனும் குடுக்கலாம்".

"தங்கச்சி, தம்பிக்கு சைக்கிள்?"

"ஓ! அதுகளும் கவலைப்படுங்கள்தான். நீ காசில்லை எண்டா, அதுதான் பிறகு அனுப்பட்டும் எண்டு நினைச்சனான்"

இல்லம்மா! நான் எப்படியெண்டாலும் அனுப்புறன். அதுகளுக்கு சைக்கிளை வாங்கிக் கொடுங்கோ. காசு கிடைச்சதும் கடிதம் போடுங்கோ"

"ஓம் தம்பி! கட்டாயம் போடுவன். ஆரும் கிட்டடியிலை வந்தா தங்கச்சியின்ரை வீடியோக் கொப்பியையும் கொடுத்தனுப்புறன்."

"ஓமம்மா! அனுப்புங்க. பார்க்க ஆசையாய் இருக்கு"

"தம்பி! நல்லா சாப்பிடு! உடம்பப் பாத்துக் கொள்! உன்னை நினைச்சாத்தான் கவலையாய் இருக்கு"

"அம்மா நீங்க கவலைப்பட வேணாம். எனக்கொரு கஷ்டமும் இல்லை. எல்லோரையும் கேட்ட எண்டு சொல்லுங்கோ அம்மா. வைக்கிறன்."

நேற்றெடுத்த சம்பளத்தின் மீதி சாப்பாட்டுக்கும் room வாடகைக்கும் தான் போதுமானதாக இருந்தது. அம்மாவுக்குக் காசனுப்ப கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. இண்டைக்கு வேலைக்குப் போக முதல் சுந்தரம் அண்ணையிட்டைப் போகவேணும்.

- நன்றி : உயிர்நிழல்



**பொய்முகங்கள்**

எல்லா இடத்திலும்
பொய் சொல்ல
வேண்டியிருக்கிறது
கண்ணாடியில்
சிரிக்கும் பொழுதும் கூட.
- சல்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்று எமது பல்வேறு தேவைகளை இலகுவில் பூர்த்தி செய்யும் ஒன்றாக 'கார்ட்'கள் வந்துவிட்டன. அன்றன்றைய தேவைகள் அனைத்தையும் சிரமமின்றி முடிப்பதற்கு இந்த 'கார்ட்'கள் பெரிதும் உதவுகின்றன.

'கார்ட்' என்பது இன்று பணத்துக்கு பதிலியாக மாறிவிட்டது. நம் கையில் கார்ட் ஒன்றை வைத்திருப்பது பணத்தை வைத்திருப்பதாகவே ஆகிறது. முன்னைய காலத்தைப் போல நாம் பணத்தை அள்ளிக் கொண்டு 'சொப்பிங்' போக வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக அதே பணத்தின் பெறுமதியான கார்ட்டை எடுத்துச் சென்றால் மட்டும் போதும்.

உள்ளூர்/வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்களை எடுப்பதற்கும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கும், தேவைப்படின் வைத்தியசாலைச் செலவுக்கும், வேறு பணத்தேவைகளுக்கும் இன்று கையில் ஒரு 'கார்ட்' வைத்திருந்தால் போதும்.

முன்னைய காலத்தில் எம்மத்தியில் உலாவந்த கார்ட்கள் கூப்பன் கார்ட்களாகவும் சீசன் கார்ட்களாகவுமே இருந்தன.

கார்ட் முறையொன்று சுமார் 12 வருடங்களுக்கு முன்பிருந்தே ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலாக 1992இல் இலங்கைக்கு கார்ட் அறிமுகப்படுத்தப்பட்டது. நகரில் உள்ளவர்கள் மட்டுமன்றி இன்று கிராமப்புறத்திலுள்ளவர்களும் கார்ட் பாவிக்குமளவுக்கு இது மக்கள் மத்தியில் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

இப்பொழுது சந்தையில் சுமார் 25 வகையான கார்ட் வகைகள் புழக்கத்தில் உள்ளன. இவை ஒன்றுக்கொன்று வித்தியாசமான நிறத்தையும், தன்மையையும் கொண்டிருக்கின்றன.

தொலைபேசி அழைப்புகளுக்கு எடுக்கும் கார்ட்களாக 'பேபோன்' கார்ட், மெட்ரோ கார்ட், சுப்பர் கார்ட், செல் கார்ட், டயலொக் கிட் கார்ட், புதிதாக வந்த ட்ரை டெல் கார்ட் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவை ஒவ்வொரு கார்டிலும் பல்வேறு வகையான கண்ணைக் கவரும் காட்சிகளும், படங்களும் பொறிக்கப்பட்டிருக்கும். தொலைபேசி அழைப்புக் கார்ட்களில் நம் மத்தியில் முதலாவதாக வந்த கார்ட் 'பேபோன்' கார்ட் ஆகும்.

*Coins* தொலைபேசிக்கென எல்லோராலும் சில்லறைக் காசு தூக்கிக் கொண்டு அலைய முடியாது. இந்நிலையைப் பூர்த்தி செய்வதற்காகவே 'பேபோன் கார்ட்' அறிமுகப்படுத்தப்பட்டதாக அதன் உயர் அதிகாரிகளுள் ஒருவரான பர்னாட் ரொட்ரிகோ கூறினார். தவிரவும், *Coins* தொலைபேசிப் பெட்டிகளில் சர்வதேச அழைப்புக்களை எடுக்க முடியாதுள்ளது.

ஆனால் கார்ட்டினால் எல்லா தொலைபேசிகளையும் தொடர்புபடுத்த முடியும். 100 ரூபா தொடக்கம் 600 வரையுள்ள பெறுமதிக்கு இதன் மூலம் அழைப்புக்களை எடுக்க முடியும். இதன் விசேடம் என்னவென்றால் தமது கார்ட் பெறுமதி முடியும் தறுவாயில் பொத்தான் ஒன்றை அழுத்தி புதிய கார்ட்டை டெலிபோன் அறையினுள் புகுத்தினால் புதிய கார்ட்டின் பெறுமதி பழைய கார்ட்டினுள் சேர்ந்து விடும். இது செல்கார்ட், டயலொக் கார்ட் போன்ற தொலைபேசிகளுக்கும் பொருந்தும்.

சுப்பர் கார்ட்டினை தொலைபேசிக் கூண்டினுள் செலுத்த வேண்டியதில்லை. மாறாக அதில் மூடித் தரப்பட்டுள்ள இலக்கத்தை அழுத்தி எந்தத் தொலைபேசியிலும் எப்படியான தொடர்பையும் ஏற்படுத்தலாம்.

மெட்ரோ கார்ட் வகையும் பேபோன் போன்றதொன்றே. ஆனாலும் இந்தக் கார்ட்களில் நினைவுப் பகுதியொன்று இருக்கும். இதனால் கார்ட் சேதமடைந்தாலும் நினைவுப்பகுதியின் உதவியால் அழைப்பு எடுக்க முடியும்.

இன்று வங்கிச் சேவையில் கார்ட் இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது. அநேகமான வங்கிகளில் கார்ட் சென்டர் இப்பொழுது சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. 24 மணி நேர வங்கிச் சேவையை இந்தக் கார்ட்கள் பூர்த்தி செய்கின்றன.

எந்த வங்கியிலாவது கிரடிட் கார்ட் ஒன்று இருக்குமானால் அதன் மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்யவும், பணம் பெறவும், பணத்தை இன்னொருவரின் கணக்கின் பெயருக்கு மாற்ற, மீதியைப் பார்க்க முடியும்.

உலகம் மிக வேகமாக முன்னேறிச் செல்கிறது. இதற்கேற்றாற்போல் வங்கித் தேவையும் மாறவேண்டியுள்ளது. பணப்பரிமாற்றலில் ஏற்படக்கூடிய பல்வேறு சிக்கல்களை நிவர்த்தி செய்யவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரடிட் கார்ட் அறிமுகப்படுத்தப்பட்டதாக இலங்கை வங்கியின் உப தலைவர் கூறுகிறார்.

# உலகைக் கைக்குள் கொண்டு வந்த கார்ட்




இலங்கையில் முதன் முதலாக 1989 இலேயே கிரடிட் கார்ட் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை வங்கி ஏனைய International நிறுவனத்தின் உதவியுடன் இரண்டு வகையான கார்ட்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. சீபேங்க் வீஸா இன்டர் நெஷனல், சீபேங்க் மாஸ்டர் இன்டர் நெஷனல் என்பவையே அவை.

மக்கள் வங்கி பாவிக்கும் கிரடிட் கார்ட், பீபிள்ஸ் கார்ட் வீஸா இன்டர்நெஷனல், பீபிள்ஸ் கோல்ட், பீபிள்ஸ் பிஸ்னெஸ், பீப்பிள்ஸ் கிளஸிக் போன்றவையாகும்.

இப்படி ஹற்றன் நஷனல் வங்கி, சம்பத் வங்கி, ஹொங்கொங் வங்கி, செலான் வங்கி, அண்மையில் கொமர்ஷல் வங்கியும் சாதாரண வங்கிக் கார்ட்களையும் கிரடிட் கார்ட்களையும் வழங்குகிறது.

உண்மையில் இந்த கார்ட்கள் அவரவர் வருமானத்துக்கேற்ப வழங்கப்படுவதாகும். இவற்றைப் பெற வங்கிக் கணக்குகள் தேவையில்லை. எப்படியோ வங்கி எங்கள் மீதுள்ள நம்பிக்கையிலேயே இந்தக் கார்ட்களை எங்களுக்கு வழங்குகிறது. முன்பு எட்டாக் கனியாக இருந்த இந்தக் கார்ட்கள் இப்பொழுது எவரும் பெறக்கூடிய அளவுக்கு மாறிவிட்டது. கார்ட் பெறுவதற்கு குறைந்தபட்ச வருமானம் 10,000 ரூபா மட்டுமே.

இதனால் பல நன்மைகளும் இல்லாமலில்லை. திடீரென்று ஏற்படும் விபத்துக்களுக்கு இலவசக் காப்புறுதியும் கிடைக்கிறது. அதுமட்டுமன்றி கார்டினால் பெற்ற கடனை 50 நாட்களில் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதுவரைக்கும் எந்தவித வட்டிப் பணத்தையும் வங்கி அறவிடாது.

∴பார்மசிகள், ஹோட்டல்கள், சுப்பர் மார்க்கட், பெற்றோல் நிரப்பு நிலையம் போன்ற பலவேறு இடங்களிலும் கார்ட்களைப் பயன்படுத்தி சேவைகளையோ, பொருட்களையோ பெற முடியும். அதுமட்டுமன்றி எமது வெளிநாட்டுப் பயணத்திலும் கூடவே எடுத்துச் செல்லக்கூடிய International கார்ட்களும் எல்லா வங்கிகளிலும் விநியோகிக்கப்படுகின்றன. எமது சம்பள விபரத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ள வேண்டியதுதான்

எமக்குத் தேவையான பொருட்களை வாங்கிவிட்டு கார்ட்டை நீட்டியவுடன் அதில் இருக்கும் கையொப்பத்தை கடைக்காரார் சரிபார்த்து உறுதிப்படுத்தியவுடன் அந்தப் பொருளுக்கான பெறுமதி கார்ட்டில் கழிக்கப்பட்டு வரும். மாத இறுதியில் கடை உரிமையாளர்கள் அதை வங்கிக்கு அனுப்பி அதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இதற்காக வங்கி கடைக்காரர்களிடம் 3% பணத்தை அறவிட்டுக் கொள்கிறது.

வெளிநாடுகளில் தொழிலின்றி அலைவோரில் பலர் இந்த கிரடிட் கார்ட்களின் உதவியினால் பல வருடங்களைக் கழிக்கவும் செய்கிறார்கள் தில்லுமுல்லுகள் செய்து வங்கிகளை ஏமாற்றிப் பிழைக்கவும் செய்கிறார்கள்.

எப்படியோ இந்தக் கார்ட்கள் இன்றி பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாதென்றளவுக்கு வாழ்க்கைச் செலவின் உயர்வினால் ஏற்படும் நெருக்கடிகளை ஓரளவுக்குச் சமாளித்துக்கொண்டு போக ஒரே வழி இந்த கார்ட் ஒன்றுதான் என்று நம்பி வாழும் சில அலுவலக ஊழியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படி வங்கி அள்ளிக் கொடுத்த பணத்தை மீளச் செலுத்திக்கொள்ள முடியாமல் வங்கிக்குத் தலைமறைவாக சுற்றித் திரிபவர்கள் நம்மிடையேயும் இருக்கிறார்கள்.

ஆனால் பல கோடி ரூபாய்களை இழக்கத் தயாராகவே வங்கியும் கிரெடிட் கார்ட் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதற்காக, வங்கியிடமிருந்து பணம் பெற்றவர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை என்று அர்த்தமல்ல.

நீதியான முறையில் பணம் பரிமாற்றம் நடந்தால் கார்ட்டைப் பயன்படுத்தி பணக்காரனே ஆகிவிடலாம். எப்பயென்பதை 5 கிரெடிட் கார்ட்களை வாங்கி அதை வைத்துக் கொண்டு சிந்தித்துப் பாருங்களேன்.

**- விசித்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஜூபிடர்' நினைவுகள்...





நாற்பது ஐம்பதுகளில் பல வெற்றிப் படங்களைத் தந்த திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் ஜூபிடர் பிக்சர்ஸ். இந்த நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவர் இந்து மற்றவர் முஸ்லீம்.

எஸ். கே. மொஹிதீன், எம். சோமசுந்தரம் ஆகியோரே அந்தப் பங்குதாரர்கள். இருவரும் இணைந்து ஜூபிடர் பிக்சர்ஸ் பெயரில் பல படங்களைத் தயாரித்து பல்வேறு கலைஞர்களையும் திரையுலகில் அறிமுகப்படுத்தினார்கள்.

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, மக்கள் திலகம் எம். ஜி. ஆர். மூவரும் ஜூபிடர் நிறுவனத்தின் படங்களுக்கூடாகவே தங்கள் பிரகாசமான திரைப் பிரவேசத்தை நிகழ்த்தினார்கள். மக்களிடம் அபிமானம் பெற்ற நட்சத்திரங்களானார்கள்.


இனிமை நிறைந்த அந்தப் பழைய நினைவுகளை மீட்கிறார் ஜூபிடர் பிக்சர்ஸ் நிறுவன பங்குதாரர்களில் ஒருவரான எஸ். கே. மொகிதீன் அவர்களின் குமாரர் அபிபுல்லா. அவர் சொன்ன தகவல்களை இன்டர்நெட்டிலிருந்து எடுத்து இங்கே தருகிறோம்.

அறிஞர் அண்ணாவின் திரையுலகப் பிரவேசம் ஜூபிடர் மூலமாகத்தான் நிகழ்ந்தது. 'வேலைக்காரி', 'ஓர் இரவு' முதலிய நாடகங்கள் வெற்றி நடை போட்டுக் கொண்டிருந்த நேரம் அது! அண்ணாவின் அந்த இரு நாடகங்களையுமே திரைப்படமாக்க நாங்கள் விரும்பினோம். என் தந்தை 'வேலைக்காரி' நாடகத்தை முதலில் வாங்குவோம் என்றார். சோமசுந்தரமோ 'ஓர் இரவு' நாடகத்துக்கு முதலில் உரிமை பெற விரும்பினார். ஆனால் அவர்களுடன் சென்று நாடகம் பார்த்த நண்பர்கள் பலரும் - 'வேலைக்காரி' நாடகத்தையே பெரிதும் விரும்பினார்கள்.




1649ல் 'வேலைக்காரி' படம் ஜூபிடர் வெளியீடாக வெளிவந்தது. நாங்கள் 'ஓர் இரவு' கதையை வாங்குவதற்குள் ஏ. வி. எம். நிறுவனத்தினர் அதை வாங்கிக் கொண்டார்கள்.

1947ல் வெளிவந்த 'ராஜகுமாரி'யில்தான் கருணாநிதி முதன்முதலில் கதை, வசனம் எழுதினார். அப்புறம் 1948ல் எங்கள் 'அபிமன்யு'வுக்கு எழுதினார். எனவே கலைஞரின் கலையுலக வாழ்வுக்கும் ஆரம்ப விழா நடத்தியது ஜூபிடர் நிறுவனம்தான். அவரே பின்னர் எங்கள் 'அரசிளங்குமாரி' படத்துக்கும் எழுதினார்.



1960ல் வெளிவந்த ஜூபிடர் படமான 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' படத்தின் மூலக் கதையை எழுதியவர் மா. லட்சுமணன் என்பவர். படத்துக்குத் திரைக்கதை, வசனம் கலைஞர் கருணாநிதி.

எம். ஜி. ஆர். கதாநாயகனாக நடித்த முதல் படம் 'ராஜகுமாரி'. இது 1947ல் வெளிவந்தது. அதற்குமுன் 'சதி லீலாவதி' (1936), 'அசோக்குமார்'(1941) போன்ற படங்களில் எல்லாம் எம். ஜி. ஆர். சின்னச் சின்ன வேடங்களில்தான் தோன்றியிருக்கிறார்.

1948-ல் ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பில் வெளிவந்த 'அபிமன்யு' படத்தில் சிறிய வேடம்தான். அர்ஜுனன் வேடம்.

எம். ஜி. ஆருக்கு 'ராஜகுமாரி' படத்தில் கதாநாயகன் வேடம் தர முடிவு செய்தோம். அப்போது அதற்குப் பலத்த எதிர்ப்பிருந்தது.

அப்போது பி. யூ. சின்னப்பாவும், தியாகராஜ பாகவதரும் உச்சத்திலிருந்த நட்சத்திரங்கள். அவர்களில் யாரையாவது ஒருவரைக் கதாநாயகனாகப் போடலாம் என்றார்கள்.

ஆனால் நாங்கள் எம். ஜி. ஆரையே கதாநாயகனாகப் போட்டோம்.

அப்போது நகைச்சுவை நடிகர் டீ. ஆர். ராமச்சந்திரனின் புகழ் உச்சியிலிருந்தார். பல படங்களில் கதாநாயகனாகவும் நடித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு படத்துக்கு இருபதாயிரம் சம்பளம் அந்தக் காலத்திலேயே வாங்கினார். அவர் பெயரும் ராமச்சந்திரன் இவர் பெயரும் ராமச்சந்திரன் என்பதால் எம். ஜி. ஆர். பெயரை எம். ஜி. ராம்சந்தர் என்று போட்டோம்.

'ராஜகுமாரி' படத்தில் கதாநாயகனாக நடித்ததற்காக எம். ஜி. ஆர். பெற்ற சன்மானம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெறும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் மட்டும் தான். அப்போது அது மிகவும் பெரிய தொகை. இந்தப் படத்தில் மாலதி என்ற நடிகை கதாநாயகியாக நடித்தார். தெலுங்கு நடிகையான அவரைத் தமிழ்ப் படத்தில் நடிக்க அழைத்து வந்தது ஜுபிடர் பிக்சர்ஸ் நிறுவனம்தான். அவருக்குச் சம்பளம் எட்டாயிரம் ரூபாய். கதாநாயகனை விட கதாநாயகிக்கு அதிக சன்மானத்தை அந்தக் காலத்தில் எங்கள் நிறுவனம் வழங்கியிருந்தது. 'ராஜகுமாரி' படத்தில் வில்லனாக நடித்த பாலையாவுக்கு தரப்பட்ட சம்பளம் பத்தாயிரம் ரூபாய். பாலையா அப்போது நல்ல நட்சத்திர அந்தஸ்தில் இருந்தார்.*

*1950-ல் 'மந்திரிகுமாரி' 1954ல் 'மலைக்கள்ளன்' என எம். ஜி. ஆருக்குப் படங்கள் வெளிவரத் தொடங்கின. 'மலைக்கள்ளன்' படம் வெளியான பிறகு எம்.ஜி.ஆரின் நட்சத்திர அந்தஸ்து வெகுவாக உயர்ந்தது.*

*'மலைக்கள்ளன்' எம். எஸ். ஸ்ரீராமுலு நாயுடு தயாரித்து இயக்கிய படம். பட்சிராஜா நிறுவனத்தினர் அந்தப் படத்தைத் தயாரித்தார்கள். நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளையின் நாவலான இதை - தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சிங்களம் ஆகிய ஆறு மொழிகளில் தயாரித் தார்கள். இந்தய அரசின் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்ற முதல் தமிழ்ப் படம் இதுதான்.*

*1957ல் ஜுபிடர் நிறுவனத்தின் படமான 'மர்மயோகி' யில் எம். ஜி. ஆர். நடித்தார். அவர் இமேஜ் வளர மர்மயோகி படம் பெரிதும் துணை புரிந்தது என்றே சொல்லலாம்.*
*1953ல் வெளியான 'பணக்காரி' என்ற படத்தில் எம். ஜி. ஆர். வில்லனாக நடித்திருந்தார். அந்தப் படம் வெற்றி பெறவில்லை.*

*1956ல் அலிபாபாவும் 40 திருடர்களும், மதுரை வீரன் ஆகிய படங்கள் வெளியாகிப் பிரமாதமான வெற்றியைப் பெற்றன. 'மதுரை வீரன்' படத்தில் நடித்தபின் அவர் புகழின் உச்சியை அடைந்தார்.*

*ஆக, ஜுபிடர் நிறுவனத்தின் சரித்திரத்துள் அண்ணா, கலைஞர், எம். ஜி. ஆர். என தமிழகத்தின் மூன்று முதல்வர்களின் சரித்திரங்களும் பின்னிப் பிணைந்துள்ளன.* ●




**1994ம் ஆண்டு உலக அழகியாகத் தெரிவானவர் ஐஸ்வர்யா ராய். உலக அழகியால் வெற்றிகர நடிகையாகவும் முடியும் என்று நிரூபித்தவர். தமிழில் 'இருவர்', 'ஜீன்ஸ்', 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படங்களில் வந்து தமிழ் இதயங்களை அள்ளியவர். இந்தியில் சுபாஷ் கையின் 'தால்' படத்தில் நடித்து, ஃபிலிம் ஃபேர் விருதையும் பாராட்டுக்களையும் குவித்தவர். செப்டெம்பர் 19ம் திகதி மும்பையில் நடைபெற்ற ஒரு விழாவில் 2000ஆம் ஆண்டுக்கான சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுக் கொண்டார் ஐஸ்வர்யா ராய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த நாள் ஞாபகம்...

கடந்துபோன பழைய நினைவுகளை மீட்டுப் பார்ப்பதில் இருக்கும் சுகானுபவமே தனி. செப்டெம்பர் 18 - 24 வரை கொழும்பில் நடந்த சோழமண்டல திரைப்பட ஓவிய விழா அந்தப் பெருவாய்ப்பை நமக்கு அளித்தது. 'ராதே உனக்குக் கோப'மும் 'இன்னும் பாராமுகம் ஏனு'ம் இன்னும் பல பாடல்கள், பழைய சினிமாச் செய்திகளை கேட்கும்போது ஏற்பட்ட ஆவலுணர்ச்சிக்கு வடிகால் கிடைத்ததில் நமக்கு ஏக சந்தோஷம்..

மங்கம்மா சபதமில்லை இது எங்கம்மா சபதம் என்றெல்லாம் பேசக்கேட்டு, அதென்னது மங்கம்மா சபதம்? என்ற கேள்வி பலகாலமாக குடைந்தது. பட விழாவில் தான் விடை கிடைத்தது.

"ஜனப்பிரியமான படங்கள் தாழ்ந்த படங்கள் என்று நாம் கருதியபொழுதும் அவற்றினிடையே தொடர்பாடல் சக்தி இருக்கிறது என்பதை உணரத் தவறிவிட்டோம். மேல்நாட்டுச் சினிமாவில் காணப்படும் காட்சிகளை யதார்த்தவாதம் என்று தவறாகப் புரிந்து கொண்ட நாம், எங்கள் நாட்டுக்குரிய அமைப்பை மறந்துவிட்டோம். இந்த விழாவிலே நீங்கள் கலைத்துவமான படைப்புகளை பார்க்கப் போகிறீர்கள் என்று நாம் கருதவில்லை. ஆனால் வெசாக் தோரணம், பெரஹர, கிராமசாந்திச் சடங்குகள் போன்றவற்றைப் பார்ப்பதில் பெறும் இன்ப அனுபவத்தைப் பெறுவீர்கள் என்று எண்ணுகிறோம்" என்று தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தலைவர் திஸ்ஸ அபேசேகர பேசினார். அது உண்மையான பேச்சு.






**சிந்தாமணி (1937) :** வை. வி. ராவ் அவர்களின் தயாரிப்பு, நெறியாள்கையில் வெளியான படம். கதாநாயகி (கே. அஸ்வத்தம்மா) தாசி. அவள் பெயரே சிந்தாமணி. அவள்மீது பில்வமங்களுக்கு (எம். கே. தியாகராஜ பாகவதர்) மோகம். "என் மீது வைத்த ஆசையில் ஆயிரத்தில் ஒரு பங்கை ஆண்டவன் மீது வைத்தால் பிழைத்துக் கொள்ளலாம்" என்று உபதேசம் செய்கிறாள் சிந்தாமணி. சிருங்காரப் படம் பக்திப் படம் ஆகிறது. 'ராதே உனக்கு கோபம்', 'ஞானக்கண் ஒன்று' என்று பாபநாசம் சிவன் பாடல்களை வெளுத்துக்கட்டுகிறார் பாகவதர். பெருவெற்றி பெற்ற படம். மதுரை 'ராயல் டாக்கீஸ்' என்ற திரை அரங்கம் 'சிந்தாமணி தியேட்டர்' என்றே பெயர் மாற்றம் பெற்றதாக குறிப்பு உண்டு.



**மங்கம்மா சபதம் (1943) :** ஜெமினி தயாரிப்பாக வந்த இப் படத்தின் இயக்குனர் பிரபல வழக்கறிஞராக இருந்த ரீ. ஜீ. ராகவாச்சார்யா. 'அபூர்வ சகோதரர்கள்' பட இயக்குனரும் இவரே. நாற்பதுகளிலேயே சினிமா மொழியின் சாத்தியங்களைப் புரிந்துகொண்டு இயக்கிய திறமை தெரிகிறது. தொய்வில்லாத, இன்றும் பார்த்து ரசிக்கக் கூடிய படம். படத்தில் ரஞ்சனும் புஷ்பவல்லியும் ஜோடி.




**வேலைக்காரி (1949) :** முதல் திராவிட இயக்க பிரச்சாரப் படம் இது. சி. என். அண்ணாத்துரை எழுதி மேடைகளில் நடிக்கப்பட்டு வந்த பிரபல நாடகம். ஏ. எஸ். ஏ. சாமி இயக்கத்தில் ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பாக வெளியானபோதே பெருவெற்றி பெற்றது. கே. ஆர். ராமசாமி, எம். என். நம்பியார், ரி. எஸ். பாலையா, வி. என். ஜானகி (பின்னாளில் குறுகிய கால தமிழக முதல்வர், எம். ஜி. ஆரின் மனைவி), எம். வி. ராஜம்மா ஆகியோர் நடிகர்கள். சி. ஆர். சுப்பராமன் இசையில் 'ஓரிடந்தனிலே' என்றொரு அருமையான பாடலுக்கு நடனமாடியிருப்பவர்கள் லலிதா, பத்மினி சகோதரிகள். கே. ஆர். ராமசாமி குரலிலும் பல நல்ல பாடல்கள். சில பாடல்களுக்கு இசை எஸ். எம். சுப்பையா நாயுடு.



**மந்திரிகுமாரி (1950) :** ஜி. ராமநாதன், திருச்சி லோகநாதன், எம். ஜி. ஆர். ஆகியோரை ரசிக உள்ளங்கள் என்ற சிம்மாசனத்தில் நிரந்தரமாக அமர்த்திய படம். 'உலவும் தென்றல்', 'வாராய் நீ வாராய்' போன்ற மணியான பாடல்கள். குண்டலகேசி காப்பியத்தைத் தழுவிய கதைக்கு திரைக்கதை வசனம் மு. கருணாநிதி. கதாநாயகி மாதுரிதேவி. லலிதா, பத்மினி, ராகினி, நம்பியாரும் நடித்திருக்கிறார்கள். தயாரிப்பு மொடேர்ன் தியேட்டர்ஸ். இயக்குனர் எல்லிஸ் ஆர். டங்கன்.



**ராஜகுமாரி (1947) :** எம். ஜி. ஆரோடு இலங்கை தவமணிதேவி நடித்தது. எம். ஜி. ஆர். கதாநாயகனாக நடித்த முதல் படம். ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரிப்பு. ஏ. எஸ். ஏ. சாமியின் நெறியாள்கை.



**சந்திரலேகா (1948) :** ஜெமினி எஸ். எஸ். வாசன் தயாரித்து இயக்கிய படம். அதன் பிரம்மாண்டத்திற்காக இன்றும் பேசப்படும் படம். கிளைமாக்ஸில் வரும் முரசு நடனமும், அதில் பங்கு கொண்டிருக்கும் துணைநடிகர்களின் எண்ணிக்கையும் இன்று பார்த்தாலும் பிரமிப்பூட்டுவன. எம். கே. ராதா, ரீ. ஆர். ராஜகுமாரி, ரஞ்சன் ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.



**அபூர்வ சகோதரர்கள் (1949) :** ஜெமினி தயாரிக்க, ரீ. ஜி. ராகவாச்சார்யா இயக்கியது. அலெக்ஸாண்டர் டுமாவின் கதையைத் தழுவியது. எம். கே. ராதா, பானுமதி ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடலுக்கு வந்து கவர்ச்சி நடனம் ஆடிவிட்டுப் போவதால் மார்க்கெட் நிலை உயரும் என்ற கொள்கையைச் சேர்ந்தவர் 'ராமன் அப்துல்லா' புகழ் ஈஸ்வரிராவின் இளைய கவர்ச்சித் திலகமான ராதிகா சௌத்ரி. அதுமட்டுமல்ல, ஃபீல்டில் நல்ல பேரெடுக்கவும் இதுதான் வழி என்கிறார். மாட்டேன் என்று சொன்னால் 'பிராப்ளம்' பண்ணும் நடிகை என்று முத்திரை குத்தி விடுவார்கள்... எந்தச் சிறிய உடையைக் கொடுத்தாலும் மறுக்காமல் வாங்கி அணிந்து நடித்துக் கொடுத்துவிடுவேன் என்று குழந்தைச் சிரிப்புச் சிரிக்கிறார். இயக்குனர்களிடம் கதையைக் கேட்டால் கர்வம் பிடித்தவள் என்று கதையைக் கட்டிவிடுவார்கள்... எதற்கு வம்பு? எதைச் சொன்னாலும் செய்துவிட்டுப் போக நான் இப்போது ரெடி என்று சொல்லும் ராதிகா, அறிமுகமான 'டைம்' படம் படுதோல்வி. மீண்டும் தன்னை நிலைப்படுத்தியது 'கண்ணுபடப் போகுதையா' ஆடிய கவர்ச்சி ஆட்டம்தான் என்கிறார். 'சிம்மாசனம்' படத்தில் மந்த்ராவுடன் கவர்ச்சிப் போட்டியே ஏற்பட்டு, தாராளமயக் கொள்கையை இன்னும் விஸ்தரித்திருக்கிறார் ராதிகா. ராதிகாவுக்குப் பிடித்ததும் பின்பற்றுவதும் கரிஷ்மா கபூரை. அவர்தானே கவர்ச்சி நடிகையாகக் கலக்கிப் பின் அந்தக் குளத்தில் குணச்சித்திர வேடங்கள் என்னும் மீன் பிடித்தவர். மற்றுமொரு தகவல்: ராதிகா சௌத்ரி கல்லூரியில் படிக்கும் போது ஹொக்கி விளையாடியவராம். இப்போது ரசிகர்களுக்கு கொக்கி போட்டு விளையாடுகிறறார்.







'சிட்டிஷன்' படத்தில் முதன்முறையாக பலவித 'மேக்அப்' போட்டு நடித்துக்கொண்டிருக்கும் அஜீத், தன் நண்பர் கார்த்திக்கிற்காக அவசர அவசரமாக 'தீனா' படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார். தீனா என்பது தீனதயாள் என்ற பேயரின் சுருக்கம். அந்தப் பெயருடைய ஒரு ஆவேசமான இளைஞனின் கதையாம் தீனா. "நீங்கள் கற்பனை செய்தே பார்க்க முடியாத வித்தியாசமான ஒரு பாத்திரம்" என்கிறார் அஜீத். படத்தின் இயக்குனர் முருகதாஸ். படம் தீபாவளிக்கு வெளியாகிறது.




குஷி படத்தில் 'கட்டிப் புடிடா' பாடலுக்கு முக்கி முனகி ஆடினார் மும்தாஜ். கொஞ்சம் செக்ஸியாகத் தாராள மனதுடன் நடிக்கத் தயாராயிருக்கும் நடிகைகளுக்கு வாய்ப்பளிக்கத் தயங்குமா தங்கத் தமிழ்ப் படவுலகம்? சூட்டோடு சூடாக 'பட்ஜெட் பத்மநாபன்' படத்தில் கிளுகிளுப்பு வேடம் கிடைத்திருக்கிறது. (மேலேயுள்ள படம்).

பிளஸ் 2 படித்து முடித்த கையோடு 'மோனிஷா என் மோனாலிஷா'வுக்காக ராஜேந்தரால் தூக்கி வரப்பட்டவர் இந்த மும்தாஜ். அப்போது அம்மணியின் பெயர், அதாவது இயற்பெயர் **நக்மா**. ஐயஹோ! அந்தப் பெயரில் ஏற்கனவே ஒரு மும்பைப் புயல் இங்கே சுழன்றடித்துக் கொண்டிருந்ததால் தன் பெயரை இந்தப் புயல் மும்தாஜ் என்று மாற்றிக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற

# உணர்வு மருத்துவம்



நமது உடல் இரத்தத்தாலும், தோலாலும், தசைகளாலும், எலும்புகளாலும், நரம்புகளாலும், பல அங்கங்களோடும் அமைக்கப்பட்டுள்ளது. என்றாலும் உடலை அசைப்பதும், ஊக்கம் உண்டாக்குவதும் உணர்வு. நினைப்பதும் செயல்படுத்துவதும், உள்ளத்தை அணி செய்வதும் உணர்வுதான். உயிர் அல்ல.

இப்படிப்பட்ட உணர்வுகளின் உறைவிடம்: உச்ச உணர்வு மையங்கள். புகலிடம்: இல் வாழ்வின் உடல் உறவு. எப்படி ஒரு பெண்ணுக்கு ஆணும் ஆணுக்குப் பெண்ணும் புகலிடமோ அதே போல் உச்ச உணர்வுகளுக்கு புகலிடம் இல்வாழ்வின் உடல் உறவு.

உச்ச உணர்வு மையங்கள் உசுப்பிவிடப்பட்டால், மர்ம உணர்வுகள், பல மடங்கு பெருகிப் படர்ந்து, அங்கங்களையும் அவைகளைச் சார்ந்த அணுக்களையும் அசைத்து, உலுக்கி, உணர்வூட்டி திறம்படச் செயல்படச் செய்கின்றன.

இந்த உணர்வு மையங்களும், சில உணர்வுப் பொக்கிஷக் கிடங்குகளும் ஆணும் பெண்ணும் சேர்ந்தால்தான் பொசிட்டிவ், நெகட்டிவ் போல் செயல்பட்டு முழுமை பெற்று பலன் கிடைக்கும்.

எனவே முழுப்பலன் கிடைக்க வேண்டும் என்றால் பதறாமல், பயம் இன்றி இசைந்த மனம் கொண்டு உணர்வூட்டி, ஆணும் பெண்ணும் இணைய வேண்டும். இந்த சூழ்நிலை இல்வாழ்வில் துணைவர்கள் கொள்ளும் உடல் உறவில்தான் உருவாகும்.

மருத்துவ முறைகள் பல உண்டு. குறிப்பாக இயற்கை மருத்துவம், சித்த மருத்துவம், யுனானி மருத்துவம், ஆங்கில மருத்துவம், அக்குபஞ்சர் மருத்துவம், காந்த சக்தி மருத்துவம் போன்ற பல வகையான மருத்துவ முறைகள் உண்டு. எந்த வகையான மருத்துவ முறையாக இருந்தாலும் அது மனித உடலை நலப்படுத்த, குணப்படுத்த, சுத்தப்படுத்த, சுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடுதான் அனுசரிக்கப்படுகிறது.

உடலுக்கு உண்டாகும் தீமையைப் போக்கி, அல்லது குறைத்து, நல்லன நடக்க செய்வதுதான் மருத்துவ முறைகளின் அடிப்படைக் குறிக்கோள்.

எல்லாவகையான மருத்துவ முறைகளும் உடலிலுள்ள உணர்வுகளைக் கூட்டியோ அல்லது குறைந்துள்ள எதிர்ப்பு சக்திகளைத் தூண்டியோ செயல்படச் செய்து நலம் உண்டாக உதவுகின்றன.

எல்லாவகையான மருத்துவ முறைகளிலும் மருந்து என்று கூறப்படும் பொருளை வெளியிலிருந்து உடலுக்குள் செலுத்தி பலன் கிடைக்க முயலுகின்றனர். ஆனால் ஆண், பெண் கொள்ளும் உடலுறவு, உடலில் இயல்பாக உள்ள உணர்வுகளையும், ஆக்க, ஊக்க சக்திகளையும், அணிதிரள வைக்கிறது. உரிய முறையில் அங்கங்களைச் செயல்பட வைக்கிறது. உடல் நலனையும் உள்ளத்தையும் ஒட்டுமொத்தமாகப் பேணிக் காக்கிறது.

சில மருத்துவ முறைகளிலே வியாதிக் கிருமிகளைக் கொல்லுவதன் மூலமும் பல வகையான அறுவைச் சிகிச்சைகளின் மூலமும்தான் நலன் கிட்டுகிறது. பெரும்பாலான வியாதிகளுக்கு அந்த வியாதிகளைக் கட்டுப்படுத்தத்தான் மருந்துகள் உள்ளன. குணப்படுத்துவதற்கு இல்லை. அப்படிக் கொடுக்கப்படும் மருந்துகளும் உணர்வுகளையும், எதிர்ப்புச் சக்திகளையும் பயன்படுத்தித்தான் பலன் உண்டாக்குகின்றன.

உதாரணமாக அதிக இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கும், கட்டுப்படுத்தவும் தான் மருந்து கொடுக்கப்படுகிறது. சர்க்கரை வியாதியை எடுத்துக்கொண்டால் அதைக் கட்டுப்படுத்தத்தான் மருந்துகள் கொடுக்கப்படுகிறது, போக்குவதற்கு இல்லை. அதே போல் ஆஸ்துமாவை எடுத்துக் கொள்ளுங்கள். வியாதியின் கஷ்டத்தைக் குறைக்கவும், பின்விளைவுகளைக் குறைக்கவும்தான் மருந்து கொடுக்கப்படுகிறது. போக்குவதற்கு இல்லை.

**தன்னுள் உறைந்து தானேயாகி, வாழும் காலமெல்லாம் வழித்துணையாய் உடனிருந்து, உயிருக்கு ஒளிதரும் மைவிழி மனையாளும், அவள் கரம் கொண்ட கணவனும்... மனம் மீதுர, இருவரும் ஒருவராகி இணைந்து, கொள்ளும் உடலுறவு... அவர்தம் உள்ளத்தை வருடி, மிருதுவாக்கி, பண்படுத்தி, உடலையும் வளப்படுத்திச் செழிக்கச் செய்கிறது.**

காக்கை வலிப்பை எடுத்துக் கொள்ளுங்கள். மீண்டும் மீண்டும் வலிப்பு வராமல் தடுக்கவும், வலிப்பு வந்தால் அதை நிறுத்தவும்தான் மருந்துகள் கொடுக்கப்படுகிறது, போக்குவதற்கு அல்ல.

மனநலக் கோளாறுகளுக்கு மனதை மயக்கி, அடக்கத்தான் மருந்தே தவிர, குணப்படுத்த இல்லை. பருத்த உடலுக்கு உடையைக் குறைக்கத்தான் மருந்தே தவிர, அதிக எடை போடுவதன் காரணத்தை அகற்றவோ அல்லது அதை முற்றிலும் குணப்படுத்துவதற்கோ இல்லை. பெண்களுக்கு மாதவிலக்கு கோளாறுகளை தற்காலிகமாக சீர்படுத்தத்தான் மருந்தே தவிர குணப்படுத்தி முறைப்படுத்துவதற்கு இல்லை.

பல வியாதிகளையும் குறைக்கவும் கட்டுப்படுத்தவும்தான் மருந்துகள் உள்ளனவே தவிர குணப்படுத்தும் மருந்துகள் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாதிகளைக் குணப்படுத்த மருந்துகள் ஒவ்வொரு மருத்துவத்திலும் உண்டு. எதற்கு என்றால் கிருமிகளால் உண்டாகும் வியாதிகளைத் தடுக்கவும், குறைக்கவும், குணப்படுத்தவும்தான். இந்த மருந்துகள் உடலில் செலுத்தப்பட்டு இரத்தத்தில் கலந்து, அணுக்களை அணுகி, எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தி நலம்பெறச் செய்கிறது.

இதே செயலைத்தான் இல்வாழ்வின் உடல் உறவும் திறம்பட செவ்வனே, இன்பம் பொங்க செய்து முடித்து, உடலையும் உள்ளத்தையும் பேணிக் காக்கிறது.

சிறிது சிந்தித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பால்ய பருவத்திலிருந்து, 35 முதல் 40 வயது வரையில் நோய்கள் நாடுவதில்லை. அதற்குப் பின் நாம் நோய் வாய்ப்படுகிறோம். ஏன்?

திருமணத்தின் பின் கொள்ளும் உடல் உறவின் மகிமையால், உடலும் உள்ளமும் சில பல காலங்கள் காக்கப்படுகின்றன. அதற்குப் பின் உடல் உறவு நாளடைவில் குறைவதாலும், உறவே கொள்ளாததாலும் உணர்வுகள் தூண்டப்படுவதில்லை. அங்கங்கள் சுருதி ஏற்றப்படுவதில்லை. சுரப்பிகளும் சுரந்து வழிவது இல்லை. நுண்ணுயிர் சக்திகளும் உசுப்பப்படுவதில்லை. எனவே எதிர்ப்பு சக்திகள் திறன் குறைந்து, செயலிழந்து நலிவடைகின்றன. நோய்கள் உண்டாகின்றன.

எனவே, பாலுணர்வு இயற்கையானது. எல்லா உயிர்களுக்கும் பொதுவானது. பாலுணர்வு பாவமல்ல. பழிக்கத்தக்கதுமல்ல. பாலியல் உறவு - சொந்தத் துணையுடனான உறவு - விலக்கத்தக்கதல்ல, வெறுக்கத்தக்கதல்ல. அது விரும்பத்தக்கது. வரவேற்கத்தக்கது, என்றும் போற்றப்பட வேண்டியது.

துணையுடனான பாலியல் உறவு - உடல் உறவு - உடலுக்கும், உள்ளத்திற்கும் இதமானது, சுகமானது, அற்புத ஆற்றல்களை அள்ளித்தர வல்லது.

உடல் உறவு இறைவன் அளித்த மாமருந்து. அரிய ஔஷதம், கணவன் - மனைவிக்கிடையில் அது புனிதமானது, போற்றத்தக்கது, புத்துணர்வு தரத்தக்கது.

**உடல் உறவு**

வலியின்றி, வருத்தமின்றி, மருந்தின்றி, மாத்திரையின்றி, பத்தியமின்றி, பச்சிலை வைத்தியமின்றி, பாதாதி கேசம் பரவச உணர்ச்சியை வெள்ளமாகப் பாயவிட்டு புலன்களைச் சுத்தப்படுத்தி, புதுப்பித்து, அவற்றுக்குப் புத்தாக்கம் தந்து, உடலுக்கும் உள்ளத்திற்கும் இதம் தரும் சுகானுபவமாகும்.

அத்துடன் அது,

உடலையும் உள்ளத்தையும் பண்படுத்தி, செழுமையூட்டி, வளப்படுத்தி வாழ்வில் சுவை கூட்டுகிறது. வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகிறது. இல்லத்திலும், இல்லறத்திலும் இனிமை ஊட்டுகிறது, அமைதி தவழச் செய்கிறது. ஆனந்தம் பரவச் செய்கிறது.


உடல்நலம் காத்து, வளம் பெருக்கி, மகிழ்ச்சியைத் தரவும், பல வியாதிகளைத் தடுக்கவும், வந்தபின் கட்டுப்படுத்தவும் பெரிதும் உதவும் மிகச் சிறந்த இயற்கை மருத்துவம், உடல் உறவு. இதனால் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

உடல் உறவால் இரத்த ஓட்டம் அதிகமாவதால், பிராண வாயுவும், உணவும், உயிர் ஊட்டச் சத்துகளும் அதிகமாகக் கிடைக்கப் பெற்று உடலும், உள்ளமும் உற்சாகமூட்டப்படுகின்றன. உடல் உறவு ஆணையும் பெண்ணையும் சாந்தப்படுத்துகிறது. பதப்படுத்துகிறது. பக்குவப்படுத்துகிறது. திடப்படுத்துகிறது. சுத்தப்படுத்துகிறது. அவர்களுக்கு புத்துணர்வு ஊட்டுகிறது.

உடல் உறவால் மனச்சோர்வு, மன உளைச்சல், களைப்பு, பயம், கோபம் நீங்குகிறது. அன்பு பெருகுகிறது. பிணைப்பு இறுகுகிறது. வாழ்வு வளம் பெறுகிறது.

உடல் உறவால் ஏற்படக்கூடிய இத்தனை நன்மைகளும் வேறு எந்த மருத்துவ முறையினாலும், செயலாலும் சாதனங்களாலும் அளிக்க முடியாது.

ஒப்பற்ற உணர்வு மருத்துவம் இது. ●



## பொய்முகங்கள்

*விடுமுறையில் ஊருக்குப் போனால்*
*வரவேற்கும் பல முகங்கள்*
*முகமெங்கும் அழுக்காறு வடியும்.*

*விசாரிக்கும் நாக்குகளில்*
*எச்சிலுக்குப் பதிலாய் விஷம் ஊறும்.*

*'சாப்பாடு ஓட்டலிலா?'*
*'ஆம்' என்றால்*
*பெருமூச்சில் முகம் மறையும்.*

*'சமையல்தான்' என்றால்*
*'த்சொத்சொ'*
*ஒப்பனையில் வேறொரு முகம்*
*வெளிவரும்.*

*சம்பளம்*
*இரண்டாயிரத்திற்கு மேல் சொன்னால்*
*வயிறெரிய உடலெரிய*
*குரோதத்தில் முகம் குடியமரும்.*

*'சாப்பாட்டிற்கே போதவில்லை'*
*சந்தோஷம் முகமெங்கும்*
*படரும்*
*பரிபூரணமாய்.*

*- இரா. பொன்னாண்டான்*



**உடல் உறவு**
**வெறும் சடங்கு**
**அல்ல -**
**இயந்திரத்தன**
**மாகக் கூடி,**
**விலகிப் போக.**

**அது வெறும்**
**உடற்பசியும்**
**அல்ல -**
**கவளங்களை**
**விழுங்கி கடும்பசி**
**நீக்கி, குறட்டை**
**விடப் போக.**

**அது ஆத்மாவின்**
**அழைப்பு,**
**அந்தரங்கங்களின்**
**சங்கமம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வேட்கை (சிறுகதைத் தொகுதி)

**நீர்வை பொன்னையன்**

**விலை : ரூபா 150 பக்கங்கள் : 188**

பழம்பெரும் இடதுசாரி எழுத்தாளர் நீர்வை பொன்னையன் எழுதிய 'வேட்கை' சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. ஆசிரியரின் ஐந்தாவது சிறுகதைத் தொகுதியான இதில் மொத்தம் பத்து சிறுகதைகள் உள்ளன. இக்கதைகள் யாவும் 1995-99 காலப்பகுதியில் எழுதப்பட்டவையாகும்.

ஒரு கதை தவிர ஏனைய கதைகள் யாவும் இன்று கொழுந்து விட்டெரியும் இனப்பிரச்சினையையும் இதனால் எழுந்த கோர யுத்தத்தையும் அதன் தாக்கங்களையும் சிப்பியில் முத்துக்களாக தம்மகத்தே கொண்டுள்ளன. முற்போக்கு எழுத்தாளன் என்பவன் காலச்சக்கரத்தை முன்நோக்கிச் சுழற்றும் உழைக்கும் மக்களின் பக்கம் நின்றே இலக்கியம் படைப்பான் என்ற கோட்பாட்டின்படி தன்னுடைய முன்னைய தொகுதிக் கதைகளில் தொழிலாளர், விவசாயிகள், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இலக்கியம் படைத்த நீர்வை பொன்னையன் 'வேட்கை' கதைகளில் அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு இனத்தின் சார்பாக இலக்கியம் படைத்துள்ளார்.

தொகுதியில் தலைப்புக் கதையாக இடம் பெறும் 'வேட்கை'யில் இன விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டவர்களின் மனித உரிமை மீறல்களை, ஜனநாயக மறுப்பை அராஜகப் போக்கை மிகவும் உணர்வு பூர்வமாக வெளிக்கொணர்ந்துள்ளார். இன ஒடுக்குமுறையை மட்டுமல்ல சகல விதமான ஜனநாயக மறுப்பையும் எதிர்க்கும் இலக்கியங்கள் எதிர்காலத்தில் தமிழ் இலக்கியக் கடலில் ஒரு அலையாக பெருக்கெடுக்க உள்ளதையே 'வேட்கை' கதை கோடிகாட்டி நிற்கின்றது.

**நூல் வெளியீடு:**
**பூபாலசிங்கம் பதிப்பகம்**
**340.செட்டியார் தெரு, கொழும்பு-11**



## நாட்கள், கணங்கள்... நமது வாழ்க்கைகள்

(சிறுகதைத் தொகுதி)

**த. கலாமணி**

**விலை: 190 ரூபா பக்கங்கள் : 148**

யாழ்ப்பாணத்துக் கிராமங்களின் சாதாரண மனித வாழ்வை நுட்பமாக நோக்கி, உளவியல் கண்ணோட்டம் சேர்ந்திட கலைத்துவம் நிறைய எழுதப்பட்ட சொற்சித்திரங்கள். கதைகளின் வீச்சான செய்தியும், அவை உள்ளடக்கிய நெஞ்சைத் தொடும் வாழ்வும் வாசகனை இன்னொரு தளத்திற்கு இட்டுச் செல்கின்றன.

வாழ்வின் பன்முகப்பட்ட அவலங்களை, ஏக்கங்களை, இன்னதென்று விளக்க முடியாத நெருடல்களை, தன் குரலாகச் சொல்லாமல் அன்றாடம் நாம் காணும், நம் அருகேயுள்ள மனிதனின் இயக்கமாக, வாழ்வாக, மௌனமாக, ஓலமாக, முனகலாக ஆசிரியர் சொல்லுகிறார். ஆனால் இதனாலேயே இவை நம்பிக்கை வரட்சியான குரல்கள் என்றும் அல்ல. அவலங்களினூடாக நம்பிக்கையையும் மனிதாபிமானத்தையும் பூமாலையின் பூக்களிடையே நாரெனச் சொல்கின்றன இப்படைப்புகள்.
ஓவியர் ரமணியின் அட்டை, பேராசிரியர் சி. தில்லைநாதனின் முன்னுரை என்பன நூலுக்கு ஆழமும் பொலிவும் சேர்க்கின்றன.
**வெளியீடு: எம். டீ. குணசேன, 217, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு.**

## அக்கினி நாட்கள்

(கவிதைத் தொகுதி)

**மண்டூர்த் தேசிகன்**

**விலை : ரூபா 100**
**பக்கங்கள் : 76**




கவிஞர் மண்டூர்த் தேசிகனின் 41 கவிதைகளை உள்ளடக்கிய தொகுதியான 'அக்கினி நாட்கள்' தமிழ் கவிதைச் சரத்தில் இன்னொரு பூவாக இணைந்துள்ளது. தமிழ் கலாசார உலகின் அருமை பெருமைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் மண்டூர் கிழக்கிழக்கிலங்கையின் கலாசாரக் கருவூலங்களில் ஒன்று. அந்தச் செழுமையின் மணம் தேசிகனின் கவிதை முழுவதும் கமழுகின்றது. மலை ஏறுபவன் பிடித்துச் செல்லும் கயிற்றைப் போல தனது தந்தையான மண்டூர் கவிஞர் சோமசுந்தரம் பிள்ளையின் ஆளுமைத் தடம் தேசிகன் பிடித்துச் செல்லும் வடமாக கவிதைகள் தோறும் துலங்குவதைக் காணமுடிகிறது.
'வெறும் விடுதலை' பாடும் கவிஞராக இல்லாது இயற்கையை, கல்வியை, மனிதர்களை, சாதிக் கொடுமைகளை, சமூக சிறுமைகளை, பெரிய மனிதப் போலிகளை, ஆன்ம எழுச்சியை என்று தன்னைச் சுற்றியுள்ள, தன் வாழ்வுடன் ஸ்பரிசம் கொள்கின்ற, நேசமும் முரணும் ஆகின்ற அனைத்து விடயங்களையும் கவிஞரது கவிதைகள் தொட்டுச் செல்லும் பாங்கானது அவர் எதிர்காலத்தில் எழுவானாகப் பிரகாசிக்கப் போவதை முரசறைந்து நிற்கின்றது.
**நூல் வெளியீடு:**
**கலை இலக்கிய அவை, மண்டூர்.**

## பெண்ணே போற்றி...

(சிறுகதைத் தொகுதி)

**எஸ். நஸீறுதீன்**

**விலை : ரூபா 80**
**பக்கங்கள் : 102**



அக்கரைப்பற்றைச் சேர்ந்த இளம் எழுத்தாளர் எஸ். நஸீறுதீன் அவர்களின் இரண்டாவது வெளியீடாக 'பெண்ணே போற்றி' எனும் சிறுகதைத் தொகுதி வெளிவந்திருக்கின்றது. எட்டு சிறுகதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

பொதுவாக கதைகள் எழுதுவோர் இறுதிக் குறிப்பாக 'யாவும் கற்பனை' என்று போடத் தவறுவதில்லை. இது ஒரு சம்பிரதாயமா அல்லது தற்பாதுகாப்பா அன்றி இரண்டும் சேர்ந்ததா என்று சொல்ல முடியாது. ஆனால் நஸீறுதீன் அவர்களின் கதைகளில் வரும் நிகழ்வுகளும் மனிதர்களும் அந்தக் 'கற்பனை' யைத் தூக்கி வீசுகின்றன.

தான் வாழுகின்ற மண்ணின், தன்னைச் சூழவுள்ள மனிதர்களின் ஆசாபாசங்கள், அவலங்கள், அனுபவங்கள், எதிர்பார்ப்புக்கள், எண்ணக் கருவூலங்கள் என்பனவே அவரது கதைகளின் கருப்பொருள்கள். அந்த வகையில் அவர்களது நோக்கத்தில் வெற்றி பெற்றுள்ளார் என்பதையே ஒவ்வொரு கதையும் எடுத்து இயம்புகின்றன.
**நூல் வெளியீடு:**
**மறுமலர்ச்சி சமூக மேம்பாட்டமைப்பு, அக்கரைப்பற்று.**

**நூலாய்வு : மாணிக்கவாசகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினகரன்

திනකරන් THINAKARAN

உங்கள் தினகரன் பல்வேறு பயன்மிக்க அம்சங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

அதிகளவு செய்திகள், சமகால விடயதானங்கள், அர்த்தபுஷ்டியான கட்டுரைகள்...

தமிழ் பேசும் மக்களின் தேசியக் குரலான தினகரன் வாசகர்களுக்கு புதிய தரிசனங்களைத் தருவதில் தொடர்ந்து முன்னணியில் நிற்கின்றது.

வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்.

நிறைவுபெற்ற மனிதர்களாய் வாழ்ந்திடுவோம்.

தினகரன் நாளிதழ் எதிர்கால நல்லுறவைச் செப்பனிடும் சிற்பிகளான சிறார்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துகின்றது.

க. பொ. த. சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பாடங்களும் பரீட்சை வழிகாட்டிகளும் புலமை சார்ந்த ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

உலக நிகழ்வுகளை இனிய தமிழில் உடனுக்குடன் வாசகர்களுக்கு வழங்குகின்றது.

சகல சமயத்தினரினதும் ஆன்மீக உணர்வினை ஊட்டி வளர்க்கின்றது.

அறிவுக்கு விருந்தளிக்கும் உன்னத கட்டுரைகள் அகக்கண்களைத் திறக்கச் செய்கின்றன.

சகல லேக் ஹவுஸ் முகவர்களிடமும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது

## சந்தா விபரம்

### உள்நாட்டு சந்தா (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

### வெளிநாட்டு சந்தா (அமெரிக்க டொலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்படவேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.

**முகவரி:**

Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd,
P.o. Box 1198,
Lake House,
Colombo, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org